ஆனந்த போதினி

தொகுதி 21 மலர் 2

ஆகஸ்டு 1935

M21,N35 A15
N35.21
207698

# ஜாதகாமிருத பலவிமர்சம் என்னும்

# சோதிட கணிதாமிருத சாகரம்.

13 SEP 1935
MADRAS

*கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக.*

என்ற மூதுரை வாக்கியப்படி எவ்விதக் கல்வியாயினும் குற்றமறக் கற்றுத் தெளிவதே நம்மோர் கடமையாகும். அதுபற்றியே வேத புருஷனுடைய அங்கங்கள் ஆறினுள் நேத்திர அங்கமாகிய, சோதிட சாஸ்திரமென்பது யாவரும் எளிதிலறியும் வண்ணம் ஆரம்பசோதிடர் முதல் பஞ்சாங்க கணித ஆராய்ச்சிவரையில் தர்பிஷ்காலமுண்டாகும் விபரம், சர்வதேச அயனாம்சம் செய்யும் முறை, சாஸ்திர உபயாதிரன். வர்கோத்தமம். தசவர்க்கம் பிரித்து ரைடவு வக்கிர. ரிஜு அஸ்தமயமறிதல், துவாதசாம்ச சக்கிர நிர்ணயம், உச்சாதி கிரகசங்கியை, கேந்திர திரிகோணஸ்தானங்கள், பார்வைபலம், திரிகரண சக்கிரமறியும் விதம், மற்றும் ஜாதக கணிதத்திற்காய்வேண்டிய லக்னஸ்புடம்—நக்ஷத்திரஸ்புடம், பாவகஸ்புடம், கிரகங்களில் ஆட்சி, உச்சாட்பு நீச்சம்பகை முதலியபலம்; மண்டல சமயசார பருவம், மனோரதத்தை ஆயம் சொல்லும் மார்க்கம்; ஆரூடபாவம், விஷயத்தை யறிந்தபிறகு முடியும் முடியாதெனக் கூறும் வகை; காலசக்கிரம், அஷ்டக வர்க்கம், கோசாரம்; லக்னபாவம்; சகோதரபாவம்; மாதுருபாவம்; புத்திரபாவம்; சோர பாவம்; களத்திரபாவம்; ஆயுள்பாவம்; பிதுர் பாவம்; தொழில், லாபம், விரய முதலியவைகளும்; குருகால பலாபலன்களை விளக்கும் மார்க்கமும் பலன் முதலியவைகளையும் செவ்வனே விளக்கி சோதிட வித்வசிகாமணிகளின் வேண்டுகோளால், சாஸ்திர சம்பந்தமான குதர்க்க வார்த்தைகளை [illegible] சாஸ்திரசம்பந்தமான உண்மையைத் தெள்ளிய நடையிலெடுத்துக் காட்டும் புராதன கணிதசாஸ்திர மூலமாய் ஒவ்வோர் விஷயங்களுக்கும் சந்தேக நிவர்த்தியாக, போதுமான காரணங்களுடன் எடுத்துக்காட்டி, ஜாதகாமிருதபலவிமர்சம் என்னும் ஜாதககணிதசாகரம் என்னும் புதுப்பெயர் சூட்டி உலக பரோபகாரமாக குறைந்தவிலையில் தயார் செய்திருக்கிறோம். இந்நூலிலேயுள்ள விஷயங்களை பெரும்பாலும் சாஸ்திர சம்பந்த சந்தேகங்கள் நிவர்த்தி செய்யவும் உள்ளபடி உண்மைப் பலன் சொல்லவும் [illegible] வாரும், சோதிடர்கள் பொதுவாய் ஜனன கால லக்ஷணங்களை சந்தேகமின்றி எடுத்துக்காட்டவும் யோகாவயோகங்களும் [illegible] களும் தமிழ் வாசிக்கத் தெரிந்தவர் இப்புத்தகத்தைக் கொண்டே [illegible] செய்யத்தக்க எளியநடையிலெழுதியுள்ளதாகையால் இப்புத்தகத்தைக் கையாள்வோர் பெரிதும் பயன்படுவாரென்பதற்கு சிறிதேனுமையமில்லை.

## இப்புத்தகத்தி லடங்கிய விஷயங்கள்.

1. நட்சத்திர விவரணம்.
2. விவாக பொருத்த நக்ஷத்திரங்கள்.
3. ஜன்ம நட்சத்திர பலன்.
4. இராசி.
5. இராசிகளில் [illegible].
6. ஜன்ம லக்கின பலன்.
7. கிரகங்கள்.
8. அவைகட்குள் சத்துரு மித்திரத்து
9. தாற்கால சத்துருமித்திரத்துவம்.
10. காரகத்துவம்.
11. சுப, பாபிகள்.
12. கேந்திர திரிகோணஸ்தானங்கள்.
13. ஆட்சி, உச்சாதிகள்.
14. உச்சாதி கிரகஸ்திதி.
15. இராசிக்கு சுப, பாபி.
16. பார்வை.

17. ஸ்தான பாவங்கள்.
18. பாவ ஸ்தானங்கள்.
19. வக்கிராதி.
20. பலன்கள்.
21. சாத்வீகாதி காலங்கள்.
22. நவாம்ச சக்கிர நிர்ணயம்.
23. அந்திய நவாம்ச இராசிகள்.
24. வர்க்கோத்தமம்.
25. திரேகாண சக்கிர நிர்ணயம்.
26. ஹோரா சக்கிர நிர்ணயம்.
27. திம்சாம்ச சக்கிர நிர்ணயம்.
28. த்வாதசாம்ச சக்கிர நிர்ணயம்.
29. குளிகைகால ஸ்தான நிர்ணயம்.
30. லக்கின நிச்சயம்.
31. ஸ்திரி புருஷ லட்சணம்.
32. கால ஹோரை.
33. ஜன்ம கால லட்சணம்.
34. த்விக்கிரக யோகம்.
35. திரிக்கிரக யோகம்.
36. சுசகாதி யோகங்கள்.
37. லங்கியா யோகங்கள்.
38. தரித்திராதி யோகங்கள்.
39. ஆசிரிய யோகங்கள்.
40. விசேஷ யோகங்கள்.
41. ஊமை.
42. அந்தகத்துவம்.
43. பதிதபாவம்.
44. புஷ்டியம்சம்.
45. ஸ்திரி ஜாதகம்.
46. ஸ்திரி நடக்கை.
47. களத்திர பாவம்.
48. புத்திர பாவம்.
49. அபுத்திர பாவம்.
50. சுவீகாரம்.
51. வியாதி.
52. பாலாரிஷ்டம்.
53. அற்பாயுர்பாவம்.
54. மத்தியாயுர்பாவம்.
55. தீர்க்காயுர் பாவம்.
56. நிர்யாண விஷயம்.
57. மாரகம் கொடுப்பவர்கள்.
58. தசைகள்.
59. நட்சத்திர தசை.
60. அதன் புக்த்தியாதிகள்.
61. ஜூமாசாதிகள்.
62. நடசத்திர தசைகளின் புத்தி காலங்கள்.
63. சக்கர தசைகள்.
64. சக்காதசா காலங்களும் நாட்டும்.
65. சக்கர புத்திகள்.
66. தசாபலன்களின் விதிகள்.
67. தசாபலன்.
68. கோசாரம்.
69. அஷ்வர்க்க சந்திரபிந்து.
70. கோசர பலம்.
71. அர்தபலன் தரும் சமயம்,
72. கோசர வேதை.
73. அஷ்ட வர்க்கம்.
74. அதன் விதிகள்.
75. கண்டதிரிய விவரம். [ரம்.
76. விவாக பொருத்தங்களின் விவ
77. பொருத்தங்களின் லட்சணம்.
78. விவாகத்திற்கு தோஷங்கள்.
79. முகூர்த்தங்கள்,

இதன் விலை ரூபா 1—8—0

## ஸ்திரீ புருஷ ஜாதகத் திறவுகோல்

ஜோதிடரை விரும்பாமலே ஒவ்வொருவரும் தாம் தாமே ஜாதக கணிதம் பண்ணவும், 9 கிரகங்களை 12 இராசிகளில் அடைத்து ஆட்சி யுச்சம் இவை களாக கண்டு பலாபலன் சொல்லவும், இராசியில் 7 கிரகங்கள் ஒன்றாகக் கூடி யிருப்பினும், இரண்டு மூன்று கிரகங்கள் சேர்ந்திருப்பினும் வேறு விதமாக மாறி மாறியிருப்பினும் அவைகட்கு அனுபவமாகப் பலன் தெரிந்து சொல்ல வும் இதனால் தெரிந்துகொள்ளலாம். இதன் விலை அணு 8.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.


1190. 1935 Aug. யுவஸ்ரீ ஆவணி





Vol. 21. பொருளடக்கம் No. 2.

1. கடவுள் வணக்கம் ... 81
2. காங்கிரஸ் பிரசாரம் ... 88
3. பிரம சூத்திர ... 89
4. "கோபாலன்" ... 95
5. தமிழ்க் கூத்து, ... 97, 99
6. கோயனுகா விதிகள் ... 103
7. கம்பர் கண்ட கடவுள் ... 108
8. இந்து மதம், ஔவையார் 111, 115
9. சாங்கிய தரிசனம் ... 122
10. கண்ணம்மாள் (சிறு கதை)... 127
11. "மணிமேகலை" ஆராய்ச்சி ... 129
12. எழுத்துப் பிறப்பு ... 134
13. மாணவர் பகுதி ... 137
14. இயற்கையறிவு-செயற்கையறிவு 141
15. இராமாயணத்தின் வேதாந்த அர்த்தம் ... 145
16. விசித்திர விநோதம் ... 147
17. ஆசிரியர் குறிப்புக்கள் ... 152


OFFICE OF THE ... 13 SEP 1935

# "ஆனந்தபோதினி"

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| முன்பணம் 1-க்கு தபாற்கூலி உள்பட | இந்தியா, பர்மா, ஸிலோன் ... ... | 1—0—0 |
| | பினங், ஸிங்கபூர், தென்னாப்ரிக்கா, பசரா, மெசபொடோமியா முதலிய வெளி நாடுகளுக்கு | 2—0—0 |
| நடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை | | 0—2—0 |
| சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை விலை | | 0—3—0 |

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் பூரணமாகப் பெயரை எழுதி யனுப்பவேண்டும்.

(2) சந்தாத் தொகையை முன்னுடிச் செலுத்தியாவது அல்லது வி. பி. யில் பணம் கட்டியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ளவேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமுதல்தான் கணக்கு வைக்கப்பட்டு ஆடி மாத சஞ்சிகை முதல், பத்திரிகை அனுப்பப்படும்.

(3) சஞ்சிகையை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் 3—அணா தவிர (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரைக்கு 2-அணா வாகையால்) அந்தக் கமிஷன் 2-அணா, வி. பி. க்குத் தபால் 0-0-6. ஆக 0-5-6-அதாவது 6-அணா சேர்த்து ரூபா 1-6-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினுல் 1-2-0 மட்டுமேயாகும். ஆதலால் முன்னுடி மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக் கொள்வதே நலம். இதைக் கவனிக்கவும்.

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேரவிட்டால் அவர்கள் அம்மாதம் 15-ம் தேதி வரையில் பார்த்து அதற்கு மேல் அதே தமிழ்மாத முடிவிற்குள் அவ்விவரத்தைத் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரிவிப்போர் கிரைய மனுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்கும் புது விலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புது விலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.

(6) சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாளி யல்ல. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது அனுப்பினுலன்றி விடை யளிக்கப்பட மாட்டாது.

(7) வியாசங்களை எழுதுவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றித் தங்கள் உண்மைப் பெயருடன், மத தூஷணை, பிறர் தூஷணை, துரைத்தன விரோதம் முதலியவையின்றியும், பொது ஜனங்கள் விரும்பக்கூடியனவாகவும் எழுதவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| Life Subscription ஜீவிய சந்தா | இந்தியா, பர்மா, சிலோன் | ரூபா | 15—0—0 |
| | அன்னிய நாடுகளுக்கு | ,, | 25—0—0 |

Telephone No. 8005. Telegram :—"Ananda Bodhini," Madras.
விலாசம்:—நா. முனிசாமி முதலியார், "ஆனந்தபோதினி"
6, ஸவாமி பிள்ளை முதலி தெரு, தபால் பெட்டி நெ. 167, சென்னை.

காதலருக்கு இன்பந்தரும் நூதன நூல்
அன்பர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஆனந்த சாஸ்திரம்
வெளியாயிற்று!

# இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்

(நான்காம் பதிப்பு)

அழகிய ஜிலை கலிகோ பைண்டு செய்யப்பட்டு கண்ணைக் கவரத்தக்க அநேக ஆப்டோன் படங்களுடன்



400-பக்கங்களுக்குமேல் அழகிய பெரிய வெயிட் பேப்பரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

## இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1—8—0.

இது காதலர்க்கு இன்பந்தரும் நூதன நூல்; போகானந்தத்தை விரும்பும் யுவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆனந்த இரகசிய சாஸ்திரம். இது காதல் இன்பத்தை உள்ளவாறுணர்ந்து அனுபவித்து, இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்திப் பேரானந்தக் கடலில் மூழ்கி நற்சந்ததியைப் பெற்று, மறுமைப் பயனையும் அடைதற் கேதுவாயிருக்கும்படி நல்ல நன்மொழிகள் நிறைந்த இந்நூல் இப்போது இனிய தமிழ்நடையில் வெளிவந்திருக்கிறது. இதில் நமது பூர்வீக கொக்கோக சாஸ்திரத்தின்சாரம்

களையும், அகப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேக தத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், நாகரம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, அரபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரென்ச் முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும், இன்ப வாழ்க்கையின் இரகசிய முறைகளும், அனைத்திற்குப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், லயன் பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாங்கிப் படிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமானவர்களை மணம்புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மணக்கிரமங்களை அனுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமுற்று அறிவிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலா மென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடைய வேண்டிய இன்பத்தையும, மறுமை இன்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

டெ தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

# இல்லற இன்ப விஜயம்

"இது எங்கே யிருக்கிறது? என்ன ரூபமுடையது? இதை எப்படி உபயோகித்து ஆண் மக்களும் பெண் மக்களும் உலக இன்பத்தை அனுபவிக்க வேண்டும்?" என்று பலர் இக் கேள்விகளைக் கேட்கலாம்.

உண்மைக் காதல் ரசத்தை விரும்பும் உத்தமர்களே! ஆனந்தத்தை விரும்பும் சகோதர சகோதரிகளே! "இல்லற இன்ப விஜயம்" என்னும் இந்த இன்பரச பொக்கிஷம், ஆனந்தக் களஞ்சியம் சென்னை 'ஆனந்தபோதினி' ஆபீசில் தமிழ்நாட்டுச் சகவாசிகளின் அதிர்ஷ்டவசத்தால் விற்பனைக்குத் தயாரித்து வைக்கப்பட்டிருக்கிறது; இஃதோர் அருமையான தமிழ்ப் புத்தகம்; இதைப் படித்து ஆண் பெண்கள் அனுபவிக்கத் தக்க இன்ப வகைகள் அத்தனையும் பிரத்தியக்ஷமாகக் கண்டு பேரானந்தத்தை அடையலாம்.

இதன் விலை ரூபா 1—8—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1.

## தமிழ் மெட்டீரியா மெடிக்கா

என்னும் அருமையான வைத்திய நூல்

# MATERIA MEDICA

இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்துக் கலவை முறைகளைத் தமிழில் விளக்கமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோலன்கு விளக்குவது. இன்னின்ன நோய்க்கு இன்னின்ன விதமாக மருந்துகளைச் சேர்த்து மிக்சர் (Mixture) முதலானவை செய்து சாப்பிடவேண்டுமென்பதை இந்நூல் நன்றாகக் கூறுகின்றமையால் இதை ஓர் 'ஆபத்துக் குதவும் தோழன்' என்று அனைவரும் நம்பலாம். இது வைத்திய அனுபவம் மிகப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கூடிய வரையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்து கொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும். இதன் விலை ரூபா 8.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.

புதிய நாவல்! பெருகும் ஆவல்!!

# சற்குணவல்லி

அல்லது

# சித்தூர் இளைய ஜமீன்தாரணி.

(ஸ்ரீ. எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியது.)

இதில் தர்மசீலன் என்னும் கதாநாயகன் முதலில் ஆனந்தசுந்தரி என்னும் மாதை மணக்கிறான். இவளோ கணவனை மதியாத மாபாதகி, சிற்றின்ப ஆனந்தத்தையே மதித்து அன்னிய ஆடவருடன் அடிக்கடி உறவாடி வேசி நீலியாகி கொண்டவனை விட்டு கண்டவனுடன் திடீரென்று மறைந்து விட்டாள். தர்மசீலன் மிகவும் யோக்கியன். பிறகு அவன் மேல் காதல் கொண்ட கோமளவல்லி சற்குணவல்லி என்னும் சித்தூர் இளைய ஜமீன்தாரணியை உள்ளன்புடன் மணக்கிறான். இவளோ கற்பின் அணிகலம், பெண்களின் பொற்கொடி, பொறுமையின் பொக்கிஷம், நிறையுடைமை என்னும் வீரத் தெய்வம். கணவனைக் கடவுளென மதித்தவள். தர்மசீலன் முதல் மனைவியைக் கொன்றுவிட்டு மறு மணம் செய்துகொண்டான் என்னும் அபாண்டமான பழி, சந்தர்ப்ப சாக்ஷியங்களால் அவனைப் பலவித பரிசோதனைகளும், ஆபத்துகளுக்கும் உட்படுத்திற்று. இருந்தாலும் சற்குணவல்லி அவன் மீது வைத்த பிரியம் மாறவில்லை. கடைசியில் ஆனந்தசுந்தரி திடீரென்று ஒரு நாள் தோன்றி தன் நடக்கைக்குத் தக்க தண்டனையைத் தானே ஏற்று தன் கணவன் மீது சுமத்தப்பட்ட வீண் பழியை விலக்கி, ஆவி நீத்தாள். இதில் இருவித மாதர் நடத்தை விளக்கப்பட்டிருப்பதோடு பலவித நீதிகள் தெள்ளிய எளிய இனிய நடையில் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தும்படி எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் இதைப் படித்து இருமைப் பயனைத் தேடி இன்புறுவார்களாக.

இதன் விலை ரூபா 1—8—0.

# கைவல்ய நவநீத வசனம்.

ஸ்ரீமான் தூாணி-துப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருளைத் தழுவிப் பல மகான்கள் பல நூல்களை இயற்றி யிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இதன் நடை செய்யுளாகவும் மிகவும் கடினமாயிருப்பதால் எவரும் எளிதில் வாசித்துணரும்படி இதை வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனுல் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம். விலை ரூபா 1—8—0.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஆசிரியரின்றி ஆங்கிலத்தை
தெரிந்துகொள்ளும்

# ஆனந்த ஆங்கில பாஷா போதினி.

(நான்காம் பதிப்பு) விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூ. 1—8—0.

எம். ஏ., எல். டி. பட்டம் பெற்ற ஆங்கில போதகாசிரியராகிய திருவாளர் எம். ஷண்முகசுந்தர முதலியாரவர்களால் இயற்றப்பெற்ற உயர்ந்த திருத்தங்களோடும், சிறந்த அமைப்புகளோடும், நிறைந்த போதனைகளோடும் இப்பதிப்பு வெளிவந்திருக்கிறது.

800-பக்கங்களுக்குமேல் திக்கு காகிதத்தில் அச்சிடப்பட்டு சீமை காலிகோ பைண்டு செய்யப்பட்டது.

நற்பல கதைகளும், பாரதக் கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திர சுருக்கமும் அடங்கியது. அவற்றிற்குப் பொருத்தமான அழகிற் சிறந்த 16-ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இக்காலத்தில் இங்கிலீஷ் இராஜ பாஷையாயிருப்பதால் அதை எல்லோ ரும் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாயிருக்கின்றது. அப்படிப் படிக் காத சிலர், பல சங்கடங்களை அடைகின்றனர். ஆதலின், அத்தகையினர் கற்றுக்கொள்வதற் குதவியாயிருக்கும்படி ஆங்கில பாஷையைத் தமிழ் மக்களுக்கு எளிதிற் போதிக்கும் அரிய போதனாமுறை நூலாகிய இது பலர் வேண்டு கோளுக்கிணங்க வெளிப்படுத்தப் பெற்றிருக் கின்றது.




இதனைச் சிரத்தையுடன் படிப்பவர் பணச் செலவில்லாமலும், வேறெவ்விதக் கஷ்டமில்லா மலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும் படிக்க வும் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். ஆயிரக் கணக்கான பணச் செலவு செய்து 10 வருஷம் படிப்பதனால் எவ்வளவு ஆங்கில தேர்ச்சி யுண் டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40-நாளில் இப் புத்தகத்தின் உதவி யைக்கொண்டு அடைந்து, ஆங்கிலத்தை அதி விரைவில் படித்துக்கொள்ளலாம். மனிதர் தாமே சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளத் தக்க மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாக அமைக்கப் பெற்றிருக்கின்றன.

இதில் இதுவரை வெளிவராத நூதன பாடமுறைகளெல்லாம் வெளி யிடப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு ரூபா முதல் 10 ஆயிரம் ரூபாவரை சம்பளப்பட்டிக் கணக்கு, வட்டிக்கணக்கு, ஒவ்வொரு தேசத்திலும் எந்தநேர வித்தியாசம், அன்னிய தேச நாணய மதிப்பு முதலியனவெல்லாம் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

மேற்படி தேவுங்கு பதிப்பு விலை ரூபா 2.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்

ஔவையார் அருளிச்செய்த
பெட்டகம்.

புதிதாய் அச்சிடப்பட்டு வெளிவந்துவிட்டது. விலை அணா 8.

# கற்கோட்டை

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பட்டது.

இந்த அற்புதமான நாவல் ஏற்கனவே நமது பத்திரிகையில் தொடர்ச்சியாய் பிரசுரிக்கப் பட்டு வந்ததாகும். இதன் விசேஷத்தையறிந்து நமது சந்தாநேயர் களில் அநேகர் இதைப் புத்தகமாய் முடித்துத்தர வேண்டுமென்று பன்முறை கேட்டுக் கொண்டபடியால் இது வெளியிடப் பட்டது. ஸ்ரீமான் முதலியாரவர் களுடைய நாவல்களை வாசித்துள்ள நம் தமிழ நாட்டார்க்கு இந்நாவலின் சுவையையும் அழகிய கதைப் போக்கையும் நாம் எடுத்துக் காட்டவேண்டி யது அநாவசியம் என்றே நினைக்கின்றோம். அவர் எழுதிய நாவல்களுள் இதுவே தலை சிறந்ததாகும். இதன் விசேஷ அம்சங்களைச் சுருக்கமாய்க் கீழே குறிப்பிடுகின்றோம்.

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்துகொள்வதோடு முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இது சரித்திர சம்பந்தமான நாவல் எனலாம். இதில் தேசப்ரஷ்டமடைந்த சில உயர்குல மகுட வர்த்தனர்கள் தலை மறைந்து வசிக்கும்போது, நெஞ்சு திடுக்கிடும் விபரீ தங்களில் சிக்கிக் கொள்வதும், அவற்றினின்றும் தப்பித்துக்கொள்ள அவர்கள் செய்யும் வீர தீர சாமர்த்தியச் செயல்களும் சொல்வொணா வியப் பையும் சோகத்தையும் வீரரசத்தையும் ஊட்டும். சில ஸ்திரீகளின் அற்புத நடக்கைகளும் துணிகரமான தீரச் செயல்களும், தம் காதலரிடத்தில் மெய்க் காதல் கொண்ட உத்தம ஸ்திரீகள் தம் காதலர் பொருட்டாய் எவ்வளவு அபா யங்களில் ஆடவருக்குச் சமமாய் நடந்து கொள்ளச் சக்தியுடையவர்களாயிருக் கிறார்களென்பதை நன்கு விளக்கும். இக் கதையிலுள்ள முக்கிய விசேஷம் யாதெனில், இதிலுள்ள கதா பாத்திரங்களில் ஒவ்வொருவருடைய நடக்கைகளும் அவற்றின் பயன்களும் மானிடர்க்கு இன்றியமையாததான ஒவ்வொரு நீதியை அத்தாட்சியோடு புகட்டுகின்றன.

இது தெளிவான இனிய நடையில், யாவரும் நாம் உணரவேண்டிய முக்கிய விஷயங்களையெல்லாம் விளக்கிக் காட்டி எழுதப்பட்டிருக்கிறது. இதில் நூலாசிரியர் திருவுருவப் படமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

## இதன் விலை ரூபா 2—0—0.

"ஆனந்தபோதினி" சந்தாதாரர்களுக்கு

## விலை ரூபா 1—8—0.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

## துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பெற்ற எமது சொந்த பிரசுரப் பாடசாலை புத்தகங்கள்.

### பாடப் புத்தகங்களின் விவரம்.

| | | அ. | பை. |
|---|---|---|---|
| 1-ம் வகுப்பு மாணவர் தமிழ் பாலபாடம் | (1-ம் புத்தகம்) | 2 | 6 |
| 2-ம் வகுப்பு மாணவர் தமிழ் வாசகம் | (2-ம் புத்தகம்) | 3 | 0 |
| 3-ம் வகுப்பு ஷை | (3-ம் புத்தகம்) | 4 | 0 |
| 4-ம் வகுப்பு ஷை | (4-ம் புத்தகம்) | 5 | 0 |
| 5-ம் வகுப்பு ஷை | (5-ம் புத்தகம்) | 6 | 0 |
| 6-ம் வகுப்பு ஷை | (6-ம் புத்தகம்) | 7 | 0 |
| 7-ம் வகுப்பு ஷை | (7-ம் புத்தகம்) | 8 | 0 |
| 5-ம் வகுப்பு இளைஞர் இந்திய சரித்திரக் கதைகள் | | 4 | 0 |
| 5-ம் வகுப்பு இலக்கிய இலகு போதம் | | 3 | 0 |
| சிறுவர் துரைத்தன முறைகள் | (1-ம் பாகம்) | 5 | 0 |
| சிறுவர் துரைத்தன முறைகள் | (2-ம் பாகம்) | 6 | 0 |
| செய்யுட்பாடத்திரட்டு | | 4 | 0 |

### உப பாடமாக வைப்பதற்குரிய புத்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சதானந்தர் | 1 | 4 |
| ஜீவகன் | 1 | 0 |
| கர்ணன் சரிதை | 0 | 12 |
| ஸ்ரீ பீஷ்மவிஜயம் | 0 | 10 |
| வீரத்தன்மையுள்ள ஹிந்து மாது சிரோமணிகள் | 0 | 10 |
| கீர்த்திசிங்கன் | 0 | 8 |
| அரிச்சந்திரன் சரிதை | 0 | 8 |
| சகோதர வாஞ்சை | 0 | 7 |
| நீலக்கொடி | 0 | 5 |
| மணவாளன் | 0 | 3 |
| பரசுராமன் | 0 | 3 |
| ஸ்ரீ கிருஷ்ணன் தூது | 0 | 8 |
| தசாவதார மகிமை | 0 | 6 |
| சிசுபாலன் | 0 | 8 |
| சண்டோபாக்கியானம் | 0 | 6 |
| அங்கதன் | 0 | 4 |
| மங்களேசுவரன் | 0 | 6 |
| சத்திய வசனன் | 0 | 4 |
| சாது மந்திரி கதை | 0 | 4 |
| விமலன் or விதியின் வெற்றி | 0 | 4 |
| சங்ககாலத்துப் புலவர்கள் அல்லது பண்டைத் தமிழ்ப் புலவர் மாண்பு | 0 | 10 |
| கண்ணபிரான் | 0 | 4 |
| உதயணன் | 0 | 6 |
| ஸ்ரீ பாலன் | 0 | 8 |
| தசக்கிரீவன் | 0 | 14 |
| போஜ சரித்திரம் | 0 | 5 |
| லார்ட் கிளைவ் | 0 | 12 |
| மூப்பெருந்தாசர் | 0 | 10 |
| சீமந்தனி | 0 | 8 |
| தக்கன் | 0 | 6 |
| ரிப்பன் பிரபு | 0 | 10 |
| மாதர் நீதிமஞ்சரி | 0 | 6 |
| பாரத வீரர்கள் | 0 | 8 |
| நான்கு கோடி அல்லது நான்கு கடமைகள் | 0 | 4 |
| நரிவிருத்தம் மூலமும்உரையும் | 0 | 4 |
| கண்ணகி | 0 | 10 |
| விஜயதிவிட்டர் | 0 | 12 |
| கருணாகரரும் சத்தியசீலரும் | 0 | 8 |

**ஆனந்தபோதினி ஆபீஸ்,**
**தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**


ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)


தொகுதி 21 | யுவ௵ ஆவணிமீ கஉ | 1935௵ ஆகஸ்டுமீ 17உ | பகுதி 2


## கடவுள் வணக்கம்.

சிவன்செய லாலே யாதும்
　　வருமெனத் தேறேன் நாளும்
அவர்தரு நினைவை எல்லாம்
　　அகற்றிலேன் ஆசை வெள்ளம்
கவர்ந்துகொண் டிழுப்ப வந்தக்
　　கட்டிலே அகப்பட்டு ஐயோ
பவந்தனை ஈட்டி ஈட்டிப்
　　பதைக்கின்றேன் பாவி யேனே. (1)

பாவியேன் இனியென் செய்கேன்
　　பரமனே பணிந்துன் பாதம்
சேவியேன் விழிநீர் மல்கச்
　　சிவசிவ என்று தேம்பி
ஆவியே நிறைய வந்த
　　அமுதமே என்னேன் அந்தோ
சாவிபோம் சமயத்து ஆழ்ந்து
　　சகத்திடைத் தவிக்கின் றேனே. (2)

நெறிகள் தாம்பல பலவுமாய் அந்தந்த நெறிக்காம்
செறியுந் தெய்வமும் பலபல வாகவும் செறிந்தால்
அறியுந் தன்மையின் காருணை அறிவினால் அறிந்தோர்
பிறியுந் தன்மையில் லாவகை கலக்கின்ற பெரியோய். (3)

ஆசைச் சுழற்கடலில் ஆழாமல் ஐயாநின்
நேசப் புணைத்தாள் நிறுத்தினால் ஆகாதோ. (4)

# அரும்பொருள் விளக்கம்

1. இதனால் ஆசைப்பெருக்கின் மோசத்தைக் கூறுகிறார்.

(இ-ள்.) எதுவும் சிவபெருமான் செயலால் வரும் என்று தெளியேன். எந்நாளும் அப்பிரயோசனத்தைக் கொடுக்கின்ற எண்ணங்களை யெல்லாம் ஒழித்திலேன். ஆசைப் பெருக்கானது கிரகித்துக்கொண்டு இழுக்க அந்தப் பிணிப்பிலே சிக்கி, ஐயோ! பாவத்தினைத் தேடித் தேடிப் பாவியாகிய நான் பதையாநின்றேன் என்க.

வினைவினைத்தூம் மாயாகாரியங்களை ஏற்றுச் செல்லுமாகலானும், அம் மாயா காரியங்களோ நிலையுற்று வாழுந் தன்மையுடையவையல்ல வாதலானும், முடிவில் அம்மாயா காரியங்களால் யாதொரு பயனும் இல்லையாகலானும் "அவந்தரு நினைவை" என்றனர். "ஆசைக்கோர் அளவில்லை" என இவ்வாசிரியரே குறித்திருப்பதற்கேற்ப "ஆசை வெள்ளம்" என்றனர்.

2. இதனால் சமய விவகாரங்களில் ஆழ்ந்து தவிக்கும் தன்மையை விரிக்கின்றார்.

(இ-ள்.) மேலானவனே! பாவியாகிய நான் இனிமேல் என்ன செய்வேன்? தேவரீருடைய திருவடிகளை வணங்கித் தரிசியேன். கண்களில் நீர் ததும்பச் சிவசிவ எனச் செபித்து வாடி உயிரே! பூரணமான அமிர்தமே! எனச் சொல்லித் துதியேன். ஐயோ! பாழாய்ப் போகின்ற சமயங்களில் ஆழ்ந்து உலகத்தின்கண் தளர்கின்றேன்.

திருவடியினைத் தஞ்சமென் றடைந்தவர்கட்குச் சகலமும் சித்தியாகுமாகலின் "பாதம் சேவியேன்" என்றனர். சாவி—சத்துக் கெட்டது என்ற பொருளில் வரும் ஒரு வழக்குச் சொல். சாவிபோம்—பாழான.

3. இதனால் பரம்பொருளின் உண்மையை அறிதல் அருமை என்கிறார்.

(இ-ள்.) மார்க்கங்கள் அநேகமாய் அந்த அந்த மார்க்கங்களுக்கு இணங்கிய தெய்வங்களும் அநேகமாகவும் தேவரீர் நிறைந்திருப்பின் இவ்வுலகில் தேவரீரைத் தெரிந்து கொள்ளும் தன்மையினர் யார்? விவேகத்தினால் தேவரீரைத் தெரிந்தோர் நீங்கும் வகையில்லாதபடி அவர்கள் பால் வெளிப்படுகின்ற பெரியோனே என்க.

உலகத்தின் கண் சமயங்கள் பலவும், அச் சமயங்களாற் பிரதிபாதிக்கப்படுகின்ற தெய்வங்கள் பலவுமாக இருக்கினும் அங்கங்கே இருந்து பூசை கொள்ளும் தெய்வங்களும் தேவஸ்வாமியாகிய முதல்வனுடைய அதிகார சத்தி அதிட்டிக்கப்பெற்றவர்களாயிருப்பார்கள் ஆதலின் "நெறிகள்தாம் பலவுமாய் அந்தந்த நெறிக்காம் செறியுந் தெய்வமும் பலவாகவும் செறிந்தால்" என்றனர்.

4. இதனால் இறைவனது நேசம் வேண்டும் என்று விரும்புகின்றார்.

(இ-ள்.) ஐயனே! பராபரமே! பிரபஞ்ச ஆசையாகிய சுழலினை வாய்ந்த பிறவிக்கடலில் அழுந்தாமல் விரும்புதற்குரிய உன் திருவடியாகிய மரக்கலத்தினை நானடைய நிலைநிறுத்தினால் ஆகாதோ என்க.

ஆனந்தபோதினி
யுவ வருஷம்
ஆவணி மீ 1௨

# காங்கிரஸ் பிரசாரம்

சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்ட பிறகு காங்கிரஸ் பிரசாரம் ஆமைநடை ஆகிவிட்டது என்றே கூறவேண்டும். நாட்டு மக்களின் நோக்கத்தைக் காங்கிரஸ் இப்பொழுது அவ்வளவாகக் கவரவில்லை. சத்தியாக்கிரகத்தில் மகத்தான தியாகங்களைச் செய்த வாலிபர்கள் காங்கிரஸ் நிர்மாணத் திட்டங்களில் அசிரத்தை காட்டி வருகின்றனர். இவர்களுடைய உற்சாக ஆவேசங்களை இழுக்கும் சந்தர்ப்பங்கள் இப்பொழுது இன்மையால் ஒரு விதமான அலக்ஷியமும் சோர்வும் மேலோங்கி நிற்கின்றன. காங்கிரஸ் நிர்மாணத்திட்ட வேலையுங்கூடப் பழைய வடிவத்தில் இல்லை. காந்தியடிகள் அதற்கொரு புதிய உருவத்தைக் கொடுத்திருக்கிறார். அது நிலைமையை மேலும் கடுமையாக்கிவிட்டது. காங்கிரஸ் பிரசார மந்தகதிக்கு இதுவும் ஒரு காரணம். காங்கிரஸ் அங்கீகாரம் பெற்றுக் காந்தியடிகள் மேற்கொண்டுள்ள தொண்டு அகில இந்தியக் கிராமக் கைத்தொழில் நிர்மாணமாகும். இந்தக் கிராம புனருத்தாரண இயக்கத்தில் சண்டப் பிரசண்டமாக வாதப்பிரதிவாதங்கள் நிகழ்த்தக்கூடிய புத்திக்கூர்மை படைத்தவர்கட்கோ, அரசாங்க வர்க்கம் திக்பிரமை யடைந்து தத்தளிக்கும்படியான ஆவேச அரசியல் பிரசங்கிகட்கோ இடமில்லை. முன்னர் சென்னைக் கடற்கரையிலும் ஏனைய பொது மேடைகளிலும் நம்முடைய தலைவர்கள் கிராம முன்னேற்றத்தைப் பற்றி உருக்கமான சொற்பொழிவுகளை நிகழ்த்திக் கொண்டிருந்தனர். அந்தச் சொற்பொழிவுகளை இப்பொழுது நினைத்தாலும் சிரிப்பு வருகிறது. காந்தியடிகள் கிராம முன்னேற்றத் திட்டத்தைத் தினசரி வாழ்க்கையில் தொடர்புள்ளதாகச் செய்த நாள் முதல் அநேகம் பேர் இதிலிருந்து மெல்ல நழுவத் தொடங்கிவிட்டனர்.

நவீன நாகரிகநிலை மேலோங்கி வரும் காரணத்தால் நகரவாசிகளைப் போலவே கிராமவாசிகளிடையிலும் உடல் உழைப்பால் வருந்தி வாழும் பழக்க வழக்கங்கள் சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே

வருகின்றன. குடியானவர்கள் எல்லா வகையிலும் நகரவாசிகளையே பின்பற்றிக்கொண்டிருக்கின்றனர். கிராமாந்தரங்களில் கைக்குற்று அரிசியைக் காணமுடியவில்லை. அரிசி யந்திரங்கள் கிராமங்களிலும் பரவி வருகின்றன. திருகுகல்லில் மாவரைக்கும் வழக்கமும் மாய்ந்துவிட்டது. பொட்டு நீக்கிய பருப்புத் தினுசுகளையும் மாவு வகைகளையும் கடைகளிலிருந்தே வாங்கிக் கொள்ளுகிறார்கள். வீடுகளில் பலகார பக்ஷணங்களைச் செய்து கொள்ளுவதற்குக்கூட முடிவதில்லை. காபி ஓட்டல்களுக்குப் போய் நாக்குகளைத் திருப்தி செய்து வருகிறார்கள். சிறிது தூரம் போய் வருவதற்கும் வண்டி வாகனங்கள் வேண்டும் நிலைமை ஏற்பட்டு வருகிறது. இத்தகைய சந்தர்ப்பத்தில் மகாத்மா காந்தியடிகள் வகுத்துள்ள கிராமக் கைத்தொழில் திட்டம் எவ்வாறு வரவேற்கப்படும் என்பதை நாம் விரிக்க வேண்டியதில்லை. சுகவாசத்தில் பழக்கப்பட்ட உயிரைத் துன்புறுத்த யார்தான் விரும்புவார்கள்? அந்நியத் துணிகளைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்றால் வீராவேசம் கிளம்புகிறது. முன் பின் பாராமல் வீட்டிலிருக்கும் அந்நிய நாட்டுத் துணிகளையெல்லாம் கொண்டு வந்து அடுக்கி நெருப்பு மூட்டுவதில் உற்சாகங் காட்டுவோம். கள்—சாராயக் கடைகளுக்கு முன் மறியல் செய்ய வேண்டும் என்றால் கொஞ்சம் ஆவேசம் கிளம்புகிறது. தாழ்த்தப்பட்ட மக்கட்கு ஆலயப் பிரவேச உரிமை வேண்டும்—நயமாகவோ பயமாகவோ அவ்வேலையைச் செய்ய வேண்டும் என்றால் அதற்காக வரிந்து கட்டிக் கொண்டு முன்னணியில் நிற்கப் பலர் காத்திருப்பார்கள். உப்புக்காய்ச்ச வேண்டும் என்றால் துள்ளிக் குதித்துக் கொண்டு பலர் முன் வருவார்கள். பலமான எதிர்ப்புள்ள நிலையில் இத்தகைய வேலைத்திட்டம் வகுக்கப்பட்டு ஒரு ஸ்தாபனத்தின் மூலம்—மாபெருந் தலைவர்களின் கட்டளை பிறந்தால் ஆண்பெண் அடங்கலும் கஷ்ட நஷ்டங்களை ஒரு சிறிதும் லக்ஷியம் செய்யாமல் தியாகம் செய்யக் காத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் இப்போதைய கிராமக் கைத்தொழில் முன்னேற்றத் திட்டத்தை முழு மூச்சுடன் எதிர்க்கும் கக்ஷிகள் இல்லை. உள்ளூர அரசாங்க எதிர்ப்பு இருந்த போதிலும் வெளியில் தெரியவில்லை. மற்றக் கக்ஷி எதுவும் எதிர்க்கத் துணியவில்லை—துணிந்தாலும் லக்ஷியம் செய்வார் இல்லை.

காந்தியடிகள் வகுத்துள்ள கிராமக் கைத்தொழில் திட்டத்தை நிறைவேற்றுவது என்றால் நமது சுகவாழ்க்கை முறை என்பதையே எதிர்த்துப் போராட வேண்டும் என்றுதான் அர்த்தம். நமது சோம்பேறித்தனத்தைப் போஷித்துக் கொண்டிருக்கும் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இது அவ்வளவு எளிதான காரியம் அன்று. இந்த வேலைத் திட்டத்திற்குத் தற்காலிக ஆவேசம் பயன்படாது. மக்கள் மனங்களில் பெரும் மாறுதல் ஏற்பட வேண்டும்—சீர்திருத்தம் உண்டாக வேண்டும். நமது



கிராமங்களில் குளக்கரைகளிலும் வாய்க்கால் கரைகளிலும் மல ஜலம் கழிக்கும் வழக்கத்தை நிறுத்தவோ நிறுத்தச் செய்யவோ யாரால் முடியும்? இவ்வுண்மையைக் கிராமவாசிகளே அநுபவத்தில் நன்கு உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். "வாலிபர்களே! நீங்கள் கிராமங்களுக்குச் சென்று சுயமாக மலஜல அசுத்தங்களையெல்லாம் போக்கிக் கிராம சுகாதாரத்தை நிலை நிறுத்த வேண்டும்" என்றால் வாலிபர்களுக்கு எங்கிருந்து ஊக்கமும் உற்சாகமும் பிறக்கும் என்று தெரியவில்லை. அவர்கள் இவ் விஷயத்தில் தயக்கம் காட்டுவது கண்டு ஆச்சரியம் அடைவதற்கில்லை. தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்றும் அம்சமும் இப்படித்தான் இருக்கிறது. தீண்டாமை என்பதை அறவே மறந்து விடவேண்டும். கூடை—முறம்—துடைப்பங்களைக் கூடவே எடுத்துக் கொண்டுபோய்ச் சேரிகளைப் பெருக்கிச் சுத்தம் செய்ய வேண்டும் என்றால்—இது என்ன வேலை! தங்கள் தங்கள் சொந்த வீடுகளிலுள்ள குப்பை செத்தைகளை அப்புறப்படுத்தச் சோம்பி நிற்பவர்களுக்குக் கிராமாந்திர அசுத்தங்களைப் போக்க வேண்டும்—மறைவிடங்களில் உள்ள மலங்களை வாரவேண்டும் என்றால் எவ்வாறு மனம் வரும்?

கடன் தொல்லைகளில் மாட்டிக் கொண்டிருப்பவர்களுக்கு ஒரு விமோசனம் செய்யப் புதிய சட்டம் இயற்ற வேண்டும் என்று அரசாங்கத்தாரை வற்புறுத்தல்—ஜமீன்தார்கள் தங்கள் நிலங்களை நிலம் இல்லாதவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்தல்—கிராமப் பஞ்சாயத்துகளுக்கு அதிகமான அதிகாரங்களை வழங்க வேண்டும் என்று தீவிரமான பிரசாரம் செய்தல் — மில்களிலும் ஏனைய தொழிற்சாலைகளிலும் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அதிகக் கூலி விகிதம் ஏற்படுத்த வேண்டும்-வேலை நேரத்தைக் குறைக்க வேண்டும் என்று கோரிவேலை நிறுத்தங்கட்கு ஏற்பாடு செய்தல்—ஆகிய இம்மாதிரியான காரியங்களே பொதுநலத் தொண்டு என்ற எண்ணம் மேலோங்கி நிற்கும் இக்காலத்தில் "ராட்டினத்தைச் சுற்று; உலக்கை எடுத்து நெல்லைக் குத்து; திருகுகல்லில் மாவரை; கிணற்றில் நீர் இறைத்துக் காய்கறிப் பயிர்களை உண்டாக்கு; துடைப்பங் கொண்டு தெருக்களைப் பெருக்கு; உனக்கு வேண்டிய மிதியடிகளை நீயே தயார் செய்து கொள்; சாத்தியமானவரை கால் நடைப் பிரயாணமே செய்; உனது குடும்பத்திற்கு வேண்டிய வஸ்துக்களையெல்லாம் நீயே சித்தம் செய்—வெளியூர்களை எதிர்பார்க்கும் அவசியம் இல்லாமற் செய்துகொள்—என்பன போன்ற போதனைகள் எப்படி ருசியாயிருக்கும் என்று கேட்கின்றோம். சத்தியாக்கிரகத்திலுள்ள வீராவேசமோ, சமதர்மப் பிரசாரத்திலுள்ள புரட்சித் தன்மையோ—இந்தக் கிராம புனருத்தாரண இயக்கத்தில் இல்லாமையால் காங்கிரஸ்காரர்களின் ஆர்வம் சற்றே குறையும் நிலை ஏற்பட்டது.

பம்பாய் காங்கிரஸில் நிறைவேறிய புதிய விதிகளின்படி காங்கிரஸ் சபைகளைத் திருத்தி அமைக்கத் தேர்தல்கள் நடத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதை முன்னிட்டுக் கொஞ்சம் பிரசாரம்—ஆர்ப்பாட்டம் தலைகாட்டியது எல்லாருக்கும் தெரியும். அப்பொழுது கூடப் புதிய சபைகளின் அநுகூலங்களைப் பற்றிப் பிரசாரம் நடைபெற்றதாகச் சொல்ல முடியாது. புதிய நிபந்தனைகளின்படி காங்கிரஸ் அங்கத்தினர்களின் தொகையை ஒட்டி மேல் கமிட்டிகளின் ஸ்தானங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறபடியால் ஷை ஸ்தானங்களைக் கைப்பற்றவேண்டும் என்ற ஆர்வம் படைத்தவர்கள் போதிய அங்கத்தினர்களைச் சேர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. காங்கிரஸ் அங்கத்தினர்களைச் சேர்க்கும் முறைகளில் உள்ள குறைகளைப் பற்றி இங்கே விரித்துக் கொண்டிருப்பது அநாவசியம் என்றே நினைக்கின்றோம். நிற்க,

காங்கிரஸ்காரர்கள் சட்டசபைகளைக் கைப்பற்றவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடியால் பொதுத்தேர்தல்—உபதேர்தல் காலங்களில் காங்கிரஸ் பிரசாரம் தலைதூக்கி அடங்கி வருவதையும் காண்கின்றோம். வரப்போகும் புதிய அரசியல் சீர்திருத்தத் தேர்தல்களில் மிகுந்த ஆர்ப்பாட்டங்கள் கிளம்பும் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. ஒவ்வொரு ஜில்லாவிலும் நான்கு—ஐந்து ஸ்தானங்கள் இருக்கக்கூடுமாகையால் அந்த ஸ்தானங்களைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஆசை படைத்தவர்கள் சும்மா இருக்கப் போவதில்லை. வரப்போகும் தேர்தல்களில் காங்கிரஸ்காரர்கள் வெற்றி பெறவேண்டும் என்று அபிமானிகள் எதிர் பார்ப்பதும் சகஜமே ஆகும். ஆனால் இதில் ஏற்படப்போகும் வெற்றியானது நிற்கும் அபேக்ஷகருடைய பலத்தையும் செல்வாக்கையும் பொறுத்தது என்பதைக் கூறவும் வேண்டுமோ? ஜஸ்டிஸ் கக்ஷியின் போட்டியும் பலமாக இருக்கும் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. இந்திய சட்டசபைத் தேர்தல்களிலும், சென்னை சட்டசபை உபதேர்தல்களிலும் படுதோல்வி அடைந்த ஜஸ்டிஸ் கக்ஷியினர் வரப்போகும் பொதுத் தேர்தலுக்குப் படை திரட்டிக் கொண்டிருப்பது எல்லாரும் தெரிந்த செய்தியாகும். ஆனால் ஜஸ்டிஸ் கக்ஷிக்கு உருவான திட்டமோ கொள்கையோ உறுதியாக இன்மையாலும், அக்கட்சிக்குள் போதிய கட்டுப்பாடு இன்மையாலும் அவ்வளவாக அஞ்ச வேண்டியதில்லை என்ற அபிப்பிராயம் நாட்டில் நிலவி வருகிறது.

தமிழ் நாட்டில் காங்கிரஸ்காரர்கள் ஸ்தல ஸ்தாபனங்களை—ஜில்லா போர்டு, முனிஸிபாலிடி, பஞ்சாயத்து சபைகளையெல்லாம் கைப்பற்ற வேண்டும் என்ற பேச்சும் கிளர்ச்சியும் தோன்றியிருப்பதைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சிப்பெருக்கு அடைகின்றோம். ஷை ஸ்தல ஸ்தாபனங்கள் எல்லாம் பொதுஜன நன்மைக்கே நிர்மாணிக்கப்



பட்டவை. இந்தச் சபைகள் பொதுமக்களின் வேட்கையை நிறைவேற்றி வைப்பதற்கு அநுகூலமானவைகளாக விளங்கவேண்டும். இதற்காகக் காங்கிரஸ் சிவிக் போர்டு ஏற்பட்டிருப்பதை எல்லாரும் வரவேற்க வேண்டும். இந்தப் போர்டானது ஸ்தல ஸ்தாபனங்களிலுள்ள ஊழல்களைப் போக்கி ஒழுங்கை நிலை நிறுத்தும் உத்தேசத்துடன் நிறுவப்பட்டுள்ளது. தென்னிந்தியாவிலுள்ள ஸ்தல ஸ்தாபனங்களெல்லாம் பெரும்பாலும் ஜஸ்டிஸ் கக்ஷியாரின் ஆதிக்கத்தின்கீழ் இருப்பது கண்கூடு. எனவே இவற்றில் அக் கட்சியின் சுயநலம் மேலிட்டிருப்பதில் ஆச்சரியம் இல்லை. நாட்டில் கட்டுப்பாடும் ஒழுங்கும் உள்ள கக்ஷி காங்கிரஸ் கக்ஷியே. எனவே காங்கிரஸ்காரர்கள் ஷை சபைகளைக் கைப்பற்றினால் ஒழுங்கான நிர்வாகம் நடைபெறும் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. ஸ்தல ஸ்தாபனங்களில் ஜாதிச் சண்டைகளும் கக்ஷிச் சண்டைகளும் தலை காட்டாமல் செய்யும் சக்தி காங்கிரஸ் ஒன்றுக்கே உண்டு. ஆனால் இவைகளுக்கு அபேக்ஷகர்களைப் பொறுக்கி எடுத்து நிறுத்தும் விஷயத்தில் அநுபவத்தில் அநேக சங்கடங்கள் குறுக்கிடலாம். காங்கிரஸில் சேர்ந்து சத்தியாக்கிரக இயக்கத்தில் ஈடுபட்டுத் தடியடி, சிறைத் தண்டனை போன்ற கஷ்ட நஷ்டங்களை அநுபவித்த தியாக சீலர்களே அபேக்ஷகர்களாக நிற்க வேண்டும் என்ற கண்டிப்பான விதியைக் கைக்கொள்ள முடியாது. காங்கிரஸில் சேராமலே பொதுநலத் தொண்டில் ஆர்வமுள்ளவர்களாயும், காங்கிரஸ் அபிமானிகளாயும் உள்ளவர்களையும் அபேக்ஷகர்களாக நிறுத்த ஏற்பாடுசெய்யவேண்டும். அந்த அந்த ஸ்தலங்களில் செல்வாக்குப் பெற்றுள்ளவர்களைப் புறக்கணித்து விட்டால் காங்கிரஸ் ஸ்தல ஸ்தாபனங்களையெல்லாம் முற்றிலும் கைப்பற்றுவது என்பது எதிர்பார்க்கக் கூடிய விஷயம் அன்று. இவ்வுண்மை சென்ற இந்திய சட்டசபைத் தேர்தல் காலத்திலும் நன்கு உணரப்பட்டது என்றே நினைக்கின்றோம். இந்திய சட்டசபைத் தேர்தலில் சித்தூர்த் தொகுதியில் ஸ்ரீமான் அநந்தசயனம் ஐயங்காரும், தென்னிந்திய வர்த்தகத் தொகுதியில் ஸ்ரீமான் சாமி வெங்கடாசலம் செட்டியாரும் அபேக்ஷகர்களாக நிறுத்தப்பட்டனர். வெற்றியும் பெற்றனர். இங்ஙனமே சென்னை சட்டசபை உபதேர்தல்களில் காலஞ்சென்ற டாக்டர் மல்லையா, திரிச்சி ஸ்ரீமான் ரத்தினவேல் தேவர், ஸ்ரீமான் சி. ஆர். ரெட்டி முதலியவர்கள் அபேக்ஷகர்களாக நிறுத்தப்பட்டனர். இவர்களும் வெற்றி பெற்றனர். சிதம்பரத்தில் நடைபெற்ற நகரசபைத் தேர்தலிலும் இங்ஙனமே சிலர் நின்று வெற்றி பெற்றனர். எனவே இனிமேல் ஆங்காங்கு நடக்கப்போகும் ஸ்தல ஸ்தாபனத் தேர்தலில்—ஏன்! புதிய சீர்திருத்தப் பொதுத் தேர்தல்களிலுங்கூட இத்தகைய முறையையே கடைப்பிடிக்க வேண்டும் என்று எடுத்துக்காட்ட விரும்புகின்றோம். காங்கிரஸ் சிவிக் போர்டும் பார்லிமெண்ட் போர்டும் யாரை அபேக்ஷகர்களாக நிறுத்துகின்றனவோ அவர்களை

ஆதரிக்க வேண்டியது வாக்காளர் கடமை யாகும். ஏன்? இத்தகைய வர்கள் முதலில் எந்த மனப்பான்மையோடு இருந்தாலும் அபேக்ஷகர் களாக நின்று வெற்றி பெற்ற பிறகு காங்கிரஸ் கட்டுத் திட்டங்கட்கு அடங்கி நடப்பார்கள் என்றே எதிர்பார்க்கலாம். ஒருகால் மீறுகின்ற வர்களை வெளியேற்றும் சக்தி காங்கிரஸுக்கு உண்டு என்பது எல்லா ரும் அறிந்த விஷயம். காங்கிரஸ் சிவிக் போர்டு நல்ல முற்போக்கான கொள்கைகளையும் விதிகளையும் மேற்கொண்டிருப்பதால் ஸ்தல ஸ்தாப னங்களில் இப்போதுள்ள ஊழல்களை மாற்றிப் பொதுமக்களின் வாழ்க்கை நலங்களைச் சிறந்த முறையில் கவனிக்கும் என்பதில் சிறி தும் சந்தேகம் இல்லை.

காங்கிரஸ்காரர்கள் ஸ்தல ஸ்தாபனங்களையும் சட்ட சபைகளையும் கைப்பற்றச் செய்யும் தேர்தல் பிரசாரங்களில் காங்கிரஸ் நிர்மாணத் திட்டங்களை மறந்து விடக் கூடாது என்று சுட்டிக் காட்ட விரும்பு கின்றோம். காங்கிரஸ் மகாசபையின் முதற்பெரும் நோக்கம் சட்டசபைகளையும் ஸ்தல ஸ்தாபனங்களையும் கைப்பற்றுவதோ மந்திரி பதவிகளை ஏற்பதோ அன்று என்னும் உண்மையைக் காங்கிரஸ் தலைவர்கள் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். வெளியில் நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்ற முற்படலே காங்கிரஸின் அடிப்படை நோக்கம். காந்தியடிகள் காங்கிரஸினின் றும் விலகி அகில இந்தியக் கிராமக் கைத்தொழில் முன்னேற்றத் தொண்டில் கருத்தைச் செலுத்தி வரும் நுட்பத்தை எல்லாரும் கூர்ந்து கவனித்தல் வேண்டும். சட்டசபைப் பிரவேசத்தில் அடிகளுக்கு நம்பிக்கை இல்லை. மற்றத் தலைவர்களின் வற்புறுத்தலுக் காகவே அவர் அதை ஆதரித்தார். இந்நிலையில் தேர்தல் பிரசாரகர் களின் கடமை என்ன? சட்டசபைகளுக்கும் ஸ்தல ஸ்தாபனங்களுக் கும் போகும் பிரமுகர்களின் கடமை என்ன? இவைகளுக்கு வெளி யில் நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றி வைப்பவர்களுக்கு அநுகூல மாய் ஷை ஸ்தாபனங்களை உபயோகப்படுத்த முயல்வதே அவர்க ளுடைய நீங்காக் கடமையாகும். சிறப்பாகக் காந்தியடிகள் வகுத் துள்ள அகில இந்தியக் கிராமக் கைத்தொழில் திட்டங்களை நிறை வேற்றி வைக்க எல்லாரும் முற்பட வேண்டும் என்று விரும்பு கின்றோம். இத்திட்டம் வசீகரமற்றதாயும் கருநாடகமானதாயும் இருந்தபோதிலும்—இப்போதுள்ள நாட்டு நிலைமையை உத்தேசிக் கும்போது இதைவிடச் சிறந்த திட்டம் வேறொன்று இல்லை என் பதை யாரே மறுக்கவல்லார்?

ஓம் தத் ஸத்.




## பிரம சூத்திரம்.

(சித்தூர் பண்டித-பூ. ஸ்ரீநிவாசன்)

### 5-வது தஹராதி கரணம்

14-வது சூத்திரம் அவதாரிகை:—"அதயதிதமஸ்மின் ப்ராஹ்மபுரே தஹரம் புண்டரீகம் வேஸ்ம, தஹரோஸ்மிந்நந்தர ஆகாச, ஸ்தஸ்மிந்ய தந்தந்த தர்வேஷ்டவ்யம், தத்வாவ விஜிஜ்ஞா ஸிதவ்யம்" என்னும் இவ்வாக்கியம் சாந்தோக்கிய உபநிஷத்திலுள்ளவோர் வாக்கியம். "பிரம்ம சாக்ஷாத்கார ஸ்தானமாகிய இந்த சரீரத்தில் சூக்ஷ்மகமலம் போன்ற பிரம்மஸ்தானம் (இருதய கமலம்) இருக்கிறது; அந்த ஸ்தானத்தின் மத்தியில் "தகரம்" என்னும் பெயரால் அழைக்கப்படுகிற ஒரு ஆகாச மிருக்கிறது. அந்த 'தகரம்' ஆராய்ந் தறியத்தக்கது." என்பது இதன் பொருள். இவ்வாக்கியத்தில் இதய கமலத்தில் இருப்பதாகக் கூறப்பட்டுள்ள தகராகாசம் என்னும் பதத்தால் அழைக்கப் படும் பொருள் பூதாகாசமா? ஜீவனா? அல்லது பரப்பிரஹ்மமா? என்பது ண்டு ஆராய்ச்சிக்குரிய விஷயமாம்.

அந்த தகராகாசம் பூதாகாசமே என்பது பூர்வபக்ஷிகளின் வாதம். "ஆகாசம் என்னும் பதம் பூதாகாசத்தையே குறிக்குமென்பது பிரசித்தம். 'ஆகாசத்தின் மத்தியில் வசிப்பவன்' என்று ஆகாசத்தினும் வேறாக ஒருவனை வாக்கியம் கூறுதலாலும், ஆகாசம் பூதாகாசமே என்பது பெறப்படுகின்றது" என்பது அவர்கள் காட்டும் காரணங்களாம். ஒரு வேளை 'அதற்கு, பாபமற் றிருத்தல் முதலிய குணங்கள் கூறப்பட்டிருக்கின்றனவே; அக் குணங்கள் பூதாகாசத்திற்குப் பொருந்தாவன்றோ?' என்று தோஷம் கூறலாம். அப்படி யானால், அக் குணங்கள் ஜீவனுக்குப் பொருந்துதலால், ஜீவனைக் குறிக்கின்ற தென்றாவது கொள்ளலாம். எனவே, மேற்படி சாந்தோக்கிய வாக்கியத்தில் குறிக்கப்பட்டுள்ள ஆகாசம் பூதாகாசத்தையேனும் அன்றி ஜீவனையேனும் குறிக்குமேயன்றிப் பரமாத்மாவைக் குறிக்காது" என்பர் பூர்வபக்ஷிகள். இந்த வாதம் இங்கே மறுக்கப் படுகின்றது.

### சூ-14 "தஹ்ர உத்தரேப்ய:"

பதவுரை:—உத்தரேப்ய:=உத்தர வாக்கியத்தில் கூறப்பட்டுள்ள காரணத்தினால், தஹ்ர:=தகர சப்தவாச்சியன் (பரமாத்மாவே.)

கருத்து:—"ஆகாச சொரூபியா யிருப்பவன் எவனோ அவனே இதயாகா சத்தில் இருக்கிறான். அவனிடத்து பூமி ஆகாயங்கள் பொருந்தி யிருக் கின்றன." "அந்த ஆத்மா பாபமற்றவன்; முதுமை யில்லாதவன்; மரண

மில்லாதவன்; துக்கமில்லாதவன்; பசி தாகமில்லாதவன்;" என்று உத்தர வாக்கியம் உரைப்பதால், இத் தர்மங்கள் பூதாகாசத்திற்காவது ஜீவனுக்காவது பொருந்தாமையின், தகர சப்தத்தால் அழைக்கப்படும் பொருள் பரமாத்மாவே.

15–வது சூத்திரம்:—"தகர சப்தத்தால் அழைக்கப் படுபவன் பிரம்மமே' என்பதற்கு வேறு காரணம் காட்டப்படுகின்றது.

சூ. 15. "கதி சப்தாப்யாந்த தாஹி த்ருஷ்டம் லிங்கஞ்ச."

பதவுரை:—கதிசப்தாப்யாம்=தஹரம் சைதன்ய ரூபமாகிய அடையத் தக்க ஸ்தானமென்று சொல்லப் படுதலாலும், சுருதியில் 'பிரஹ்மலோகம்' என்னும் பதம் பிரயோகிக்கப் பட்டிருத்தலாலும் (தகர பதத்தின் பொருள் பிரம்மமே.) ததாஹி=அவ்வாறே ("ஜீவர்களுக்கு தினமும் சுஷுப்தி யவஸ்தையில் பிரம்ம லோகத்திற்குப் போதல் உண்டாகும்" என்று இந்த சுருதியில் சொல்லப் பட்டது போலவே), த்ருஷ்டம்=வேறு சுருதியிலும் காணப் படுகின்றது. மேலும், லிங்கஞ்ச=இவ்வாறு போதலே 'தஹரம்' பிரஹ்மம் என்பதற்கு அடையாளமா யிருக்கின்றது.

கருத்து:—"இந்த ஜீவர்களெல்லாம் தினந்தோறும் பிரஹ்ம சொரூபமாகிய இந்த தகரத்தை யடைந்தும் இந்தச் சங்கதியை யறியாதிருக்கின்றனர்." (இமாஸ் ஸர்வா: ப்ரஜா அஹரஹர் கச்சந்த்ய ஏதம் ப்ரஹமலோகம் நவிந்தந்தி) இந்த வாக்கியத்தில் "பிரம்மலோகம்" என்பது தகரத்தையும் அதன் விஷயமான ஸ்திதி ஜீவர்களையும் குறிக்கும். இவ்வாறு சொல்லப்பட்ட ஸ்திதியாலும், ப்ரஹ்மலோகம் என்னும் பதப்பிரயோகத்தாலும், தகரம் பிரம்மமேயென்பது தெளிவாகின்றது. இப்படியே ஜீவர்களுக்கு தினந்தோறும் சுஷுப்தி யவஸ்தையில் பிரம்மப் பிராப்தி யாகின்றதென்பதை "ஓ ஸௌமியா! சத்தோடு அந்த சுஷுப்தி காலத்தில் ஜீவன் கூடினவனாகிறான்" என்று வேறு சுருதி வாக்கியங்கள் கூறுவதும் காண்க.

இங்கு பிரம்மலோகம் என்றது சதுர்முகனுலகமாகிய சத்தியலோகமல்ல; இருதய புண்டரீகமாகிய தகரமே. எனவே, பிரம்மலோகம் என்றது பிரம்ம சொரூபமாம். ஏனெனில் ஜீவர்கள் தினந்தோறும் சத்தியலோகத்தை யடைவதில்லை யல்லவா?

16–வது சூத்திரம் அவதாரிகை:—மேலே சொல்லப்பட்ட விஷயமே உறுதிப் படுத்தப் படுகின்றது.

சூ. 16. "த்ருதேச்ச மஹிம்னோஸ்யாஸ்மிந்நுபலப்தே:"

பதவுரை—த்ருதே:=ஜகத்தைத் தரிக்கும் காரணத்தால் (தஹரம் பிரஹ்மமே), அஸ்ய மஹிம்ந:=இந்த ஜகத்தைத் தரிக்கும் மகிமைக்கு, அஸ்மிந்=பரமேசுவரனிடத்தில் (ஸ்திதி யிருப்பதாக), உபலப்தே—ச=வேறு சுருதியினால் தெரிவதாலும் (தஹரம் பிரம்மமே).

கருத்து:—ஆகாசம் முதலிய எல்லாப் பிரபஞ்சமும் தகரம் என்னும் பொருளினிடத்து நிலைபெற் றிருப்பதாகச் சுருதிகள் கூறுவதால் தகரம் பிரம்மமே என்பது தெளிவாகின்றது.



17–வது சூத்திரம் அவதாரிகை:—"தஹரம் பூதாகாசமல்ல" என்பது காட்டப் படுகின்றது.

சூ. 17. "ப்ரஸித்தேச்ச."

பதவுரை:—ப்ரசித்தே:—ச=தகரம் என்பதன் வேறு பெயராகிய ஆகாசம் என்னும் பதம் பிரம்மத்தைக் குறித்துப் பிரசித்தமாக வழங்கி வருதலால் (தகரம் பிரம்மமே)

கருத்து:—"தகரம்"—"ஆகாசம்" என்னு மிவ் விருபதங்களும் ஒரே அர்த்தத்தில் வழங்கப்பட் டிருத்தலாலும், சுருதிகளில் சில விடங்களில் ஆகாச பதம் பிரம்மத்தைக் குறித்துப் பிரசித்தியாக வழங்கி வருவதாலும், தகர பதமும் பிரம்மத்தைக் குறிப்பதே யாகும்.

சூ. 18. "இதரபராமர் சாத்ஸ இதிசேந்நாஸம்பவாத்."

பதவுரை:—இதர பராமர்சாத்=சுருதியில் ஜீவ உதாரண மிருத்தலால், ஸ:=அந்த ஜீவனே தஹரன், இதிசேத்=என்று கூறுவாயானால், ந=அது சரியல்ல, அஸம்பவாத்=தகர தர்மங்கள் ஜீவனுக்கு சம்பவிக்காமற் போவதால்.

கருத்து:—சுருதியில் ஜீவன் பெயர் சொல்லப்பட் டிருப்பினும், ஜகத்தைத் தரித்தல் பாபமில்லாமை முதலிய தகர தர்மங்கள் ஜீவனுக்கு இல்லாமையால் அவன் தகரனாக மாட்டான்.

6—வது உத்தராதி கரணம்

19–வது சூத்திரம், அவதாரிகை:—முந்தின பிரகரணத்தில் விஷய வாக்கியமாகக் காட்டப்பட்டுள்ள "அதயதிதமஸ்மிந்" என்று தொடங்கும் வாக்கியத்திற்குப் பிறகு சுருதியில் காணப்படும் சிலவாக்கியங்கள் பிரம்மாவால் கூறப்பட்ட வாக்கியங்களாக இருக்கின்றன. அவை ஜீவனைப்பற்றிய வாக்கியங்களாகவே யிருக்கின்றன. ஆதலால், அவற்றிற்கு முன்னுள்ளதாகிய மேற்படி விஷய வாக்கியத்திலுள்ள தகரன் ஜீவனாக இருக்கவேண்டுமேயன்றிப் பரமேசுவரனாக இருக்க முடியாது;" இவ்வாறு வந்த பூர்வபக்ஷம் கண்டிக்கப்படுகின்றது.

சூ. 19. "உத்தராச்சேதா விர் பூதஸ்வரூபஸ்து."

பதவுரை:—உத்தராச்சேத்=பின் வாக்கியங்களால் தஹரன் ஜீவனே யாதல் வேண்டும் என்று தெரிகின்றது என்பாயானால், து=அது சரியல்ல; ஏனெனில், அவிர்பூதஸ்வரூப:=அந்த ஜீவன் சுவசுவரூபத்தை வெளிப்படுத்தினவனா யிருக்கிறான் (ஆகலின், அவன் தஹர சப்த வாச்சியன்).

கருத்து:—அவித்தையாகிற உபாதி நீங்கப்பெற்ற ஜீவனுக்கு ஜகத்தைத் தரித்தல் முதலிய தர்மங்கள் சம்பவிக்குமென்று உத்தர (பின்) வாக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கின்றதே யன்றி, உபாதி (அவித்தை) புடையவனாகிய ஜீவனுக்கு சம்பவிக்குமென்றல்ல. தன் சுய வடிவை வெளிப்படுத்தின ஜீவனே தகரம் என்னும் பதத்தின் பொருளாகிறான் என்று இச் சூத்திரம் போதிக்கின்றது. ஜீவன் தகர சப்த வாச்சியனானவுடனே பிரம்மா பின்ன

ளுகின்றான். ஞானனந்தரம் ஜீவனுக்கு ஜீவத்தன்மை கெட்டு பிரம்மத்தன்மையுண்டாகின்றதென்று சுருதி கூறுகின்றது. "ஸயோ ஹவைதத் பரம் ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவபவதி"=எவன் பிரம்மத்தை அறிந்து கொள்ளுகின்றானே அவன் பிரம்மமேயாகிறான் என்பது சுருதி வாக்கியம்.

20-வது ஸூத்திரம் அவதாரிகை:—"தகரம் என்னும் பதம் பிரம்மத்தையே குறிக்குமென்றும் ஜீவனைக் குறிக்காதென்றும் சித்தாந்தி வாதிக்கின்றார். அப்படியானால் அந்த வாக்கியத்தின் ஒரு பகுதியில் ஜீவதர்மம் கூறப்பட்டிருப்பதன் பயனென்ன?" இவ்வாறு கூறும் பூர்வ பக்ஷியின் வாதம் கண்டிக்கப்படுகின்றது.

ஸூ. 20. "அந்யார்தச்ச பராமர்ச:"

பதவுரை;—பராமர்ச:=ஜீவதர்ம உதாஹரணம், அந்யார்த:=வேறு பிரயோஜனத்திற்காக இருக்கின்றது.

கருத்து:—முன் அதிகரணத்திலுள்ள "அதயதிதமஸ்மிந்" என்று தொடங்கும் விஷயவாக்கியத்தில் முதலில், பிரம்மலக்ஷணம் சொல்லப்பட்டு, பிறகு, 'அந்த லக்ஷணங்களோடு கூடிய பிரம்மத்தை அறிந்துகொள்' என்று உபதேசிக்கப்பட்டிருக்கின்றது. அன்றி, பிரகரணத்தினிடையில் ஜீவனைப் பற்றிய விஷயம் சிறிது சொல்லப்பட்டு, அந்த ஜீவனுக்கு அவித்தை நாசமான பிறகு, அவனே பிரம்மமாகிறானென்று விளக்குவதற்காக பிரம்ம லக்ஷணங்கள் அவனுக்கு சொல்லப்பட்டிருக்கின்றன. மேலும், சுருதியினிறுதியில் அத்தகைய முக்த நிலையையடைந்த ஜீவசொரூபத்தை விட தெரிந்து கொள்ளத் தகுந்த பதார்த்தம் வேறொன்றில்லை என்று போதிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு, பிரம்மத்தைப் போதிக்கும் பிரகரணத்தில் கூறப்பட்ட ஜீவனைப்பற்றிய விஷயத்திற்குப் பயன், ஜீவன் பிரம்மத்தினும் அபின்னன் என்பதைப் போதிப்பதேயன்றி, ஜீவனை ஜீவனாகவே அறிவதற்காகவல்ல.

21-வது ஸூத்திரம். அவதாரிகை:—மேலும், மேற்படி வாக்கியத்தில் "தஹரோஸ்மிந் அந்தர ஆகாச:" (அந்த இடத்தில் தகரசப்தத்தால் அழைக்கப்படும் ஒரு ஆகாசமிருக்கிறது) என்னும் வாக்கியத்தில் பிரம்மத்திற்குச் சொல்லப்பட்ட பரிமிதஸ்தான வர்த்தித்வ தோஷ (சிறிய விடத்தில் இருப்பதாகச் சொல்லப்பட்ட குற்றத்தைப் போக்குகின்றது இச் ஸூத்திரம்.

ஸூ 21. "அல்பச்ருதேரிதிசேத் ததுக்தம்."

பதவுரை:—அல்பச்ருதே:=அற்பஸ்தான வாசத்தைச் சுருதி கூறுவதால், (பிரகரணத்தில் கூறப்படும் விஷயம் பிரம்மமல்ல); இதிசேத்=என்றிவ்வாறு கூறுவாயானால், ததுக்தம்=அந்தத் தோஷ பரிகாரம் முன்னமே சொல்லப்பட்டது.

கருத்து:—உபாசனைக்கு அனுகூலமாக இருப்பதற்காக எங்கும் வியாபித்துள்ள பிரம்மத்திற்கு ஓர் இடம் கற்பிக்கப்பட்டதென்று முன்னமே சமாதானம் கூறப்பட்டிருத்தலின் இந்த ஆக்ஷேபம் யுக்தமல்ல.

7-வது அநுக்ருத் யதிகரணம்.

22-வது ஸூத்திரம். அவதாரிகை:—"நதத்ர ஸூர்யோபாதி நசந்த்ர தாரகம், நேமோவித்யுதோ பாந்தி குதோயமக்நி:—தமேவபாந்தமனுபாதி ஸர்வம், தஸ்யபாஸா ஸர்வமிதம் விபாதி" என்னும் இந்த வாக்கியம் முண்டகோப நிஷத்திலுள்ள ஓர் வாக்கியமாகும். இதன்பொருள் "ஸூரியனும், சந்திரனும், நக்ஷத்திரங்களும், மின்னல்களும், அக்கினியும் அந்த வஸ்துவைப் பிரகாசிக்கச் செய்வதில்லை. பிரகாச வடிவமாகிய அதனை யனுசரித்து எல்லாம் பிரகாசிக்கின்றன. அதன் பிரகாசத்தால் இந்த எல்லாப் பிரபஞ்சமும் பிரகாசிக்கின்றது" என்பதாம். இந்த வாக்கியத்தில், "அதனை", "அதன்" என்னும் பதங்களால் குறிக்கப்பட்டிருப்பது தேஜோமய பதார்த்தமா? பரஞ்சோதியாகிய பிரம்மமா? என்பது சம்சயம். இச் சம்சயம் நீக்கப்படுகின்றது.



ஸூ. 22. "அநுக்ருதேஸ்தஸ்யச."

பதவுரை:—தஸ்ய=அந்தப் பதார்த்தத்தினுடைய, அநுக்ருதே:=அநுபாவத்தால் (தத்சப்தவாச்சியம் பிரம்மமே).

கருத்து:—அந்த வஸ்துவை யனுசரித்து ஸூரியசந்திராதிகள் பிரகாசித்துக்கொண்டிருப்பதாகக் கூறப்பட்டிருத்தலாலும், அந்தப் பரமதேஜசானது எல்லாவற்றையும் பிரகாசிக்கச் செய்கின்றதெனக் கூறப்பட்டிருத்தலாலும், அது பிரம்மத்தைத் தவிர வேறொன்றாக விருக்கமுடியாது.

23-வது ஸூத்திரம் அவதாரிகை:—மேலே கூறிய கருத்தே ஸ்மிருதிகளின் கருத்துமாகும் என்று காட்டப்படுகின்றது.

ஸூ. 23. "அபிசஸ்மர்யதே."

பதவுரை:—ஸ்மர்யதேபிச=இப்படியே ஸ்மரிக்கப்பட்டது (ஸ்மிருதியிலும் சொல்லப்பட்டது).

கருத்து:—"அதனை ஸூரிய சந்திர அக்கினிகள் பிரகாசிக்கச் செய்கிறதில்லை. எதனையடைந்த பிறகு மறுபிறப்பில்லையோ அதுவே எனதிருப்பிடம்" "ஸூரிய சந்திராதிகளிடத்திலுள்ள எந்த தேஜஸு எல்லாப் பிரபஞ்சங்களையும் பிரகாசிக்கச் செய்கின்றதோ, அந்தத் தேஜஸை என் சம்பந்தமுள்ளதாகத் தெரிந்துகொள்" என்னும் கீதா வாக்கியங்கள் இக் கருத்துடையனவா யிருத்தல் காண்க.

8-வது சப்தாதிகரணம்.

24-வது ஸூத்திரம். அவதாரிகை:—"அங்குஷ்ட மாத்ர: புருஷோமத்ய ஆத்மநிதிஷ்டதி"—"அங்குஷ்ட மாத்ர: புருஷோஜ்யோதிரிவா தூமகம்—ஈசானோபூத பவ்யஸ்ய, ஸஏவாத்யஸ உஸ்வ ஏதத்வைதத்."

கடோபநிஷத்திலுள்ள இந்த வாக்கியத்தின் பொருள்:—"அங்குஷ்ட (பெருவிரல்) அளவுள்ள புருஷன் சரீரத்தி லிருக்கிறான். அவன் புகை யில்லாத ஜோதிபோல் இருக்கிறான். மேலும் அவன் எல்லாப் பிரபஞ்சங்களுக்கும் நியாமகனும் முக்காலங்களையும் கடந்தவனுமாயிருக்கிறான்" என்பதாம்.

இவ்வாக்கியத்தில் அங்குஷ்ட அளவுள்ளவனாகக் கூறப்பட்டுள்ள புருஷன் யார்? ஜீவனா? அல்லது பரமாத்மாவா? என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயமாம்.

பரமாத்மாவே; ஜீவனல்ல என்று இச் சூத்திரத்தால் காட்டப்படுகின்றது.

### சூ. 24. "சப்தா தேவப்ரமிதஃ"

பதவுரை:-ப்ரமிதஃ=அங்குஷ்ட அளவுள்ளவனாகக் கூறப்பட்டவன் (பரமாத்மாவே); ஏனெனில்; சப்தாதேவ=சுருதியில் உள்ள பதவிசேஷத்தினால்.

கருத்து:—விஷய வாக்கியத்தில் அங்குஷ்ட அளவுள்ள புருஷனுக்கு எல்லாவற்றிற்கும் நியாமகனாந் தன்மை சொல்லப்பட்டிருத்தலால் அவன் பரமாத்மாவேயன்றி ஜீவனல்ல.

25-வது. சூத்திரம், அவதாரிகை:—"சர்வ வியாபியாகவும் ஓரளவிற் குட்படாதவனாகவுமுள்ள பரமாத்மாவிற்கு அங்குஷ்ட அளவு என் கூறப்பட்டது? என்னும் பூர்வபக்ஷிகளின் வாதத்திற்குச் சமாதானம் சொல்லப்படுகிறது.

### சூ. 25. "ஹ்ருத்யபேக்ஷயாது மநுஷ்யாதிகாரத்வாத்."

பதவுரை:—மநுஷ்யாதிகாரத்வாத்=வேதாந்த சாஸ்திரமானது மனிதனை யுத்தேசித்துத் தோன்றியதாகலின், ஹ்ருதி=அவன் இருதயத்திலுள்ள, அபேக்ஷயா=உபலப்தி யனுசாரமாக (நிலைமைக் கேற்றபடியாக), (அங்குஷ்ட அளவு கூறப்பட்டது.)

கருத்து:—வேதாந்த சாஸ்திர உபதேசத்திற்குத் தகுந்தவர்களாகிய அதிகாரிகள் மனிதர்களாதலின், அவர்களின் உபாசனா சௌகரியத்திற்காக, அவர்களின் இருதய அளவை யனுசரித்து சர்வவியாபியாகிய பரமாத்மாவிற்கு அங்குஷ்ட பிரமாணத் தன்மை உபசாரமாகக் கூறப்பட்டது.

சர்வ வியாபியாகிய பரமாத்மா மனிதனுடைய இருதயத்திலும் இருக்கிறா னென்பதில் குற்றமில்லை யல்லவா?

வேதாந்த வாக்கியங்களுக்கு இரண்டுவித பிரவிருத்தி யுண்டு. சில பரமாத்ம சொரூபத்தை நிரூபணம் செய்வனவாகும். வேறு சில ஜீவப்ரஹ்மங்களுக்கு அபேதத்தைத் தெரிவிக்கும். அவ்வாறே, இந்த கடவல்லி வாக்கியங்களிலும் சில அவாந்தர (சிறப்பான) தாற்பரியத்தையும், சில மஹா பொது தாற்பரியத்தையும் (பொதுக் கருத்து) போதிக்கின்றன. அவாந்தர தாற்பரியங்கள் உபாஸ்ய பிரமத்தினிடத்தும், மஹா தாற்பரியங்கள் ஞேய பிரஹ்மத்தி னிடத்தும் முடிவுறுகின்றன.



# "கோபாலன்" கடிதங்கள்

(பெ. இராமாநுஜன்.)

அன்பார்ந்த அண்ணா!

....................
6—8—24

தங்கள் மலரடிக்கு வணக்கம். தங்கட்கு ஒரு கடிதம் செய்யுளால் வரைய வேண்டுமென அடியேன் பலநாள் நினைத்ததுண்டு. ஆனால், கவிஞனல்லாத எனக்கு அது அருஞ்செயலாகத் தோன்றிற்று. எனினும் பல நாட்களாகச் சிந்தித்து வந்ததன் பயன் இன்று பாவாக முடிந்துளது. அதனுட் செய்தியொன்றும் இல்லையெனினும் எனது முயற்சியைப் பாராட்டுவீர்களென்று நம்புகின்றேன்.

நீரார்ந்த பூவில் நிலவி விளங்குபெரும்
போர ரிமையப் பெருவரையும்—பாரோர்கள்
கொண்டேத்தும் கங்கை குளிர்கா விரிநதியும்
தண்டாப் புகழார் தனிமுதல்வன்—கொண்டுறையும்
பொற்கோ யிலுமதிலும் பொன்னகரும் பின்னடையும்
எற்கா லரதனமா ரின்னகரும்—பற்குனற்குத்
தேனூர்ந்த செம்மல் திருமொழியாங் கீதை முதல்
ஆராய்ந் தறிந்திவ் வவனியிசைப்—பேர்போன
தெய்வ முனியார் திலகர் பெருமானும்
எய்தற் கெளிய இறைவனெனும்—மெய்தவனாங்
காந்தி யடியாரும் காதலராய்ப் பெற்றெடுத்துக்
காந்தி மிகும்பாரத கண்டமதில்—ஏந்து புகழ்
பொன்னூற் றெனுஞ்சிறந்த புண்ணிய நீர்நிலைபோல்
பன்னூறு நீர்நிலையும் பைந்தளிரார்—புன்னையொடு
தென்ன வனமும் செழுமா மரக்குழுவும்
கன்னலும் நெல்லுங் கதலியும்—மென்கமுகும்
வெண்டுகில் போர்த்தன்ன விளங்குஞ்சீர் முல்லைமலர்
எண்டிசையும் பூத்து இனிமைமிக—வண்டினங்கள்
நீலமலர் மாலையென நீளவளைந் தேவொலிக்குங்
கோல வரிசையையுங் கொண்டமலை—நீலமலை
வெள்ளிமலை மற்றும் பிறமலையும் மேவியொளிர்
எள்ளில் புகழ்கொங்கு நாடதனில்—தன்னாக்

கருகிலத்து மின்னலுடைக் கார்பொழிந்த பின்னை
எருதுகளைப் பூட்டியுழு தெங்கும்—ஒருபொழுதில்
சோளம் பருத்தியொடு தூமவிலை யும்பிறவும்
நீள விதைத்துப்பின் நெட்டிலைகள்—காளநிறம்
பெற்றுப் பயனீனும் பீளைமே டென்னுமுயர்
கொற்ற மிகுந்த குடியினில்வாழ்—நற்றவனே
'உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு'வென்ற—நற்றலைவன்
சொல்லுரையி னிற்பிறழாத் தூயகுணக் காந்தியவர்
மெல்லடிக ளைமறவா மேதகையோய்—மல்லலுறு
நீவிர் விடுத்த நிருபந் தனைக்கண்டும்
பாவியே னன்றே பதிற்கடிதம்—மேவுசில
காரியத்தாற் றீட்டாத கையுறவை நோக்கன்மின்
சீரியநல் லன்பார் திருத்தமையன்—ஆரியமும்
ஆங்கிலமுந் தெய்வ அருந்தமிழுங் கற்றுபுகழ்
ஓங்கு கிருட்டினப்பே ருத்தமனும்—தேங்குதயை
ஆர்ந்து வழிதவினால் அப்பனையும் ஆயியையும்
சேர்ந்து விளங்குகிற நீர்மையினால்—சேர்ந்தொளிரும்
அப்பாயி யென்னும் அருமைப் பெயர்பூண்ட
செப்பற் கரும்புகழார் செம்மையனும்—முப்பொழுதும்
அன்பொடு"கோ பாலுஉ!" என்று எனையழைத்து
மென்புழுக்கல் வட்டிக்கு மென்னனையும்—இன்பமொடு
தேகநலம் பெற்றுச் செகதலத்திற் பல்லூழி
ஊகமுடன் வாழ்க வுவந்து.

அண்ணா! செய்தி இவ்வளவுதான்; பாட்டும் முடிந்தது! தங்கள் கைத்திரு முகத்தைத் தரிசிக்கக் காத்து நிற்கும்,

தம்பி
கோபாலன்.



# தமிழ்க் கூத்து

—:(o):—

(வித்துவான். திரு. இ. சிவகுருநாதன்.)

தமிழ்க் கூத்து என்றால் என்னை? இனிமை நிறைந்த கூத்தை தமிழ்க் கூத்து என்க. கூத்தின் இயல் யாது? உலகத்தவர் மகிழ்ச்சியுற, உள்ள நிகழ்ச்சிகளை உடலுறுப்பு வாயிலாக வெளியிடல் கூத்தின் இயற்கை.

கூத்துக்கள் பல திறத்தன. ஆடலும் பாடலும் கூடி நிகழும் கூத்து ஒரு வகை. குழலும் யாழும், முழவும் வங்கியமும் கூடிமுழங்க ஆடிப்பாடும் கூத்து ஒரு வகை. இத்திறத்த பலவகையில் கூத்துகள் இயங்கி வருகின்றன.

தமிழ்க் கூத்து தமிழ்நாட்டில் பண்டு தலை சிறந்து விளங்கியது. முப்பெருந் தமிழுள் ஒப்பரும் நாடகத் தமிழ் ஒன்றல்லவா? அக்கூத்து இன்று யாண்டுளது? அது பெரிதும் மறைந்துபட்டது. இன்று தமிழ்நாட்டை மேனாட்டுக் கூத்தும் கூத்துமுறைகளும் கவர்ந்து நிற்கின்றது. இந்நாட்டில் தமிழ்க் கூத்து புத்துயிர் பெறுதல் என்று?

வழக்கிறந்த தமிழ்க் கூத்துகள், பழந்தமிழ் நூற்களில் பாட்டோவியமாக காட்சியளித்து நிற்கின்றது. அப்பாட்டோவியத்தைக் காவியக கண் கொண்டு காணுங்கள். அளப்பில் இன்பம் அடையலாம்.

தொன்மைத் தமிழறிஞர் இயற்கை இன்பம் பெரிதென எண்ணினர். ஆதலின் இயற்கையொடு பழகி இயற்கையைப் பாடினர்; இயற்கை அழகு கண்டு இயற்கை இன்பம நுகர்ந்தனர். இயற்கைக் கூத்தை கண்டுகளித்த ஒரு புலவர், அக்கூத்தை எழுத் தோவியமாக வரைந்து காட்டுகின்றார்.

அக்காட்சியின் வனப்பை எக் கண் கொண்டு காண்பது? எம்மொழி கொண்டு புகல்வது? தமிழன்பர்காள்! இதோ அக்கூத்து காட்சி வழங்குகிறது. காண்மின்! காண்மின்!!

"ஆடமைக் குயின்ற வவிர்துளை மருங்கிற்
கோடை யவ்வளி குழலிசை யாகப்
பாடின் னருவிப் பனிநீ ரின்னிசை
தோடமை முழவிற் றுதைகுர லாகக்
கணக்கலை யிகுக்குங் கடுங்குரற் றூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டியா ழாக
வின்பல் லிமிழிசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவள ரடுக்கத் தியலி யாடுமயில்
நனவுப்புகு விறலியிற் றோன்று நாட!" (அகம். 82, கபிலர்)

[அசைகின்ற மூங்கிலாற் செய்யப்பட்டு விளங்கும் துளைகளிடத்து (நுழைகின்ற) மேற் காற்றானது குழலிசையாகவும், ஒலியினிய அருவியாகிய குளிர்ந்த நீரின் இனிய இசையானது தொகுதி பொருந்திய முழவினது நெருங்கிய குரலாகவும், கணமாகிய கலை தாழவிடுகின்ற குரலானது பெரு வங்கிய மாகவும், (இவற்றொடு) மலைச்சாரலின் பூக்களில் பொருந்திய வண்டு ஊதும் ஒலி யாழாகவும், (இருந்து) இத்தன்மைய பல இனிய இசைகளை (எழுப்ப அதனைக் கேட்டு மகிழ்ச்சிமிக்கு, மந்திந்திரள் ஆச்சரியப்பட்டு பார்க்க, மூங்கில் வளரும் மலையின் கண் உலாவி ஆடும் மயிலானது, விழவுக் களத்தின் கண்ணுள்ள விறலியைப் போல தோன்றும் நாட!]

இப்பாட் டோவியத்தைக் கூர்ந்து நோக்குங்கள்! இப்பாட்டில் மழை தவழும் மலை அண்ணாந்து நிற்கின்றது. அம்மலை மிசை ஓங்கி வளர்ந்த மூங் கில் கோடைக் காற்றால் ஆடி யசைந்து இசை எழுப்புகிறது. பளிங்கென தெளிந்த அருவி நீர் இழுமென ஒலித்து இழிந்து வருகின்றது. கலைக் கூட் டங்கள் களித்து விளையாடி கடுங்குரல் எழுப்புகிறது. மலைச்சாரலில் மலர்ந்த பூக்களில் வண்டு பாண் மிழற்றுகிறது. மரத்து மிசையிருக்கும் மந்திகள் மருண்டு பார்க்கின்றது. அழகிய மயில் ஆடுகிறது.

அவ்வழகிய மயில் கூத்தாடுங் கோலத்தை என்னென்று கூறுவது? குழ லோசையும், முழவின் முழக்கமும், வங்கிய வாத்தியமும், யாழொலியும் இனிய இசை எழுப்பி மகிழ்ச்சியூட்ட, வளைந்த மூங்கிலின் கண் வனப்பு மிக்க மயில், உல்லாசமாக உலவி கூத்தாடுகிறது.

குழலும் யாழும் முழவும் வங்கியமும் முழக்குபவர் யாவர்? ஓங்கி வளர்ந்த மூங்கில் குழல் ஊதுகின்றதாம். எங்ஙன மூதுகின்றது? அசையும் மூங்கிற் கண், தேய்வால் சிறுசிறு துளைகள் பொருந்த, அத் துளைகளில் கோடைக் காற்று நுழைய, குழலோசை எழுகின்றதாம். என்னே குழலின் மாட்சி?

இழுமென இழிதருமருவி முழவு முழக்குகின்றதாம். எங்ஙன் முழக்கு கின்றது? ஏற்ற இழிவுகளில் மாறிமாறி ஒலித்து வீழ்தலால் அருவி முழவு முழக்குகின்றதாம்.

கலைகள் வங்கிய வாத்தியம் ஊதுகின்றதாம். (பெருவங்கியம்—யானை துதிக்கை போன்று வளைந்ததொரு இசைக்கருவி) கலைகள் தாழவிடுகிற குர லாகிய ஒலி வங்கியம் போல இருக்க, கலைகள் வங்கிய வாத்தியம் ஊதுகின் றது என்று கலைக்குரலை வங்கிய வாத்தியமாக உருவகஞ் செய்தார்.

வண்டு யாழ் வாசிக்கின்றதாம். எங்ஙன்? பூக்களில் பொருந்தும் வண்டு ஊதுகின்ற ஒலியால் யாழொலி எழுப்புகின்றதாம்.

இத்திறத்த இசைகளைக்கேட்டு மகிழ்ச்சிமிக்கு மயில் ஆடுகின்றதாம். அவற்றை மந்திந்திரள் மருண்டு பார்க்கின்றதாம்.

தமிழ்ச் செல்வர்காள்! கூத்தாடும் மயிலின் கோலம் என்னே! என்னே!! இசை யெழுப்பும் கருவியின் சிறப்பு கட்டுரைக்க ஒல்லுமோ? மருண்டு பார்க்கும் மந்திகளின் மகிழ்ச்சி ஏட்டில் எழுத இயலுங்கொல்? இக் கூத்தல் லவோ கூத்து! இக் காட்சியல்லவோ காட்சி! இக்கூத்தும் காட்சியும் தமிழ் நாட்டில் புத்துயிர் பெறுதல் என்று?



# அகத் துறவு

—:(o):—

(தென்னாப்பிரிகா, டர்பன் திரு. இரா. அரசுப் பிள்ளை.)

"பெற்ற சிற்றின்பமே பேரின்ப மாயங்கே
முற்றவரும் பரிசு உந்தீபற
முளையாது 'மாயை' என்று உந்தீபற."—திருவுந்தியார்.

சில தமிழ் நூல்களில் பெண்களை மாயை—பேய்-பேதை யென்றும் பந்தத்திற்கு உறைவிடம் இவர்களின் சேர்க்கையாலே வீளைவ தென்றும், அன்னோரின் சேர்க்கையின் பயனால் வீட்டின் பேறு வாய்ப்ப தில்லை என்றும் கூறும் பெரியோருள், தலைச்சிறந்தவர் பட்டினத் தடிகளே என்று பல அறிஞர்கள் சொற்பொழிவிலும், கட்டுரைகளிலும் வழங்கி வருவ தினை அன்பர்கள் கண்டுங் கேட்டும் இருக்கலாம்.

இனி முற்றும் துறந்தவரென்றும், "வாவியெல்லாம் தீர்த்தம் மணலெல் லாம் சிவலிங்கம்" என்றவரும், "பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல் ஆருந்துறக்கை யரிது யரிது" என்று தாயுமானவர் போற் றியவரும், இன்னும் மற்றவரும் உண்மையிலே பெண்களை மாயை-பேய்-பேதை என்று கூறவில்லை. அவர்கள் கூறியது ஒருதலையாய 'அரிவையர்' அல் லது 'கணிகை' பெண்களையே என்று கோடல் அறிவுடைமையாகும்.

இனி தவநெறி யொழுகியோர் எல்லாப் பெண்களையும் மாயை என்று கூறினர். ஆகவினால், நாமும் அன்னாரைப்போல் பெண்களை அடிமை பேய் என்று தவறாக எண்ணாது, பெண் எனும் சக்தியைப்போற்றல் வேண்டும். பெண்களுக்கு உரிமையும் கலை யுணர்வும் நல்காது அவர்களை யடிமைகளாக வும் பேய்களாகவும் பம்பரம்போல் ஆட்டிவைக்கும் நாடு, சீர் இழந்த நாடா கும். இதற்கு நம் தமிழகமே சான்றாக கொள்வதினால் இழிவென்னை?

எந்நாட்டில் பெண்கள் கலையுணர்விலும், உரிமையிலும் முற்பட்டிருக் கின்றனரோ? அந்நாடே சீர்பெற்ற நாடாகும். ஓர் காலத்தில் நம் தமிழகம் சீரும் சிறப்பும் உற்றிருந்தது என்பதை மறத்தல் கூடாது.

பெண்களுக்கு நாம் கல்வியும், உரிமையும் நல்காது அடிமையாக நடாத்துவதினாலேயன்றோ, அவர்கள் மாயை-பேய்-பேதை எனும் சொற்

களுக்கு இலக்கியமாகின்றனர்? அவர்களும் நம்மைப்போல் உரிமையுடையராய், கல்வி கேள்விகளில் வல்லவராய் இருந்தால் அன்னோரும் மாசற்ற நெஞ்சினராய் வாழ்க்கைக்கு அருந்துணைவராய் வீட்டின் பேற்றிற்கு அருள் ஒளியாய் திகழ்வர். கல்வி கேள்வி பயிற்சி இல்லாமையாலன்றோ அவர்கள் அறிவிலிகளாயும், அழுக்காறு, அவா, வெகுளி, குய்யம் எனும் மாசுடைய நெஞ்சினராய் ஞாலத்தில் பற்பல இடையூறு செய்து வருகின்றனர். இவர்கள் சேர்க்கையன்றோ பந்த குழி என்பது இஃதில் அகப்பட்டபோது வீட்டின் பேற்றை யடைய முடியாமற் போய்விடுகிறது.

நம்மனோர் பெண்களுக்கு கல்வியும், உரிமையீந்து அவர்களை சக்தி தெய்வம் என்று போற்றி அவருள்ளத்தில் கடவுள் சிந்தனையும், அறசிந்தனையும் உண்டாக்கி அன்னோருடன் கூடி இல்வாழ்க்கையை அறநெறி பிறழாது வாழ்வதினால் வீட்டின் பேறு வாய்க்காதுபோமோ? ஒத்த பண்பும், ஒத்த நலனும், ஒத்த அன்பும், ஒத்த செல்வமும், ஒத்த கல்வியும் உடைய தலைவனும், தலைவியும் கூடி வாழ்க்கையை நடாத்தினால்; இது, மாயை வாழ்வாமோ? பேய் வாழ்வாமோ? பேதை வாழ்வாமோ?

இத்தகைய கிழவனும், கிழத்தியும் கூடி வாழ்வதே சிறந்தது என்றும் பின் அதுவே மறுமைக்கு பயனென்ற உண்மையை,

“காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்,
சிறந்தது பயிற்றல் இறந்த தன்பயனே”

என்றும்,

“இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கே
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற்
காமக் கூட்டம் காணுங் காலை
மறையோர் 'தே'எத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்லியாழ்த் துணைமையோர் இயல்பே”

என்றும் வரூஉம் தொல்காப்பியத்தால் உணர்தற்பாற்று.

இனி வள்ளுவர் ஆய்ந்த குறட் பாவினுள் துறவற வியலில்,

“பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப்படும்.”

என்றும்,

“அற்றது பற்றெனில் உற்றது வீடு”

என்றும் வரூஉம் பாக்களை யுறுதியாகக் கொண்டு, உற்ற மனைவியையும், மக்களையும், வீட்டையும், நாட்டையும் ஒருங்கே அற்று காட்டிற்கு சென்று துறவியாய் ஒழுகினால்தான் வீட்டின் பேறு கிடைக்குமென்று சிலர் வாதிக்கின்றனர்.

நம் ஆசிரியர் வள்ளுவனார்—பற்றென்பது அழுக்காறு, அவா, வெகுளி, செருக்கு, குய்யம் எனும் பற்றை அறவே யகற்றவேண்டுமென்ற உண்மையை



“யானென தென்னுஞ் செருக்கறுப்பான்
வானோர்க் குயர்ந்த வுலகம் புகும்.”

என்ற அருளினரே ஒழிய, மனைவியையும் மக்களையும், துறக்கவேண்டுமென்ற கூறவில்லை என்று இச்செய்யுளை துருவி—துருவி ஆராய்ந்து தெளிதல் அறிவுடைமை.

அப்படியே அவர் மக்களையும், மனைவியையும் துறப்பதே வீட்டின் பேறாக கொண்டிருந்தால், அதே குறட்பாவில் இல்லற வியலில்,

“அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது”

என்றும்,

“அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவ தெவன்”

என்றும்,

இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லார் தலை”

என்றும்,

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுர்
தெய்வத்துள் வைக்கப் படும்.”

207678

என்றும் வரூஉம் செய்யுள்களால் வாழ்க்கைத் துணையோரை விதந்தோதி போவாரோ? அவர் பற்றென்பது அழுக்காறு, அவா, வெகுளி, குய்யம், செருக்கு என்றன்றோ அருளினர் எனக் கோடல் அறிஞர் கடனாகும்.

இனிப் பட்டினத்தடிகளும், தம்நூலுள் பெண் அணங்குகளை மாயை-பேய்-பேதை என்றருளினராகலின் அவர் கொண்ட துறவே சால்புடைத்தென்று அவர் திருவேகம்பமாலை முதட் செய்யுள்,

“அறந்தா னியற்று மவனிலுங் கோடி அதிகமில்லந்
துறந்தான் அவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்
மறந்தானைக் கற்றறிவோ டிருந்திரு வாதனையற்
றிறந்தான் பெருமையை யென் சொல்வேன் கச்சியே கம்பனே.”

என வரூஉம் பாவை யுறுதியாகக் கொண்டு துறவே வீட்டிற்கு பயன்தரக் கூடியதென்று கூறுகின்றனர். இன்னார் அச்செய்யுளின் அகச்சான்றை துருவி—துருவி ஆராயாது வாதிக்கும் போலித் துறவிகளே என்று கூறுதல் மிகையாகாது.

அதே பாவில் பட்டினத்தார் எல்லாத் துறவறத்திலும் “அகத் துறவே சதகோடி” என்று கூறுவதை யுணராதவர்க்கு யாது கூறினால் விளங்குமோ? அறிகின்றிலே மல்லேம்.

மற்றும், பட்டினத்தடிகளே பெண்களை மாயை என்று கருதி இருந்தால் அவர் தாயும், ஓர் மாயையன்றோ! மாயையாயின் அன்னை யுயிர்நீத்தபோது அருளிய,

"ஐயிரண்டு திங்களாய் அங்கமெலா நொந்துப் பெற்றப்
பைய லென்றபோதே பரிந்தெடுத்துச் செய்யவிரு
கைப் புறத்திலேந்திக் கனகமுலை தந்தாளை
யெப்பிறப்பிற் காண்பே னினி."

என வரூஉம் செய்யுளால், பெண் மாயையாயின் மீண்டும் அம்மாயையை உலகினில் உதிக்க விழைவதேன்?

பின்னர் பிறப்பது மிறப்பதும் நெறியுடன் வாழ்வதும் இடர்பட்டு வாடுவதும் யாவும் சிவமயமே என்ற உண்மையை,

"வீற்றிருந்தா ளன்னை வீதிதனி லிருந்தான்
நேற்றிருந்தா ளின்று வெந்து நீறுனள்—பாற்றெளிக்க
வெல்லீரும் வாருங்களே தென்றிரங்காமல்
எல்லாம் சிவ மயமேயாம்."

என வருஉம் பாவால் யுணர்த்தினர் என்று தெளிந்துகொள்க. மற்றும் இவரே கலை யுணர்வும் கற்பின் திட்பமும் உடைய பெண் அணங்குகளை தெய்வமாகவும், தாயாகவும் போற்றியும், அறிஞரும் அஃதேபோல் போற்றுவா ரென்றுணர்த்திய நயத்தை யுணர்தற் பாற்று.

"பேய்போற் றிரிந்து பிணம் போற் கிடந்திட்ட பிச்சையெல்லாம்
நாய்போ லருந்தி நரிபோலுழன்று "நன்மங்கையரைத்
தாய்போற் கருதி"த் தமர்போ லனைவர்க்கும் தாழ்மை சொல்ல
சேய்போ லிருப்பர் கண்டீருண்மை ஞானந் தெளிந்தவரே."

என இவ்வொரு பாட்டினாலே பட்டினத்தாரின் உள்ளக்கிடக்கையை யறிந்து இனியேனும் போலித் துறவைக் கொள்ளாது உண்மைத் துறவாகிய அகத் துறவைக் கொள்ளுதலே சால சிறப்புடைத்தாம்.

ஓ! தமிழ் அன்பர்களே! இனியேனும் பெண்களை யடிமை பேய்களாக் காது பெண் தெய்வங்களாக திகழ உரிமையும், கலைப் பயிற்சியும் செவ்விய முறையில் நல்குமின், அவர்களுக்கு உரிமையும், கல்வியும் நல்காது காமத் துக்காகத் தோன்றினர் என்று எண்ணுது; எல்லா வழியிலும் அவர் முன்னேற்றம் அடைய தமிழ் அன்பர் உழைமின்கள். நம் நாடும் அவர் கையிலே தான் உள்ளது. அவர் உரிமை அடைந்தால் நாடு விடுதலை யடையும். விடுதலைக்கு பெண் தெய்வமாகிய பாரத அன்னையின் இனத்தவராகிய நம் நாட்டு பெண்களை தெய்வம் என்று போற்றுமின்—போற்றுமின்—போற்றுமின்.

'சத்தியும் சிவமும் ஆய தன்மை இவ்வுலக மெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உயர் குண குணியுமாக
வைத்தனன் அவனால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை யெல்லாம்
இத்தையும் அறியார் பீட லிங்கத்தின் இயல்பும் ஓரார்.'

(சிவஞான சித்தியார்.)

---

# நோயணுகா விதிகள்

(கே. எஸ். வாஸன்.)

நாம் நோயற்ற வாழ்வை அடைவதற்குக் கவனிக்க வேண்டிய சில முக்கிய விதிகள் வருமாறு:—

1 தெய்வபக்தி 2 சுவாசித்தல் 3 ஜலமலசுத்தி 4 ஸ்நானம் 5 ஆகாரம் 6 சரீர உழைப்பு, 7 நித்திரை.

1 தெய்வபக்தி:—நம்மையும் உலகத்திலுள்ள மற்றெல்லாவற்றையும் சிருஷ்டித்த கருணைக்கடலாகிய கடவுளின் அன்பிற்குப் பாத்திரவானாக அவருடைய கிருபா கடாக்ஷத்தைப்பெற முயலவேண்டும். சன்மார்க்கமே தெய்வ பக்திக்கு முதற்காரணம். தினசரி படுக்கையிலிருந்து காலையிலெழுந்த உடனும் இரவு படுக்கைக்குப் போகுமுன்னும் கடவுளை வணங்கி நாம் செய்த பாவங்களுக்காக மன்றாடி சத் கருமங்களையே மனம் செய்யும்படி அனுக்கிரகம் செய்யப் பிரார்த்தனை செய்யவேண்டும்.

எல்லா ஜீவராசிகளிடத்தும் ஜீவகாருண்யம் தயை இரக்கம் பட்சம் உள்ளவர்களா யிருக்கப் பழக வேண்டும். ஒழிந்த நேரங்களில் மனமானது கெட்ட எண்ணங்களில் பிரவேசியாமல் கடவுளையே தியானிப்பவர்கள் மனச் சஞ்சலமின்றி வாழலாம். தன்னைப்போல் பிறரையும் நேசித்து ஒருவருக்கும் தீங்கு செய்யப்படாது. மத ஆசாரக் கொள்கைப்படி கடவுளை வணங்கும் வழிகளை அனுசரித்து தவறாதபடி ஒழுங்காய் நடந்து வரவேண்டியது மிகவும். அவசியம் தரித்திர காலத்திலும் நோயுள்ள காலத்திலும் கஷ்டம் நேர்ந்த காலத்திலும் கடவுளினுடைய உதவியை நாடுதலும் சுகமுற்றிருக்குங் காலங்களில் கடவுளை நினையாம லிருப்பதும் பெரும் மோசமானதால் எக்காலத்திலும் கடவுளிடத்தில் முழு நம்பிக்கையா யிருக்கவேண்டும் நம சக்திக் கியன்றவாறு தர்மமும் செய்யவேண்டும். ஏனெனில் தர்மமே தலைகாக்கும் என்னும் நீதிவாக்கியப்படி நம்மால் செய்யப்படும் தர்மந்தான் நமக்குத் திடீரென்று ஏற்படும் ஆபத்துக் காலங்களிலும் நோயுற்ற காலங்களிலும் ஆதரவளிக்கும். நம்மிலும் ஏழையாயுள்ளவர்களும் தாழ்ந்தவர்களும் உலகத்தில் எவ்வளவோ பேரிருக்கிறார்கள். ஆதலால் கடவுள் நம்மை இந்த ஸ்திதியிலாவது வைத்திருக்கிறாரே என்று மனத்திருப்தியோடே நம்மிலும் ஏழையாயுள்ளவர்களுக்கு நம்மால் எந்தெந்த வகையி லுதவி புரியக் கூடுமோ அவ்வித உதவியையும் மன சந்தோஷத்துடன் செய்து வரவேண்டும்.

2 சுவாசித்தல்:—சகல ஜீவராசிகளின் பிராணனுக்கு முக்கிய ஆதாரமானது நல்ல காற்று, நாம் சுவாசிக்கும் காற்றானது பரிசுத்தமுள்ளதாயிருக்கவேண்டும். துர்க்கந்தமான காற்றைச் சுவாசிப்பவர்களுக்கு ரத்தம் கெட்டு க்ஷயம் காஸம் முதலிய பல வியாதிக ளேற்படுகின்றன. ஆதலால் நாம் வசிக்கு மிடங்களில் கெட்ட காற்று வீசாதபடி அசுத்தங்களை நீக்கி சுத்தமா யிருக்கவேண்டும். துர்க்கந்தத்தை யுண்டாக்கக்கூடிய எவ்விதப்

பொருள்களையும் நாம் வாசஞ்செய்யும் சுற்று பக்கங்களில் போட்டு வைக்கக் கூடாது. நாம் வாசஞ்செயயும் இடங்களின் சுற்றுப்பக்கங்களில் இடமிருந்தால் பூஞ்செடிகள் விருக்ஷங்கள் முதலியவை வைத்திருக்கலாம். ஏனெனில் மரங்கள் பூஞ்செடிகள் முதலியவைகள் நாம் சுவாசித்து வெளியிடும் கெட்ட காற்றை உட்கொண்டு நமது தேகத்துக்கு சுகத்தைத் தரக்கூடிய நல்ல காற்றை அவைகள் வெளியிடுகின்றன. மனிதருக்குக் கடவுள் செய்திருக்கும் உபகாரங்களில் இதுவுமொன்று. கடற்காற்றும் அநேகவியாதிகளுக்கு மிகுந்த நன்மையைத் தருகிறது. நாம் ஆகாரமில்லாமல் அநேகநாள் ஜீவித்திருக்க முடியும்; ஆனால் நல்லகாற்று இல்லாமல் சில நிமிடங்கள் கூட ஜீவிக்க முடியாது. ஆதலால் ஒவ்வொருவரும் கூடியவரையில் எப்பொழுதும் சுத்த காற்றை சுவாசிக்க முயற்சி செய்யவேண்டும்.

3 ஜலமலசுத்தி:—நமது சரீரம் ஆரோக்கியமாயிருப்பதற்கு ஜலமல சுத்தி ஒழுங்காயிருக்கவேண்டும். நமது தேகத்திலிருக்கும் துர்நீர்களையும் அசுத்தத்தையும் நீக்கி தேகத்தை காப்பாற்றவே கடவுள் ஜலமலசுத்தியை இயற்கையாயமைத்திருக்கிறார். இவை ஒழுங்கீனப் பட்டால் அவைகளிலிருந்துண்டாகும் துர்க்கந்தங்கள் இரத்த நரம்புகளின் வழியாய் சரீரத்தில் பரவி நானாவித வியாதிகளையுண்டாக்குகிறது. ஜலமலசுத்தி தடைபெறுவதாலுண்டாகும் கெடுதல்கள் உடனே சரீரத்தில் தோன்றாவிடினும் நாளுக்குநாள் அதிக கஷ்டத்தையும் நஷ்டத்தையும் ஏற்படச் செய்யும். ஆதலால் நாம் சாப்பிடும் ஆகாரத்தினாலேயும் மருந்து முதலியவைகளினாலேயும் இதைக் கவனித்து ஒழுங்கு படுத்தி வரவேண்டும்.

4 ஸ்நானம் தந்தசுத்தி:—தந்தசுத்தி செய்வதற்கு ஆலும்வேலும் பல்லுக்குறுதி என்றபடி ஆலம் விழுது வேல் வேம்பு முதலிய குச்சிகளின் நுனியை பஞ்சுபோல் மிருதுவாகச் செய்து அவற்றால் பல் துலக்கவேண்டும். அல்லது சாஸ்திர விதிப்படி தயாரிக்கப்பட்ட பற்பொடியை உபயோகிக்கலாம். சிலர் செங்கல் பொடி மணல் சாம்பல் முதலியவைகளை பல் துலக்குவதற்கு உபயோகிக்கிறார்கள். அவைகளில் சிறு மண் கல் முதலியவைகள் சேர்ந்திருப்பதால் அவைகளால் பல் தேய்க்கப்படும் பொழுது பல்லுக்குப் பக்கபலமாயிருக்கப்பட்ட எகிர் முதலியவைகளைக் கரைத்து விடுவதுடன் பற்களும் கொஞ்சகாலில் தேய்வடைந்து விடும். பற்களானது நாம் சாப்பிடும் போது வஸ்துக்களை மென்று சாப்பிட உபயோகப்படுவதால் ஜீரணக்கருவிகளுக்கு அனுகூலமுள்ளதாயுமிருக்கிறது. பல் இழந்தவன் சொல் இழந்தான் என்றபடி பல் இல்லாவிட்டால் முகத்தின் அழகு போய்விடும். ஆகாரம் சாப்பிட்ட பின்பும் வேறு பதார்த்தங்கள் சாப்பிட்ட பின்பும் சாப்பிடப்பட்ட பதார்த்தங்கள் பற்களின் சந்துகளில் படிந்திருக்குமாதலால் வாயைப் பலதரம் கொப்பளிக்க வேண்டும். பல் இல்லாதவன் பவுசு கெட்டான் என்றபடி பலதரம் வாயைக் கொப்பளித்து ஊத்தை அடையாதிருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்யா விட்டால் பற்களின் சந்துகளில் படிந்திருக்கும் பதார்த்தங்களில் கிருமிகளேற்பட்டு பற்களையும் கெடுப்பதுடன் வாயிலும் துர்க்கந்த மேற்படும். ஆகையால் பற்களை எப்பொழுதும் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும்.

நமது சரீரத்திலுண்டாகும் துர்நீரானது வியர்வையாக தேகத்தின் மேல் கண்ணுக்குத் தெரியாமலிருக்கிற அளவற்ற ரோமத் துவாரங்களின்



வழியாய் வெளியாகிறது. வியர்வையும் நமது மேல்வீசும் காற்றிலுள்ள சிறு தூசிகளும் ஒன்று சேர்ந்து நமது தேகத்தில் அழுக்காய்ப் படிந்து விடுகிறது. இவ்வித அழுக்கை ஸ்நானத்தினால் அவசியம் தினம்தோறும் நீக்கவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அழுக்கானது சரீரத்திலுள்ள மயிர்க் கால்களை அடைத்து துர்நீர்களை வெளிப்படுத்த தடைசெய்வதுடன் நாம் உடுத்தும் வஸ்திரங்களின் பேரிலும் பட்டு துர்க்கந்தத்தை உண்டாக்கும். இதனால் நமது மனதுக்கே ஒருவித அருவருப்பு ஏற்படுவதுடன் நமது பக்கத்திலுள்ள மற்றவர்களுக்கும் ஓர்வித அருவருப்பும் நம்மீது உண்டாகும். இதுவுமல்லாமல் பலவித வியாதிகளை உண்டாக்குவதற்கும் அது அனுகூலமாயிருக்கிறது. நமது சரீரம் வஸ்திரம் முதலியவைகளை எப்பொழுதும் சுத்தமாய் வைத்திருக்க வேண்டும். பிரதிதினமும் சுத்த ஜலத்தில் அவரவர்கள் தேகக் கூறுக்குத் தக்கபடி தண்ணீரிலாவது வெந்நீரிலாவது தேகத்திலுள்ள அழுக்கு போகும்படி ஸ்நானம் செய்ய வேண்டும். ஸ்நானம் செய்வது அதிக நேரப்படாமலும் அல்லது காக்கை முழுகுவதுபோல் அழுக்கு தேய்த்து குளிக்காமலும் ஸ்நானம் செய்வதும் கெடுதலே. சுமார் 15 நிமிஷத்திற்குள் ஸ்நானம் செய்து தலையையும் உடம்பையும் நன்றாய் துவட்டி வேறு உலர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ள வேண்டும். ஸ்நானம் செய்தபின் ஈரமாயிருக்கும் வஸ்திரத்தைக் கட்டிக் கொண்டிருக்கக் கூடாது. ஸ்நானம் செய்வதற்கு காலை நேரமே சிறந்தது: தினந்தோறும் காலையில் சுத்தஜலத்தில் ஸ்நானம் செய்து வருபவர்களுக்கு அன்றாடம் தேகத்தில் உண்டாகும் உஷ்ணம் ஒழிவதுடன் மூளைக்கும் மற்ற அவயவங்களுக்கும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும். தேகத்தில் சொறி சிரங்கு முதலிய வியாதிகள் வரவொட்டாமல் தடுப்பதுடன் அவ்வித வியாதியிருந்தாலும் அதையும் குணப்படுத்தும் சமுத்திர ஜலஸ்நானம் சிலவியாதிகளுக்கு நன்மையைக் கொடுக்கும். கிடை தண்ணீராய் துர்க்கந்தமுள்ள ஜலத்தையுடைய குளம் குட்டைகளில் ஸ்நானம் செய்யக்கூடாது. ஸ்நானம் செய்யப்படும் ஜலத்தில் சந்தேக மேற்பட்டால் அந்த ஜலத்தை நன்றாக சுடவைத்து ஸ்நானம் செய்தால் அந்த தண்ணீரிலுள்ள தோஷங்கள் நிவர்த்தியாகும். வாலிபர்களும் பலமுள்ளவர்களும் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்யலாம். வியாதியிலிருந்து சுகப்படுகிறவர்கள் பலஹீனர்கள் பலசாலிகள் முதலியவர்களுக்குக் கடல் நீர் ஸ்நானம் செய்யத்தகுந்தது. நோயுள்ளவர்கள் வெந்நீர் ஸ்நானமும் கருப்ப ஸ்திரீகள் இளஞ்சூடான வெந்நீர் ஸ்நானமும் செய்யவேண்டும். குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்கிறவர்கள் முதலில் முகம் கழுத்து கை மார்பு முதலியவைகளை முதலில் நனைத்துக் கொண்டு மற்ற பாகங்களை ஜலத்தில் நனைக்கவேண்டும். குளிர்ந்த ஜல ஸ்நானத்தினால் இரத்தம் வேகமாயோடி தேகமெங்கும் வியாபிப்பதுடன் மூளை நுரையீரல் முதலிய இடங்களில் இரத்தக்கட்டுகளிருந்தாலும் நீங்கும். 'கூழாயினும் குளித்துக் குடி; கந்தையானாலும் கசக்கிக்கட்டு' என்ற ஆன்றோர் வாக்கியத்தை ஒவ்வொருவரும் அவசியம் நன்றாய்க் கவனித்தல் வேண்டும்.

5 ஆகாரம்:-உயிரைக் காப்பாற்றுவதற்கும் நமது சரீரம் பலமுள்ளதாயிருக்கவும் சரீரத்திலுள்ள அவயவங்கள் தளர்ச்சியடையாமலிருப்பதற்கும் ஆகாரம் மிகவும் அவசியம். நமது சரீரத்திலிருந்து வியர்வை மலஜலம் முதலியவைகள் இயற்கையாய் நாள்தோறும் வெளிப்பட்டு விடுவதால் நமது தேகம் இளைத்துப் போகாதபடிக்கு வெளியில் கழிந்து போன வஸ்துகளுக்குப் பதி

லாக ஆகாரத்தை உட்கொண்டால் தான் தேகவலுவுள்ளதாக யிருக்கக்கூடும். அவரவர்கள் அந்தஸ்துக்கு தக்க போஜனத்தைச் செய்து காலாகாலங்களில் ஒழுங்காயும் மிதமாயும் சாப்பிட வேண்டும். அன்னமிட்டுண் என்ற பெரியோர் வாக்கியப்படி நாம் போஜனம் செய்யுமுன் ஏழைகளுக்கு அன்னமிட்டுச் சாப்பிட வேண்டியது முக்கியக்கடமை. 'மிகினும் குறையினும் கூடாவாம்" என்றபடி ஆகாரத்தை அளவிற்கு மிஞ்சியும் குறைத்தும் சாப்பிடக் கூடாது. "நாவிற்கு ருசியாயிருந்தது அதனால் அதிகம் சாப்பிட்டு விட்டேனென்று சிலர் சொல்லுகிறார்கள். "அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்றபடி எந்த வஸ்துவும் அளவிற்கு மிஞ்சினால் கெடுதல் செய்யும். பசி எடுக்கும் பொழுது சாப்பிடவேண்டிய காலங்களில் பல காரணங்களால் சாப்பிடாமலிருந்து விட்டு பசி யடங்கியபின் சாப்பிட்டால் அஜீரணம் வயிறுப்பிசம் வயிற்றுப்போக்கு வயிற்றுவலி முதலிய பல வியாதிகளுண்டாகும்; ஆதலால் சாப்பிடவேண்டிய நேரத்தை ஒழுங்கு படுத்திக் கொள்ளவேண்டும். நாம் சாப்பிடும் ஆகாரம் இரைப்பையின் அளவிலிரண்டு பங்கும் ஜலம் ஒருபங்கும் மீதம் ஒருபங்கு வாய்வு சஞ்சரிக்கும் படியும் விடவேண்டும். நாம் சாப்பிடும் ஆகாரத்தை யாதொரு மனக்கவலையு மில்லாமல் சந்தோஷமாய் போஜனத்தை நன்றாய் மென்று உமிழ் நீரோடு கலந்தபின் விழுங்க வேண்டும். இவ்விதம் சாப்பிடுவதால் சீக்கிரம் ஜீர்ணமாகும் முதல் சாப்பிட ஆகாரம் ஜீரணமாகாமல் புளியேப்பம் வயறுப்பிசம் முதலியவை காணப்பட்டால் ஆகாரத்தையாவது வேறு பதார்த்தங்களையாவது அப்பொழுது சாப்பிடக்கூடாது. முதலில் சாப்பிட்ட ஆகாரம் நன்றாய் ஜீரணமானதாகத் தெரிந்தபின்பே மறுமுறை சாப்பிடவேண்டும். சாப்பிட்டவுடன் சிறிதுநேரம் உலாவவேண்டும். உண்டகளைப் புத் தொண்டருக்கும் உண்டு என்றபடி போஜனம் செய்தவுடன் யாதொரு கடினவேலையும் செய்யக்கூடாது. சாராயம் கள் முதலிய மதுபானங்களையும் புகைச்சுருட்டு அபின் கஞ்சா முதலிய பல லாகிரி வஸ்துக்களையும் உபயோகித்தால் பலவித வியாதிகளும் மூர்க்கதனமும் நரம்புத் தளர்ச்சியும் சுகக்கேடும் பொருள் விரயமும் உண்டாவதுடன் கஷ்டம் தெரிந்தபின் அந்தக் கெட்ட பொருள்களைச் சாப்பிடாமல் நிறுத்துவதற்கும் மிகுந்த கஷ்டமாயிருக்கும்.

6 சரீர உழைப்பு:—நாம் ஜீவிப்பதற்கு ஆகாரம் எவ்வளவு அத்யாவசியமோ அதைப் போலவே தேகம் ஆரோக்கியமா யிருக்க சரீர உழைப்பு அவசியம். ஒவ்வொருவருடைய தொழிலுக்கு ஏற்றபடி சரீர உழைப்பு ஏற்படுகிறது. அவரவர்கள் தேகத்திற்குத் தக்கபடி சரீர உழைப்பு இருக்கவேண்டும். சரீர உழைப்பில்லாமல் புத்தி கூர்மையினால் தொழில் செய்பவர்களும் தங்களுடைய தேகத்திலுள்ள உறுப்புகள் சரியான நிலைமையிலிருக்க தேகாப்பியாசம் செய்யவேண்டும். அநேக தனவந்தர்கள் சரீர உழைப்பில்லாமலும் தேகாப்பியாசம் செய்யாததாலும் அவர்களுடைய சரீரம் பலமற்றதாய் ஸ்தூலித்துப் போயிருப்பதுடன் பலவித வியாதிகளுக்கு உள்ளாகிறார்கள். ஆதலால் சரீர அப்பியாசம் மிகவும் அவசியம். சரீர அப்பியாசத்திற்கு காலை நேரமே சிறந்தது ஏனெனில் காலையில் சரீரத்தின் ஒவ்வொரு தத்துவமும் தன் தன் ஒழுங்கான நிலையிலிருக்கும். சரீர அப்பியாசம் செய்ய ஈரமில்லாத பூமியும் சுத்தமான காற்றுமுள்ள இடமா யிருக்கவேண்டும். போஜனம் செய்த பின்பாவது வயிறு அஜீரணமாயிருக்கும் காலத்திலாவது எவ்வித தேக



அப்பியாசமும் கூடாது. தேக அப்பியாசம் செய்து வருவதால் ஜீரணக்கருவிகளும் மற்ற அவயவங்களும் நல்ல பலத்தைப் பெற்றுத் தேகத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும். கடினமான சரீர உழைப்பு இல்லா ஒவ்வொருவரும் கூடுமானவரையில் தங்கள் தேகஸ்திதிக்குத் தக்கபடி சரீர அப்பியாசம் செய்ய வேண்டும்.

7 நித்திரை, பகல்முழுதும் நாம் பல வேலைகள் செய்து கொண்டிருப்பதால் நம்முடைய தேகத்தி லிருக்கும் எல்லா அவயவங்களும் களைத்துப் போகின்றன; ஆதலால் அவைகள் இளைப்பாற நாம் நித்திரை செய்யவேண்டும். நித்திரை செய்து எழுந்தவுடன் களைப்புநீங்கி நமது அவயவங்களுக்குப் புதுப் பலம் உண்டாகிற படியால் நித்திரை சரீர சுகத்துக் கவசியமானது. எல்லா இன்பத்தின் இன்பங்களிலும் பெரிய இன்பம் நித்திரை. ஒருவர் நித்திரையினால் அடைந்த சுகத்தை மற்றவர்களிடம் விவரித்துச் சொல்ல முடியாத விஷயமா யிருக்கிறது. பகலில் நித்திரை செய்வதும் இரவில் அதிகநேரம் கண் விழித்திருத்தலும் சரீர சௌக்கியத்திற்குக் கெடுதியே. நித்திரைக்குப் போகுமுன் கடவுளைத் தியானித்தபின்பே நித்திரை செய்ய வேண்டும். நித்திரை செய்வதற்குப் படுக்கையில் படுத்தபின்பு குடும்ப விவகாரங்களையும் மற்ற கவலைகளையும் நினையாமல் சந்தோஷமாய் நித்திரை செய்ய வேண்டுமென்ற ஒரே நினைப்புடன் மனம் இருக்கவேண்டும். நித்திரை செய்யும்போது நமது அவயவங்கள் தளர்ச்சியாயிருக்கும்படி வஸ்திரத்தை அணியவேண்டும். சரீரத்திலுள்ள நரம்புகளை அழுத்தும்படி வஸ்திரத்தை அணிந்து கொண்டு படுத்து நித்திரை செய்தால் இரத்த ஓட்டம் குறைவுபடும். படுக்கும்போது எப்பொழுதும் இடது கைப்பக்கமே சரீரத்தை ஒருக்கணித்துப் படுக்க வேண்டும். இப்படிப் படுப்பதால் இரைப்பை நீர்ப்பை பித்தப்பை முதலிய ஜீரணக் கருவிகள் அதனதன் ஸ்தானத்தில் சுகமான நிலைமையி லிருக்கக்கூடும். இரண்டு கைகளையும் கால்களின் மத்தியில் வைத்துக் கொண்டாவது முகத்தை வஸ்திரத்தால் மூடிக் கொண்டாவது மேடுபள்ளமான படுக்கையிலாவது வெட்ட வெளியிலாவது காற்றோட்ட மில்லாத அறையிலாவது படுக்கக்கூடாது; அதனால் நித்திரைக்குப் பங்கமேற்பட்டு சரீரத்துக்குப் பலவித வியாதிகளேற்படும். அடிக்கடி இரவில் நடக்கும் தமாஷ் வேடிக்கைகளைப் பார்க்கச் செல்லக் கூடாது. நாம் நித்திரை செய்யும் படுக்கை தலையணை போர்வை துப்பட்டி இவைகள் சுத்தமாயும் வெண்மையாயும் இருக்க வேண்டும். தரையில் படுக்காமல் சற்று உயரமான படுக்கைகளில் படுப்பது சிரேஷ்டமானது. படுக்கை யறையானது ஒடுக்கமுள்ளதா யிராமல் விசால முள்ளதாயும் நல்ல காற்றோட்ட முள்ளதாயுமிருக்கவேண்டும். நோயுள்ளவர்கள் படுத்திருக்கும் அறையில் சுகசரீரிகள் நித்திரை செய்யக்கூடாது. பழைய கட்டிடங்கள் மரங்கள் மலையடிவாரங்கள் முதலியவைகளின் கீழும் படுத்துறங்கக் கூடாது. வெள்ளெனத் துயின்று விடியுமுன் னெழும்பு என்றபடி இரவில் சீக்கிரத்தில் படுக்கைக்குப்போய் அதிகாலையி லெழுந்திருக்க வேண்டும். இராக்காலத்தில் 10 மணிக்கு முன் நித்திரைக்குப்போய் உதயம் 5 மணிக்கு முன் நித்திரை விட்டெழுந்திருப்பது நல்ல வழக்கம். மேலே கண்ட சுகாதார முறைமைப்படி ஒவ்வொருவரும் அனுஷ்டிப்பாரானால் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வ முடையவராய் சுகித்திருக்கலாம்.

# கம்பர் கண்ட கடவுள் நிலை

(திருமலை-இராமாநுஜன்.)

நம் தமிழகத்தில் தலை சிறந்த புலவர் பலரது சரிதம் இன்றும் சரியானபடி தெரிந்த பாடில்லை. அவை யாவும் இடையில் பலரால் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் புதுக்கியும் வழங்கப் பட்டு வருகிறது. ஒன்றிற் கொன்று முரண்பாடான செய்திகள் பல ஒவ்வொருவர் சரிதக் குறிப்பிலும் காணக் கிடக்கும். சரித்திர உணர்ச்சி மிக்கு, தம் சரிதத்தைத் தாமே எழுதியும் பிறரைக் கொண்டு எழுதுவித்தும் வருகிற மேனாடுகளிலும் கூட அண்ணிய சில நூற்றாண்டுகட்குள் இருந்த புலவர்தம் ஜீவியத்தைப் பற்றி முற்கூறிய வேறுபாடுகளைக் காண நேரிடும் நாம், இது குறித்து நம்மவர் மீது குறை கூற நியாயம் இல்லை.

இவ்வாறாக, இன்று ஒரு புலவரது கொள்கை பற்றியோ அன்றி வரலாறு பற்றியோ துணிந்து கூற வேண்டும் எனில், எளிதில் இயலுவது ஒன்று அன்று அது. எனினும் அவரவர் இயற்றிப் போந்த நூல்களில் உள்ள சிற்சில குறிப்புக்களைக் கொண்டு, அவரவரது சாதி குலம் சமயம் முதலியவற்றை ஒருவாறு ஊகித்து அறிதல் கூடும்.

இம்முறையில் கம்பரது சமயத்தைப் பற்றிய சில குறிப்புகள் அவர் இயற்றிய இராமாயணத்தில் உள்ள சிறு சிறு பகுதிகளின் மூலம் நன்கு தெளியக் கிடக்கும். கம்பர் இராம பக்தி மிக்கவர்; வைணவர்; வைணவ மதக் கொள்கைகளை பற்பல இடங்களில் தழுவி நூலை இயற்றிச் சென்றிருக்கிறார்; பிறப்புரிமைக் கொள்கையை அடியோடு மறுப்பவர்; ஒழுக்கத்தால் உயர்வு தாழ்வு கருதும் கோட்பாட்டினர். நம்மாழ்வார் மீது 'சடகோபரந்தாதி' என்னும் நூலை இயற்றியுள்ளமையும், 'கம்ப நாட்டாழ்வார்' என்னும் பெயருண்மையும், இராமபிரானைப் பரம்பொருளாகச் சொல்லியுள்ளமையும், பிறவும் முற்கூறியதனை வலியுறுத்தும். எனவே கம்ப நாடார் கடவுளின் நிலையைப் பற்றிக் கொண்டிருக்கும் கருத்துக்களை நாம் இது பொழுது ஆராய்தல் பெரிதும் பயனுடையதாகும்.

நம் நாட்டிடைக் கடவுளைப் பற்றிய கொள்கைகள் பல பல வுண்டு. சாதியாலும் வேள்வியாலும் தக்கோராய ஒரு கூட்டத்தினராலே கடவுளை அடைய முடியும் என்பது ஒரு மதம் உடையார் கூற்று. பிறிதொரு சாரார் இதனொடு மாறுபடுவர். 'இறைவன் சாதிகுலம் ஆகிய வேறுபாடு கருதுவது இல்லை; ஒழுக்கம் ஒன்றே கொள்ளுவன்' என்பர் இவர். ஒரு குரங்குக் குட்டி எவ்வாறு தன் தாயை இறுகத் தழுவிக் கொண்டிருக்கிறதோ அம்மாதிரி நாமும் இறைவனை சிக்கெனப் பிடித்துக் கொள்ளுதல் வேண்டும்; அல்லாக்கால் குட்டி எவ்வாறு தாயினாற் பேணற்பாடு அழிந்து அல்லல் உறுகின்றதோ



அது போல நாமும் அல்லல் அடைய வேண்டும் என்பர் ஒருவர். மற்றவர் இதனை மறுத்து, இறைவன் அருளும் திறத்தினை வேறுபடுத்தி வழங்குவர். ஓரிடத்து இட்ட தன் குட்டியை ஒப்புகின்ற பூனை எவ்வாறு, குட்டி தன்னை நினையாதிருக்கச் செய்தேயும் அதனைப் பொருட் படுத்தாது, அல்லும் பகலும் அதுவே சிந்தனையாய் பல இடங்களிலும் தூக்கித் தூக்கிச் சென்று வைத்துக் காப்பாற்றுகின்றதோ அஃதொப்ப இறைவனும், நம்முடைய நிலை கவனியாது குற்றங்களை எல்லாம் குணம் எனக் கருதி ஆட் கொள்ளுவன் என்பர். இத் திறத்தார்க்கு, இறைவன் இயல்பு அடியார் பயன் அன்றாகிலும் பாங்கு அலராகிலும் செயல் என்றாகத் திருத்திப் பணி கொள்ளுதலே என்பது கருத்து.

முற்கூறிய இவ்விரண்டனுள் குல நலம் பேணாதாட் கொள்ளும் குணமும், பூனை ஒப்ப தீயோரிடத்தும் அருள் செய்தலாகிய தன்மையும் வைணவ மதத்தின் ஜீவ நாடி—உயிர் நிலை. குல நலம் பேணி ஆட்கொள்ளும் அது பிறப்பிரிமைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டெழுவது; அது வைணவ மதத்தில் ஒரு சிறிதும் இடம் பெறுதல் இல்லை; 'அழுக்கு வேடுவர் குரக்கினம் அரக்கர் என்றிவரோடு இழுக்கிலாது உடன் பிறப் பெனக் கலந்து ஒழுக்கம் அல்லது விழுப்பம் வேறில்லை' என உணர்த்தியவன் இராமபிரான்.

வீடணன், தன் தமயன் நெறியலா நெறி செல்வதை உணர்ந்து வருந்தினான்; அவனுக்கு எத்தனையோ நல்லுரைகள் எல்லாம் பகர்ந்தனன்; 'அறிவுடை அமைச்சன் நீ அலை' என்ற மறு மொழி அவனிடம் இருந்து வந்தது; இனி இத் தீய செயல்களுக்கு நாம் உடன் நின்று இடங் கொடுத்ததாக முடியக் கூடாது என்று கருதிய அவன், இராமன் இடம் சென்று அடைக்கலம் அடைவதே அமைவுடையதெனச் சிந்தித்து அவ்வாறே அடைக்கலம் புகுந்தான்

அது கண்ட இராமபிரான் சுக்ரீவன் முதலியோருடன் இவனை ஆட்கொள்ளுவது குறித்து ஆலோசனை நிகழ்த்தி இறுதியில் ஆட்கொள்ளுதல் வேண்டும் எனத் தீர்மானித்து, "நீயே கோதிலாதவனை என்பாற் கொணர்தி" எனச் சுக்கிரீவனை நோக்கிக் கூற, அவன் வீடணனிடம் சென்று 'ஐயன் ஆட்கொண்டான்' என்று தெரிவித்த உடன் வீடணன் பெரு மகிழ்ச்சியுடன் இராமனது வரங்களின் வாரியன்ன தாளிணையில் வந்து அடியற்ற மரம் என வீழ்ந்து வணங்குகின்றான்.

பின்னர் மலர்க்கையால் அவனுக்கு இருக்கை ஈந்து, இருக்கச் செய்து, அவனை நோக்கி உவகையொடு 'ஏழினோடு, ஏழாய் நின்ற உலகும் என் பெயரும் எந்நாள் வாழுநாள் அன்று காறும் தாழ்கடல் இலங்கைச் செல்வத்தை நின்னதாகத் தந்தேன். எற்றுக்கொள்' என்றான். இதனை அடுத்து பின் வரும் பாடல் கவிக் கூற்றாகக் காணப் படுகிறது. இதுவே நம் ஆராய்ச்சிக்கு உரியது. அச் செய்யுள் வருமாறு:—

தீர்த்தன் நல் அருளை நோக்கிச்
செய்ததோ! சிறப்புப் பெற்றான்
கூர்த்த நல் அறத்தை நோக்கிக்
குறித்ததோ யாது கொல்லோ!

வார்த்தை அஃது உரைத்த லோடும்
தனித்தனி வாழ்ந்தோம் என்று
ஆர்த்தன உலகில் உள்ள சரா
சரம் அனைத்தும் அம்மா!

"இராமன் வீடணனை நோக்கி இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன் என்று கூறியவுடன், இவ் வுலகில் உள்ள சராசரம் அனைத்தும் தனித்தனி தாம் பெருவாழ்வடைந்ததாகக் குறித்து மகிழ்ந்தன! இதன் காரணம் தான் யாது! வீடணனது அறம் தான் ஆகுமோ! அன்றி நீர்த்தன் நல் அருளேயோ! முற்ற அறிகின்றேம் இல்லை" என்பது இச் செய்யுளின் தெளி பொருள்.

இவ் விடத்து, கதையினோடு ஒரு தொடர்பு மில்லாத கவிக் கூற்றாகிய இக் கவியை இங்கு அமைத்ததின் நயமும் வீடணனுக்கு இராமன் கூறியதாக உள்ள வார்த்தை கேட்டு தனித்தனிச் சராசரம் எல்லாம் வாழ்ந்தோம் என்று மகிழ்ந்ததாகக் கூறுவதன் பயனும் நன்கு சிந்திக்கத் தக்கது. அவ்வாறு காணும் இடத்து இறைவன் குலம் நலம் பேணாது ஆட் கொள்ளும் தன்மையும், தாழ்ந்தோரை உயர்த்துதற் கெனவே தான் அவதாரம் எடுத்த தத்துவமும் மலையிலக்கென விளங்குதல் காணலாம்.

வீடணன் மனிதரில் தாழ்ந்த அரக்கன். பாவி. வஞ்சகன், 'பஞ்செனச் சிவக்கும் மென்கால் தேவியைப் பிரித்த பாவி வஞ்சனுக்கு இளையன் என்னை வருக என்று அருள் செய்தானோ' என்று வீடணனே சுக்கிரீவனிடம் கூறி நின்றான். 'மூத்தவனாய் இருப்பினும் ஒரு வேளை ஆட் கொள்ளுதல் கூடும் என்பது' அவனது கருத்துப் போலும்! இராவணன் பயின்ற கருப்பத்தில் பத்து மாதம் வதிந்தவனாகையால், அவனது பாவமும் வஞ்சமும் தனக்குக் கண்டிப்பாய் ஏற்பட்டிருக்கும் என்பது அவனது உள்ளக் கிடக்கையாகும். இத்தகைய இழிந்தவனாய் உள்ள இவனிடத்துக் கருணை கொண்டு "நின்னொடும் எழுவரானோம்" என்று இராமன் உடன் பிறப்பாகக் கொண்டு பாராட்டினான்.

இது பொழுது, சராசரம் அனைத்தும் இறைவன் தாழ்ந்தோரை உயர்த்துவதே கடமையாகக் கொண்டான். தாழ்த்தப்பட்டவரை மேலும் மேலும் தாழ்த்த வேண்டும் என்பது அவனது நோக்கம் அல்ல: என்பதை நன்கு உணர்ந்து கொண்டன. இதுவரை 'தம்மை எல்லாம் உலகினர் உயிரற்றுத் தாழ்ந்ததாகக் கொண்டிருப்பதால் நமக்கு மோக்ஷம் கிடையாது' என்று கொண்டிருந்த எண்ணம் தலைக்காட்டாது ஓடிற்று. உடனே இறைவன் தாழ்ந்தோரைப் பணிகொள்ளும் நோக்குடன் மக்களில் தாழ்ந்த வீடணனை அடைந்தன்மையால், நம்மினும் தாழ்ந்த பொருள் ஒன்று உலகில் இல்லை; நம் தாழ்வு ஒன்றுமே அவன் ஆட்கொள்ளுதற்கு உகந்த காரணம் ஆயிற்று; ஆகவே நாம் வாழ்ந்தோம் எனத் தனி ஆர்த்திடலாயின என்பது இதனுட் பொதிந்துள்ள கருத்தாகும். இதனை எல்லாம் நன்கறிந்த கம்பநாட்டாழ்வார், நாம் உயர்ந்த பிறப்படைந்திருக்கிறோம்; இனி நமக்கொரு குறையும் இல்லை என்று இறுமாந்து ஒழுக்க ஈனமாய் அலைந்து திரியும் மக்கட்கு நல்லறிவு புகட்டவேண்டியே கவிக் கூற்றாக இச் செய்யுளை கண்டுப் பெய்து வைத்துச் சென்றார் போலும்!

# இந்து மதம்

('பியர்ஸ்')

'என்ன ஸ்வாமிகளே! 'பிரசண்ட விகடனில் துக்கடா கட்டுரைகள் எழுதி வந்ததை விட்டு விட்டு சமீபகாலமாய் வேதாந்த விஷயங்களைப் பற்றியும் மத ஆராய்ச்சியைப் பற்றியும் பேச்சுப் பேச்சென்று பேசப் புகுந்துவிட்டீர்கள்?' என்று சில நண்பர்கள் கேட்கலாம். மத விஷயங்களுக்கும் எனக்கும் வெகு தூரம். அதுவும் பலமான அஸ்திவாரத்துடன் பல்லாயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன் கட்டப்பட்ட கற்கோட்டையான இந்து மதத்தைப் பற்றி என் போன்றோர் சொல்லக் கூடிய தொன்றுமில்லை. இந்து மத பரிபாலன சபையின் ஆதரவில் ஓர் பெரியார் சின்னாட்கு முன் அரிய பெரியவோர் பிரசங்கம் செய்ததுடன், அவரைக் கேட்கவந்திருந்தோர் கேட்ட கேள்விகட்கெல்லாம் விடை பகர்ந்தார். அவற்றுள் சில முக்கியமானவற்றை மட்டும் நான் குறித்துக் கொண்டேன். அவை நண்பர்களின் மூளைக்குக் கொஞ்சம் வேலை கொடுக்குமெனக் கருதியதால் அவற்றை இங்கே வரையலானேன்.

கேள்வி:—இந்து மதம் எப்போது தோன்றியது?

பதில்:—மற்ற மதங்கள் எப்போது தோன்றின வென்று கேட்டால் என்னால் பதில் சொல்ல முடியும். சாதாரணமாக ஒவ்வொரு மதமும் ஒவ்வொருவர் பெயரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்து மதம் மட்டும் இவ்வாறில்லை யென்பதைக் கவனிக்க.

கேள்வி:—இந்து மதம் தனது கொள்கைகளை காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப மாற்றிக்கொள்ள இடமளிக்கின்றதா?

பதில்:—ஒருவன் தன் மனதறிய உண்மையென்று கருதுவதை எப்பொழுதும் செய்யலாம். உண்மைக்கு முக்கியத்துவம் அளித்திருப்பதாலென்க.

கேள்வி:—ஸ்மிருதி—ச்ருதி இவைகள் ஏற்படவேண்டிய காரணமென்ன?

பதில்:—அந்தந்த காலங்களுக்கேற்றபடி அனுசரணைகளை யேற்படுத்திக் கொள்வதற்காக. இரண்டாவது கேள்விக்கு இவைகள் போதிய சான்றாகும்.

கேள்வி:—ஆதிதிராவிடன் சண்டாளனா?

பதில்:—மத தர்மத்தை யனுசரிக்காமல் அநியாய வழியில் நுழைபவன் சண்டாளனாவான். ஒரு குறிப்பிட்ட ஜாதியாரைச் சண்டாளர்களென்று

தாழ்த்தி ஒதுக்குவது தர்மத்திற்கு விரோதமாகும். ஆகையால் அவ்வாறு ஒதுக்குபவர்கள் தான் சண்டாளர்கள்.

கேள்வி:—ஆதிதிராவிடர்களை எதற்காகக் கோவில் குளங்களில் அனுமதிக்க வேண்டும்.

பதில்:—நம்மைச் சண்டாளர்களாக்கிக் கொள்ளாமலிருப்பதற்காகத் தான்.

கேள்வி:—ஜாதிப் பிரிவுகள் ஏன் ஏற்பட்டன? அவைகளுக்குள் உயர்வு தாழ்வென்பதுண்டா?

பதில்:—வேலையில்லாத் திண்டாட்டம் அந்த நாளிலேயே ஏற்பட்டிருக்கவேண்டுமென்று நினைக்கிறேன். ஒரு பெரும் சமூகத்தினர் தங்களுக்குள் இன்னின்னார் இன்னின்ன தொழில் செய்வதென்று ஏற்படுத்திக்கொண்டது இயல்பே. எல்லோரும் ஒரே தொழிலிலிறங்கினால் அதனால் நன்மை பயக்காது. எல்லோருமே கடைவைத்தால் வாங்குபவர் யார்?

வியாபாரம் செய்ய வந்தவர்கள் ராஜ்யபாரம் செய்ய நேர்ந்ததுபோல் தொழிலுக்கென்று பல்வேறு ஜாதியாராகப் பிரிக்கப்பட்டவர்கள் நாளடைவில் தங்களுக்குள் உயர்வு தாழ்வு கற்பித்துக்கொண்டனர். இதை அவ்வப்பொழுது பல பெரியோர்கள் கண்டித்திருத்தலைக் காண்க.

கேள்வி:—புரோகிதர் யார்? புரோகிதம் அவசியமா?

பதில்:—புரோகிதர்கள் சுயமரியாதைக்காரர்களின் தாயாதிகள். புரோகிதம் அவசியமில்லை. குருத்வம் திரிந்து புரோகிதமாகியது. புரோகிதத்தை நீக்கி குருத்வத்தை மாத்திரம் நிறுத்திக்கொள்ளுதல் அவசியம். புரோகிதத்திற்கு ஜாதியுண்டு—குருத்வத்திற்கு அஃதில்லை.

கேள்வி:—சுயமரியாதை இயக்கம்—சமரச சன்மார்க்க இயக்கம் இவைகளைப் பற்றித் தங்கள் அபிப்ராயமென்ன?

பதில்:—சுயமரியாதையினர் சுயமரியாதை சம்பாதிக்கும் பொருட்டு மதத்தை வெறுக்க வேண்டியதில்லை. மதத்திலிருந்துகொண்டே மரியாதையடைவதுதான் மரியாதையாகுமே யொழிய, மதத்தைத் துறந்தோடிப் போவது சுயமரியாதையல்ல—சுத்த கோழைத்தனமாகும். இவ்வியக்கத் தலைவர்களிற் சிலர் அன்னிய மதங்களைத் தழுவுவது உசிதமென்று கூறுவதாகவும் தெரிகிறது. இது எவ்வாறு சுயமரியாதையாகுமோ நான் அறிகிலேன்.

சமரச சன்மார்க்க இயக்கம் சமய வாதத்தை யொழிப்பதற்காகத் தோன்றியதே யன்றி சமய வாழ்வை யழிப்பதற்கன்றென்றே எண்ணுகின்றேன். அப்படியாயின் அதற்கென்று தனியாக வொரு இயக்கம் துவக்கவேண்டியதில்லை. இவ்வியக்கத்தைத் தோற்றுவிக்காமலேயே சமய வாதம் தலையெடுக்கவொட்டாமற் செய்யலாம். ஒவ்வொருவர் ஒவ்வொரு நோக்கத்துடன் ஒவ்வொரு இயக்கத்தைக் கோலிக் கொண்டே போனால் போலித் தலைவர் பலர் தோன்றிப் பெருங்கேடு விளைவிப்பர். மதப் பற்றும் வேண்டாம்—மத வெறுப்பும் வேண்டாம் என்று ஆரம்பத்தில் சொல்லி வந்தாலும் நாளடை



வில் மதப் பற்று மட்டும் நீங்கி மதவெறுப்பு எஞ்சி நின்று இயக்கத்தின் நோக்கத்தை மிஞ்சிவிடும்.

மற்ற மதத்தினர் செய்வதுபோல் நம் மதத்திற்கு ஆள் சேர்க்கவேண்டிய அவசியமில்லை. நம் மதத்திலிருந்து வேறு மதங்களுக்குப் போகாதவாறு ஏற்பாடு செய்துகொண்டாற் போதுமானது. அதை விட்டு, அந்த இயக்கம் இந்த இயக்கம் என்று தோற்றுவித்து மக்களின் மனதை மருள வடித்துவிட்டால், ஒன்றும் தோன்றாமல் ஆள் சேர்ப்பதில் போட்டியிடத் தயாராய் வேலை செய்யும் மற்ற மதங்களிற் போய்ச் சேர்ந்துவிடுகிறார்கள். ஆகையால் புதிது புதிதாக வெவ்வேறு இயக்கங்கள் தோற்றுவதை விடுத்து மக்களுக்கு மத அறிவை யூட்டுவதில் கவனத்தைச் செலுத்தவேண்டும்.

கேள்வி:—நம் மடாதிபதிகள் குருஸ்தானத்திலிருத்தக் கூடியவர்களா? இவர்களால் ஏற்படும் மதாபிவிருத்தி யாது?

பதில்:—தற்போதைய மடாதிபதிகளிற் பெரும்பாலோர் முற்பிறவியில் தேவலோகத்தின்கண் இந்திர சபை யங்கத்தினராக விருந்திருக்கவேண்டுமென நினைக்கின்றேன். தேவேந்திரன், தனது சபை யங்கத்தினர்கள் ரம்பை ஊர்வசி முதலிய நாட்டியப் பெண்களின் மயக்கிலகப்பட்டோ அல்லது வேறெவ்வகையிலோ சிற்றின்பம் நுகர இச்சை கொண்டுள்ளார்களென்பதை யறிந்து கொண்டானானால் உடனே அத்தகையோரைப் பூவுலகிற் சனித்து அவர்கள் அவாவுற்ற இன்பங்களை அனுபவித்துத் தீர்க்குமபடி செய்துவிடுவானாம்! அதிக செல்வம் படைத்தவர்கள் அச்செல்வத்தைக் காப்பதாக அதிக கவலை கொள்வார்கள் என்று சொல்வதுண்டு. செல்வமும் படைத்து, கவலையுமில்லாதிருப்போர் யாரென்றால் தற்போதைய மடாதிபதிகள் தான் என்று சற்றும் தயங்காமற் கூறலாம். தங்கள் சுக போகங்களிற் கவனம் செலுத்துவதில் நான்கில் ஒரு பங்கு கூட மதாபிவிருத்திக்காகச் செலுத்துவதில்லை. மதப் பிரசாரகர்களை ஆங்காங்கு நியமித்து ஜனங்களுக்கு மத அறிவு புகட்டும் விஷயத்தில், நம்மடாதிபதிகள் கிறிஸ்தவ மிஷனரிகளிடம் சில காலமாவது பயிற்சிபெற்ற பிறகு மடாதிபதி ஸ்தானத்தில் உட்காரத் தான் உசிதமாயிருக்குமென்று நினைக்கின்றேன். மக்களுக்கு மத அறிவு புகட்டி இம்மை மறுமைப் பயன்களையடைய உதவி செய்யாமலிருக்கிற மடாதிபதிகள் குருஸ்தானத்தில் இருத்தப்படுவதற்கு அருகரல்லர் என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம்.

கேள்வி:—மதப் பற்று இருக்கவேண்டியது அவசியமா அல்லது சுயமரியாதைக்காரர்கள் சொல்லுவதுபோல் மதத்தைத் தகர்த்தெறிய வேண்டுமா?

பதில்:—மதம் என்பது ஒரு சமூகம் நல்வழியிற் செல்வதற்காக வென்றேற்பட்டது. நல்வழியைக் காட்டும் நோக்கத்தைக் கொண்டதாயிருந்தாலும், மக்களின் மதியீனத்தால் மதத்தின் பெயரால் கொண்டு சில அட்டூழியங்கள் செய்யப்படுகின்றன என்கிற ஒரு காரணத்தால் மதத்தையே தகர்த்தெறிய எண்ணுவதும் மதியீனமாகும். அதைவிட, அப்படிப்பட்ட அட்டூழியங்களின் அடிப்படையான காரணங்களைத் தேடிக் கண்டு அவற்றைக் களைந்தெறிய ஏற்பாடு செய்தால் மதம் வலுப்பட்டு அனைவருக்கும் நன்மையுண்டாக்கும்.

கேள்வி:—அட்டூழியங்களொன்றுமே நடைபெறாதிருக்கும் பொருட்டு அதற்கேற்றவாறு நம்முன்னோர்கள் ஏன் தக்க கோட்பாடுகளை யமைத்திருக்கலாகாது?

பதில்:—அவர்கள் எதிர்பார்த்தவரையில் கோட்பாடுகளை யமைத்துத் தானுள்ளார்கள். ஆனால் இப்போது நடைபெறும் அட்டூழியங்கள் அவர்கள் எதிர்பார்த்ததைவிட அதிகமாகிவிட்டன. உதாரணமாக ஆதிதிராவிடர்கள் சண்டாளர்களாகக் கருதி நடத்தப்படுவார்கள் என்பதை அவர்கள் எண்ணியே யிருக்கமாட்டார்கள். மடிசஞ்சிகை மடித்து வைப்பது முதல் மாங்காய் ஊறுகாய் போடுவது வரையில் எல்லாவற்றிற்குமே அவர்கள் கோட்பாடுகளேற்படுத்தியிருக்க வேண்டுமென்றால் முடியுமா என்ன? சமூகத்தின் நன்மையைக் கருதி நாம் தான் அவ்வப்பொழுது வேண்டிய சீர்திருத்தஞ் செய்துகொள்ளவேண்டும்.

கேள்வி:—விக்ரக ஆராதனை அவசியமா?

பதில்:—மனத்தை ஒரு நிலையில் நிறுத்துவது—மனோ வலிமை முதலியன இதன் காரணமாயுண்டாகுபவையாதலின் இது அவசியமே. உருவத்தின் மூலமாகத்தான் அருவத்தை அறிதல் கூடும். சில மதத்தினர் உருவவழிபாடு வைத்துக்கொள்ளாவிடினும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட வேளை அல்லது தினங்களில் தியானத்திற்காக ஒன்று கூடுகிறார்கள். நாம் இன்னும் ஒருபடி அதிகம் சென்று உருவம் நிறுவி வழிபாடுசெய்கிறோம். அறிவு முதிர்ந்தோர் உருவ வழிபாடு வேண்டுமா வேண்டாமா என்பதை பற்றியே கருதுவதில்லை. அறிவு முதிர்ச்சியைச் சாதாரண ஜனங்களிடம் காண்பதரிது. அபக்குவிகளாகவுள்ள அவர்களிடம், கடவுள் எங்குமுள்ளார். நீயும் கடவுள் நானும் கடவுள் என்றெல்லாம் சொன்னால் அதை யவர்கள் தக்க முறையில் கிரகித்துக் கொள்ளாமல் ஒன்று கிடக்க ஒன்று செய்து விடுவார்கள். ஒரு குருவும் சிஷ்யனும் பக்கத்தூருக்குப் போகப் புறப்பட்டனர். இடையிலுள்ள ஆற்றில் பெருவெள்ளம் இருகரையும் புரண்டோடிக் கொண்டிருந்ததைக் கண்டு இருவரும் அலண்டு நின்றனர். அப்பொழுது சிஷ்யன் 'ஸ்வாமி தங்கள் அருள் இருக்கும்போது எனக்கென்ன குறை? தங்கள் பாதமே கதியென்று நம்பியுள்ள எனக்கு இந்த வெள்ளம் ஒரு பிரமாதமா? ஒரு நொடியில் அக்கரை சேர்ந்துவிடுகிறேன் பாருங்கள்' என்று சொல்லி ஒரே பாய்ச்சலாய் வெள்ளத்திற் பாய்ந்து நீந்தி அக்கரை சேர்ந்தான். பார்த்தார் குரு! 'அட நம்முடைய பாதங்களை நம்பித்தானே இவன் அக்கரை சேர்ந்தான். நம்முடைய பாதங்களுக்கு இவ்வளவு சக்தியானால் நாமும் அவைகளை நம்பி ஆற்றைக் கடந்துவிடலாமே' என்றெண்ணியவராய் ஆற்றில் குதித்தாராம்! ஆகையால் சாதாரண ஜனங்களுக்குப் புரியும்படியான வகையில் கோட்பாடுகளை யமைத்து அறிவு வளர்ச்சியடையச் செய்தல் வேண்டும். ஞானத்திற்குப் பிரதானம் தியானம்—தியானத்திற்குப் பிரதானம் பக்தி—பக்திக்குப் பிரதானம் மூர்த்தி அல்லது விக்கிரகம். இவ்வாறு படிப்படியாக அறிவு வளர்வதற்கென் றேற்படுத்தியுள்ள உருவ வழிபாட்டைக் கண்டு அன்னியர்களும் அதிசயிக்கும்போது அதே மதத்தைச் சேர்ந்தோர் அருவருப்பது விந்தையே!

---




## ஔவையார்

(ஸ்ரீமதி. பண்டிதை-அசலாம்பிகை அம்மையார்.)

"கேள்வி முயல்" என்பது அடுத்துள்ள நீதி-இது எல்லா அறிஞர்களும் வற்புறுத்தியுள்ள பெருமையுடையது. சிலர் கலாசாலையிற் பலகாலம் பயின்று ஒப்பேறிப் பட்டதாரிகளாய் வெளி வந்தாலும் அப்படிப்பினால் அவர்கள் அறிவு விரிவுறாது. கற்றறிந்தோர் கூறும் நுணுக்கமான பொருள்களைப் பலகாலும் கேட்டுக் கேட்டு அறிவைப் பெருக்கிக் கொள்ளவேண்டும் ஏட்டுப்படிப்பு ஒன்றே போதுமென்றிருத்தல்கூடாது. இதுபற்றியே,

"செவியுணவிற் கேள்வி யுடையார்
அவியுணவின் ஆன்றாரோ டொப்பர்"

என்றருளினர் அறநூலோர்.

கம்பநாடரும்,

"ஏகமுதற் கல்வி முளைத்தெழுந் தெண்ணில் கேள்வி
ஆகமுதற்றிண் பணைபோக்கி"

என்னும் கல்வியால் கேள்விகளே கல்வியாகிய மரத்திற்குக் கிளைகள் என்றருளினர். கிளைகளைப் பெறாதது எப்படி மரம் என்னும் சிறப்புக்கு உரியதாகாதோ, அதுபோலக் கல்வியும் நிரம்பிய கேள்வியைப் பெறாதவரிடம் பயன்படுவதில்லை. ஒருவர்க்கு அழியாச் செல்வம் செவிச் செல்வமேயன்றி இதர செல்வங்களல்ல. எப்பாடுபட்டாயினும் கேள்விச் செல்வம் பெற ஒவ்வொருவரும் முயலவேண்டும். புத்தகப்படிப்பால் உணரும் விடயங்களெல்லாம் சிறந்த கேள்விகளாலேயே ஒளிபெற்று வளர்ச்சியெய்தும். ஆனால் சிலர் ஒன்றிரண்டு நூல்கள் படித்துவிட்டதனாலே பிறருக்கு உணர்த்தப் புறப்படுகின்றனர். அந்தோ பரிதாபம்! இத்தகையார் அறிவாளிகள் இல்லாத இடங்களிலேயே அசுவமேதயாகம் செய்ய முற்படுவர். பெண்கள் மெச்சத் தம்மைத் தாமே புகழ விரும்பும் சில பேதை மாந்தர்போல இவர்களும் உபந்நியாசகர்களாகின்றனர்.

"கற்றது கைம் மண்ணளவு கல்லாத துலகளவென்
றுற்ற கலை மடந்தை ஓதுகின்றாள்"

என்று நமது மூதாட்டியாரே கூறியிருந்தால் முற்றக் கற்றவராக எவர்களைத் தான் கூறலாம்.

செவித் தொளைகள் இரண்டாகவும், வாய் ஒன்றாகவும் இருப்பது இரண்டு மடங்கு நீ கேட்டால் ஒருபங்கு வாயினால் வெளியிடு என்று குறிப்பிட்டதாகும் என்பது ஓர் ஆங்கிலப் பேரறிஞர் துணிபு. இது அரியகருத்தே யாகும்.

"கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி"

என்ற குறட்பாவினால் கேள்வி ஒருதரம் இருதரம் கேட்டுப் பிறகு போதுமென்று அமைந்திருப்பதல்ல. மேன்மேலும் சமயம் வாய்த்தபோதெல்லாம் செவிகளைத் தொளையிடுவது போல ஊக்கத்துடன் கேட்டுக்கொண்டு வரல் வேண்டும் என்பதும் புலப்படுகின்றது.

கேள்வி பெருமை கல்விமட்டில் உடையவர்களையும் வேதாந்த அப்பியாஸம் அநுபவத்தில் அடையாமல் நூல் உணர்ச்சிமட்டில் உடையவர்களையும், மாணவர்கட்கு ஒரே வகுப்பில் ஒரே வகைப்பட்ட பாடங்களைத் திரும்பப் பல ஆண்டுகள் போதித்துவரும் ஆசிரியர்களையும், சாஸ்திரா நுஷ்டானம் இல்லாமல் சாஸ்திரமட்டில் கற்றுச் சந்தேக நிவர்த்தி செய்பவர்களையு முறையே புத்தகப் பூச்சியெனவும் வேதாந்தப் பூச்சியெனவும், சாஸ்திரப் பூசகரெனவும் உலகில் வேடிக்கையாகச் சொல்வதுண்டு. கேள்வி கல்வியிலும் சிறந்ததென்பதற்குப் பல கதைகள் உலகில் நிலவி நிற்கின்றன. ஒரு மாணாக்கன் உண்மையாகவே அரிச்சந்திர காவியம் படித்தான். அந்நூலில் லோகிதாஸனை அரவம் தீண்டி இறந்தான் என்று அவன் தாயாகிய சந்திரமதியிடம் உடன் சென்ற பாலகர் மீண்டும் வந்து சங்கதி சொன்ன இடத்தில் ஆசிரியர்,

"மணங்கமழ் குழலாயுன்றன் மைந்தனை யரவுதீண்டி
உணங்கினன்"

என்ற செய்யுளைப் பொருத்தினர். இது கண்ட அம்மாணாக்கனுக்குப் பெரிய சந்தேகம் வந்துவிட்டது. வேதியரிடம் அடிமைப்பட்டுக் குற்றேவல் செய்யும் நிலைமையில் சந்திரமதி தேவியார் வாசனை மிகும் புஷ்பங்களைச் சூடியிருக்க முடியுமா? இல்லாமலிருந்தால் இந்தப் பாலகர்களே துக்க சமாசாரம் சொல்ல வந்தபோது மணங்கமழ் குழலாய் என்று அழைத்திருப்பார்களா? இரண்டுமின்றிக் கவியெழுதிய ஆசிரியர்தான் பொய்யாக வரைந்தாரா? அங்ஙனமாயின், உண்மைக்கே உதாரண புருஷராகிய அரிச்சந்திரனுடைய உண்மையான சரித்திரத்தைப் புனைந்தவர் உண்மையில்லாத பொய் புகலலாமா? என இப்படி மேன்மேலும் எண்ணமிட்டு வருந்தினான். இதனைப் படிக்கும் வாசகர்களே கேள்வி முயலாத மாணாக்கனுக்கு ஏற்படக்கூடிய இடர்களை ஊகித்துக்கொள்ளலாம். ஒருவர் "புலவான் அரக்கன்" என்று இராவணனைச் சிறப்பித்திருப்பது கண்டு அரக்கனுடைய



வாள் சிவன் கொடுத்த வாளாயிற்றே! அது எவ்விதம் புலைத் தொழிலில் ஈடுபடலாம். சிவன் கொடுத்த வாள் சைவமாகவல்லவோ தூய்மையாக இருக்க வேண்டும் என்று வாதிக்க முற்பட்டார் என்னின், இத்தகைக் கல்விமான்களின் கல்விக்கு இரங்காமல் என் செய்வது? உலகைப் பயிலுவதும் ஆன்றோர் வாய்மொழிகளைக் கேட்பதும்தான் வாழ்வைச் சிறப்பிக்கும். ஒரு காலத்தில் கம்பர் வீட்டில் பணிப்பெண்ணாகவிருந்த எழுத்தறியாத ஒரு பெண் கவிச் சக்கிரவர்த்திக்கு வெந்நீர் சித்தப்படுத்தினாள். அவர் அதைப் பரிசித்துப் பார்த்து மிகச் சூடாயிருந்தமையால் அம்மாதை நோக்கிச் சுடுகிறதென் றாராம் அதற்கவள் விடையாக ஒரு மரத்தின் அடியைச் சொன்னால் ஆறிவிடும் என்றனளாம். ஒப்பிலாப் புலவர் பெருமானுக்கு அவ்விடை கேட்டதும் விபரீதமான ஐயம் நேர்ந்துவிட்டது. மரத்தின் அடியைக் கூறுவதினால் வெந்நீர் எப்படி ஆறிவிடும்? அப்படிப்பட்ட மரம் எது? என்று இவ்வாறு பலபடச் சங்கைகள் நிகழ்ந்ததால் நீராடுவதையே மறந்து அதே சிந்தனையில் ஆழ்ந்தாராம். எவ்வளவு சிந்தித்தும் தனக்கு விளங்காமற்போனதால் மனம் வருந்தி அவ்வேலைக்காரியை நோக்கி, நீ சொன்ன வெந்நீரை ஆறச்செய்யும் வல்லமையுள்ள மரத்தின் அடி எதுவென்று கேட்கத் துணிந்தார். அவள் நகைத்து, விளாவடி என்றால் விளாவமாட்டேனா? சுடுகிறதென்றுமட்டில் சொன்னீர்களே என்று மறுமொழி கூறிக் கம்பரை வியப்புக்கும் உவப்பிற்கும் உள்ளாக்கினாள் என்று ஒரு கர்ண பரம்பரையான கதையுண்டு. இதனால் கல்வியின் பெருமைக்கும் கேள்வியின் பெருமை மேற்பட்டதென்பது விளக்கமுறுகின்றது.

இதுவுமன்றிப் பிறந்தபொழுதே கவிபாடிய நமது ஔவைப் பெருமாட்டியாரே ஒரு கால் பிரயாண மத்தியில் ஒரு மாலைப் பொழுதில் எதிர்ப்பட்ட கிராமத்தின் அருகாமையில் வயலோரம் சிறிது இளைப்பாறினார். அங்கு தண்ணீர் இறைத்துக்கொண்டிருந்த விவசாயிகள் ஏற்றத்தை விடும் தருணம் அப்போது ஏற்றப்பாட்டைப் பாடும் ஒருவன் "மூங்கில் இலைமேலே" என்னும் பாதி அடியைத் தொடங்கிவிட்டு இறைப்பை நிறுத்தியதால் அம்மட்டோடு பாட்டையும் நிறுத்தினான். ஔவையாருக்கு இதைச் செவியுற்றதும் பெரிய சந்தேகம் தோன்றியது. மூங்கிலின் இலையோ மிகச் சிறியது அதன் மேலே எந்தப் பொருள் நிற்கமுடியும், இதுவரையும் மூங்கில் இலையின்பேரில் எப்பொருளும் இருந்ததாக நூல்வழக்கு ஆன்றோர் வழக்கு என்னும் இருவகை வழக்கிலும் கேட்டதில்லையே இதன் உண்மையை அறியாமல் இவ்விடம் விட்டகலுவதில்லை என்று உறுதி செய்துகொண்டு அம்மரத்தடியிலேயே உறக்கமின்றி இரவெல்லாம் சிந்தித்துப்பார்த்தும் அவ்வேலையாளர் வரவை எதிர்நோக்கியிருந்தாள். விடியுமுன் அவர்கள் வழக்கப்படி வந்து இறைக்கத் தொடங்கி முதலிலிருந்து ஏற்றப் பாட்டைத் தொடங்கி முதல் நாள் விட்ட மூங்கில் இலைமேலே என்பதை எடுத்துத் "தூங்கும்பனி நீரே" என்று பூர்த்தி செய்ததைக் கேட்டுப் பெரிதும் அதிசயித்ததாக ஒரு வரலாறும் உண்டு. இதைச் சுட்டியே, "காரெருமை மேய்க்கின்ற காளைக்கு யான்றோற்ற நீரிரவும் துஞ்சாதென் கண்" என்று பாடியதாகவும் சொல்வதுண்டு. இது ஔவையார் சொந்த அநுபவமாக இருக்குமாகில் கேள்வி முயல் என்று அவர் உலகிற்கறிவூட்டியது மிகவும் பொருத்தமன்றோ? கேள்வி சிறந்ததென்று கூடக் கூறாமல்,

கேள்வியைப் பெற நீ முயற்சி செய் என்று பணித்ததால், அதன் இன்றியமையாமை விளங்குகின்றது. கேள்விச் செல்வம் உடையவர்கள் இவ்வுலகில் இருந்தாலும் அமரர்களோடு ஒப்பார் என்பது சான்றோர் கொள்கை.

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென்?

என்ற திருக்குறளினால் கேள்வியில்லாதாரால் ஒரு பயனும் இன்மையால் அவர் இருப்பதும் இறப்பதும் ஒன்றே என்று தயங்காமல் உணர்த்தியருளினார். கேள்விச் செல்வம் எய்தாதவர்களுடைய இழிவுக்கு இதைவிடச் சிறந்த தொன்றுமே யில்லை.

கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை"

என்ற திருக்குறளினால், ஒருவர் கல்வியைப் பெற முடியாதிருப்பினும் கேள்வியை முயன்று பெறுவாராயின் அக்கேள்வியின் பயனால் பிறப்பறுத்து வீடு பெறவும் வல்லவராவர். அதற்கு உதாரணமாக மதுரையம்பதியில் கரிக்குருவியும் நாரையும் நல்லோர் கூறிய அறநூல்களைச் செவியுற்ற பயனால் பேதமையகன்று மெய்யறிவெய்தி முத்திபெற்றன எனக் கூறப்படும் திருவிளையாடற் புராணக்கதைகளால் உணரலாம். இதைக் குறிப்பாக வைத்தே,

வாட்டமிலா மாணிக்க வாசக நின் வாசகத்தைக்
கேட்டபொழு தாங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்கினமு மெய்ஞ் ஞான
நாட்டமுறு மென்னிலிங்கு நானடைதல் வியப்பேயோ?

எனத் திருவருட்பிரகாச வள்ளலாரும் அருளிச் செய்துள்ளார்.

கேள்வி யென்பது ஆன்றோர்கள் கூறும் அரிய அறநூல்களின் இனிய பொருள்களைக் கேட்பதையே குறிக்கும். அஃதல்லாத தீமைதரும் பாவ மொழிகளைக் கேட்பது பயன் தருவதாகாது. ஆதலின் ஒருபோதும் கெட்ட மொழிகளைக் கேட்பதுகூடாது. இதை யுணர்த்தும்படி ஒரு இசைப்புலவர்,

"செய்யவர் பழிகேட்க வளைபோல் வளையும் காது
சிவகதை கேட்கவென்றால் காதினுட் டுளையேது"

என்று இழிவு படுத்திக் கூறினார். ஆகவே கேள்வி யென்பது நன்மையைப் பயக்கும் நல்லார் வாய்ச்சொற்களே யென்று மயக்கமற உணர்தல் வேண்டும் என்பது தெளிவு.

இஃதன்றிப் பிறர் மறைமுகமாகப் பேசுவதைக் காவாகப் பதுங்கி யிருந்தாவது தெரிந்து கொள்ள முயல்பவர்களு முண்டு. அது மிகவும் சிறுமை தரும். இதுபற்றியே,

"பிறர் மறையின்கட் செவிடாய்த்
திறனறிந் தேதிலார் இற்கட் குருடனாய்த்தீய



புறங்கூற்றின் மூகையாய் நிற்பானேல் யாதும்
அறங்கூற வேண்டா அவர்க்கு"

என்றருளினர் நீதிநூலார்களும். கேள்விக்காக முயல வேண்டியது என்று ஔவையார் அருளியதால் பிறர் இரகசியத்தை அறிய முயல்வதற்கு முற்படக் கூடாதென்பது இதனால் விளங்குகின்றது. மறைந்திருந்து பிறர் சொல்லும் வசனங்களைச் செவிக்கேற்றுவது அரசர் ஆணைப்படி ஒற்றர்களுக்கே உரியதாகும், அவ் வொற்றர்கள் சிறிதும் திரித்துக் கூறாத சத்தியவான்களாக இருக்கக் கூடியவர். அன்னார் தவிர ஏனையோர்கள் மறைவான செய்திகளை ஒருபோதும் கேட்பது கூடாது. மேலே இக்கட்டுரையில் கூறிய உதாரணங்களெல்லாம் நமது பண்டை நூற்பயிற்சியில் கேள்வி யில்லாதவர்களையும் நூலறிவே பெருமன் இயற்கையறிவினால் கற்றவர்களையும் சிந்தனையில் ஈடுபட வைக்கத் தக்கவர்களையும் குறிப்பால் உணர்த்தியதாகும்.

ஆனால் தற்காலம் ஜீவனம் கருதி வெளிவரும் ஆங்கிலப் பட்டதாரிகளில் பலப்பலர் கேள்விச் செல்வம் பெற வசதியின்றித் தொழிலில் ஈடுபடும் காலமும் அல்லலுக்கும் மயக்க வுணர்ச்சிக்கும் ஓர் அளவேயில்லை. அன்னார் தலைமைப் பதவியை பட்டத்தின் தகுதியினால் பெற்று விட்டால் குறைந்த படிப்புள்ள தன்கீழ் உள்ள உலகியலறிவுள்ள ஒருவரால் ஆட்டிவைக்கப் படுவது கண்கூடு. போலி யதிகாரிகளாய்க் கடனாற்றினாலும் பிறரால் மதிக்கப்படுவதில்லை, எனவே இலௌகிகப் படிப்புக்கும் கேள்வி நிரம்ப வேண்டியதே யென்பது தெளிவு.

இனி கைவினை கரவேல் என்றருளினர். இதற்கு, உனக்குத் தெரிந்த கைத்தொழிலை நீ சமயத்தில் ஒளிக்காதே என்பது பொருள். இது பிறருக்கு உதவியாகும் என்னும் தருணத்தில் தாம் கற்ற வித்தையை (செய்வினைத் திறமையைக் கட்டாயம் செய்தலே வேண்டும். தன் தகுதி பெரிதாக இருந்தாலும் சமயத்தில் உதவுவது தக்கதென்றெண்ணி முன் வரவேண்டும். ஒருவர் தவறித் தண்ணீரில் ஆழமான இடத்தில் அமிழ்வதைக் கண்டால் அதைக்கண்டு நீச்சத்தெரிந்த ஒருவர் தாமதியாது விரைந்து குதித்துக் காப்பாற்றுதல் வேண்டும். முரட்டுக் குதிரையையோ, பிற மிருகங்களையோ அடக்கியாள முயன்று அம்முயற்சி பயன்படாதென்று கண்டால் விரைந்து சென்று (தனக்கதில் பயிற்சி யிருந்தால்) அவரை மீட்கவேண்டும். உடர்று டிப் பிறந்து உயரிய நிலையில் இருந்த பலர் தம்மை இன்னாரென்று அறிவித்துக் கொள்ளாமலே பிறருக்காக அற்பகாரியங்களையும் செய்து புகழெய்தி யிருப்பது உலக பிரசித்தம். நளனும், வீமனும், சமையல் வேலையில் தமக்குள்ள பயிற்சியினால் தங்கள் கஷ்டங்களைக் கடந்தனர்.

கைவினை கரவாதிருப்பது பிறருக்குப் பயன் படுத்துவதற்கு அவசியம் என்பதை விடத் தனது ஆபத்தில் தன்னைக் காத்துக் கொள்ளவே பெரிதும் உதவியாகின்றது. பெண் மக்களிலும் கைவினை கரவாமல் தருணத்தில் உதவியவர்கள் எண்ணிலர். சத்தியபாமை விற்போரிற் சிறந்தமையும், கைகேயி இரதசாரத்தியத்தில் தேர்ச்சி யுடைத்தா யிருந்தமையும், பாஞ்சாலி சூரியத்தில் தேர்ந்திருந்தமையும், உலகறிந்த தொன்று. இவர்கள் ஒவ்வொருவரும் ஆண்பாலார்கட் குரித்தெனக் கருதப்படும் மேலே கண்ட வினைகளிற் சிறப்புற்றிருந்ததனால் தக்க காலத்தில் பயன்படுத்திக் கொண்டனர். வினையாற்று

வதில் இழிவென்பதே யில்லை. அவ்வெண்ணம் கால்கொள்ளுமாகில் மனிதன் உலகில் நடைப்பிணமே போல் சத்தற்றவனாவன். அணில் என்னும் ஒரு மென்மையான பிராணியும் இராமர் சேதுபந்தனம் செய்தபோது தன் வாலைக் கடலிற்றோய்த்து மணலில் புரட்டி ஒட்டிய மணல்களைத் தண்ணீரில் உதறிக் கடலை மேடுள்ளதாகச் செய்யத் தன்னாலானவரை முயன்றதாக பிரபந்தத்திலும் கூறியுள்ளார்.

மதுரையை யாண்ட தடாதகைப் பிராட்டியார் உமாதேவியே யெனினும் பாண்டிய நாட்டை அரசாட்சி செலுத்தியதாகச் சரித்திரம் கூறியிருப்பது எல்லார்க்கும் எல்லாவிதத் திறமையும் வாய்ப்பதும், ஆற்றலதும் இயல்பென்பதைக் காட்டுகிறது. மகாத்மாவின் சபர்மதி ஆசிரமத்தில் முன்பு வசித்தவர்கள் எல்லாம் கோதுமை அரைத்தலையும், நீர் பாய்ச்சுதல், களை பறித்தல், எருவிடுதல் உழுதல் முதலிய எல்லாவிதமான கைத்தொழில்களையும், அதோடு நூற்றல், நெய்தல், சமைத்தல், வஸ்திரம் வெளுத்தல் முதலிய எல்லா வேலைகளையும் தினசரி வேலைகளாக ஒழுங்குறச் செய்யும் கட்டாய விதியுமிருந்தது. அந்தக் கூட்டத்தினர்கள் அப் பணிகளைப் பெருமையாகப் பாவித்தார்களே யன்றிச் சிறுமையாக மதிக்கவில்லை. எப்போதும் அயலானால் தனது தேவைகளை முடித்துக் கொள்ள முயல்வது இழிவேயன்றி தேவைக்கு வேண்டிய எத்தொழில்களையும் கற்றுக் கொள்ளுவது இழிவல்ல. ஆகலினால் தெரிந்துள்ள ஒரு காரியத்தை அது இழிவுள்ளதென்று கருதி அதனை ஒளியாதே என்றருளினர் பெருமாட்டியார்.

போர்க்குணம் நிறைந்த ஜெர்மனியின் சக்கரவர்த்தியாயிருந்த கெய்ஸர் இன்றும் கட்டை வெட்டுவதை ஒரு சரீர அப்பியாசமாகக் கொண்டு செய்து வருவதாகக் கேள்விப்படுகிறோம். சென்னையில் 40-ஆண்டுகளுக்கு முன் உயர்தர நீதி மன்றத்தில் அதிபராயிருந்த இந்தியப் பெரியார் ஒருவர் அதிகாலையில் ஏற்றம் இறைப்பதை சுகத்துக்குரிய ஒரு அப்பியாசமாகச் செய்து வந்திருந்தார். அவரை யறிந்த பலர் இன்றும் உயிர்த்திருக்கின்றனர்.

வினை செய்வதில் உயர்வு தாழ்வென்று கருதும் உணர்ச்சி இளமையிலிருந்தே வாலிபர் உள்ளத்தில் கால் கொள்ளுதல் கூடாது. அதற்காகவே பண்டைக் காலங்களில் அரசகுமாரர்களையும் வனத்தில் தழைக் குடிசைகளில் வாசம் செய்து வரும் முனிவர்களிடம் சென்று வேதமாதி கலைகளைக் கற்று வரும்படி அநுமதித்து வந்தனர். ஏழைப் பிள்ளைகளுடனும் சேர்ந்து பயிலச் செய்தனர். அப்படிச் செய்ததினால் அவ் விளைஞர்களிடம் பணிவிடைகளில் உயர்வு தாழ்வென்கிற பாகுபாடும் நாம் அரசகுமாரன் என்கிற அகம்பாவமும் தலைதூக்க முடியவில்லை. அப்படிப் பயிலும் பிள்ளைகள் தான் கைவினை செய்வதில் நாணப்பட மாட்டார்கள்.

சாந்தீப முனிவரின் ஆசிரமத்தில் சமையலுக்கு வேண்டிய விறகுகளைச் சேகரிக்கவும், வன நெற் பொறுக்கிச் சேர்க்கவும், காய் கனிகளைத் தேடி அளிக்கவும் கிருஷ்ணபகவான் சுதாமா என்னும் அந்தணச் சிறுவருடன் ஈடுபட்டிருந்ததாகக் காணப்படும் வரலாறு ஊன்றி நோக்குவோர்களுக்கு நல்ல புத்தி கற்பிக்கும் உதாரணமாகும். தேவையிருந்தால் அப்பிள்ளைகள் பொருட்டாக உணவுப்பொருள்களையும் இதர சாதன சாமான்களையும் நகரத்திலிருந்து அனுப்பியிருக்க மாட்டார்களா? சிறுவர்களுக்கு அடக்கமும் பணிவும் உழைப்



பும் ஏற்படும் பொருட்டே அக் காலத்தினர் வனவாழ்க்கையில் ஈடுபடுத்தினர். இக்காலத்தில் அம்முறை அறவே கைவிடப்பட்ட படியால் இக்காலத்திய மாணாக்கர்களிடம் அடக்கம் பணிவு உழைப்பாதிகளில் பற்றுமில்லை. அசட்டையும் ஏற்பட்டிருக்கிறது.

இக்காலத்திலும் ஐரோப்பிய நாடுகளில் கைவினைகளைக் கற்பதிலும் தகுதிநோக்கி அவற்றைச் செய்வதிலும் பின் வாங்காத ஊக்கம் வளர்ச்சி பெறுகின்றது. பொருட் பெருமை பதவிப் பெருமை முதலியவைகளுக் கடிமைப்பட்டுக் கைத்தொழில்களைப் புறக்கணிப்பதில்லை. அதை ஊன்றி நோக்குமிடத்து எந்தத் தொழிலின் பயிற்சியும் கைவிடத் தக்கதல்ல. நம்நாட்டு வாலிபர்களிடையே உடல் நலத்தை வளர்க்கக்கூடிய கைத்தொழில்களின் பயிற்சியில் ஊக்கம் குறைவென்பதில் சிறிதும் ஐயமில்லை உடல்நலம் குன்றினால் உளநலம் மழுங்குதல் ஒருதலை. அத்தகைய உளநலம் தேய்ந்தால் பின்னர் மக்கள் அடையக்கூடிய எந்நலங்களுமே இல்லை. ஆதலினால் நம் பெருமாட்டியார் கற்பித்த "கைவினை கரவேல்" என்னும் உறுதி மொழியைச் சுருதி மொழியாக உட்கொள்ளல் கடமையாகும்,


# "Funny" Magzin of India

**(Bi-monthly) Published on the 5th & 20th.**

*GIVES THE BEST OF EVERYTHING*

**Jokes, Stories, Serials, Humorous articles**
**Cartoons of great events and**
**Competitions**

LUCKY NUMBER SCHEME & FREE PUZZLE PRIZE
OUR ADDITIONAL FEATURES

**Price As. 1-6.**

**AVAILABLE AT ALL STALLS &**
**NEWS AGENCIES.**

*or Apply to:—*

**The "Funny Magzin" Office,**
*No. 6, Lawyer Chinnathambi Mudali St.,*
**Sowcarpet, MADRAS.**



# சாங்கிய தரிசனம்

(திரு. எஸ். ஏ. திருமலைக் கொழுந்துப் பிள்ளை, பி. ஏ.)

(69-ம் பக்கத் தொடர்ச்சி.)

## 2-வது காரிகை

*திருஷ்டவதானுஸ்ரவிக: ஸஹ்ய விசுத்தி க்ஷயாதிசயயுக்த:—தத்விபரீத: ச்ரேயாந் வியக்தாவியக்த ஞவிஞ்ஞாநாத்.*

*துன்ப நிவர்த்திக்குச் சுருதி சுட்டும் வழியும் கண்கண்ட வழிகள் போலவே பயனற்றது. எவ்வாறெனின், சுருதி கூறும் வழியுள் புனிதக் குறைவும், தேய்வும், மிகையு முள. ஆதலின் அவ்வழிகள் இரண்டிற்கும் வேறாய தக்கவழி யொன்று நாடப்படும்: அஃது யாதோவெனின் தெளிவுறத் தோற்றுவது இஃதென்றும், இவ்விரண்டிற்கும் வேறாயிருக்கும் அறிவு இஃதென்றும் பகுத் தறியவல்ல விவேகமே.*

*உரை. * சுருதி அறங்களையும், மகங்களையும் செய்யின் சொர்க்கம் கிட்டுமென நம்பிக்கையைத் தூண்டுகின்றது. சுருதி பொய் கூறாதாதலின் சிரத்தையோடு மகங்களைச் செய்வார், தாம் உத்தேசித்த இன்பப் பிராப்தியைப் பெறுவர். ஆயினும் அவ்வின்பம் காலங்கடந்த பரமவின்ப மாகாது. தேவேந்திரபோகத்தைத் துய்ப்பவனும் தனது புண்ணிய முழுமையும் செலவானவுடன் அக் கதியினின்றும் வீழ்வன். புரந்தரன், மால், அயன் முதலியோர் வாழ்வெல்லாம் கால எல்லைக் குட்பட்டனவேயன்றி பரமசாசுவத போகங்களாகா.*

*"எண்ணுடை மூவரி ராக்கதர்க ளெரிபிழைத்துக்*
*கண்ணுத லெந்தை கடைத்தலை முனின்ற தற்பின்*
*எண்ணிலி யிந்திரர் எத்தனையோ பிரமர்களும்*
*மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் தோணோக்கம்."*

*என்றனர் திருவாதவூரடிகள்.*



*மகங்களில் உயிர்க்கொலை நேர்தலால் புனிதக் குறைவும், மகத்தின் பலனாய தேவபோகம் காலடைவிற் க்ஷீணித்து மரணத்திற்கே காரண மாவதால் தேய்வும், சில மகங்கள் கோரிய பலனைத் தராது, கோரிக்கைக்கு மேற்போய பலனையுந் தருதலால் மிகையு முளவெனக் காண்க. அன்றியும் ஒருவன் மேலான பதத்திலிருக்க மற்றொருவன் அதனைச் சகிக்க லாற்றாது வக்க முறுகின்றான்: ஆதலின் ஒருவன் மிகையாய்க்கொண்ட போகத்தால் மற்றொருவனுக்குத் துன்ப முண்டாகின்றது. ஆதலின் மிகை துன்பத்திற்கு காரணமேயன்றி துன்பத்தின் ஒழி வன்று.*

*பூலோகத்திற் கண்கண்ட வழிகளும், சுருதி உறுதி கூறும் வழிகளும் காலங் கடந்த பரமவின்பத்தை நேரே சாதித்துத் தரமாட்டா.*

*ஆதலின் விவேகத்தாலேயே துன்பத்தைப் பொறிக்க முயலவேண்டும். அவிழ்தம், சுருதி யிவ்விரண்டாலும் துன்ப நிவர்த்திக்கு வழி தேடுகை குருட்டு வழியாம். நம்பிக்கை கொண்டே கரையேறச் சொல்லும்; நம்பிக்கை சிறிது கைவிடவே விபரீதங்கள் நேரும்.*

*விவேகமாகிய ஞானமென்பது இரகசியங்களை யுடைத்துப் பார்க்கவல்ல கருவியாம். இவ் விவேகமே இன்ப துன்ப சொரூபங்களைக்கண்டு வேண்டியாங்கு ஒழுகுதற்கு உகந்த நல்வழியைக் காட்ட வல்லது. இதுவே, சுதந்தர ஞானமென்று சொல்லப்படுவது. சுதந்தரத்தைப் பெறாதான் சுதந்தரம் பெற்றவர்க் கடிமையாய் அந்தகாரத்திலேயே யுழலவேண்டும்.*

*சுதந்தரத்தைக் கொடுக்க வல்லதுவே முத்திக்கு வழி. யாவற்றையும் ஞானக்கினியால் ஊடுருவிப்பார்த்துக் கடை முடிவு கண்டு தனக்கு உகந்த பதத்திலிருப்பதுவே சுதந்தரம். அதனைப்பெற முப்பொருள்கள் அறிதற் பாலன. அவை:—*

1. *மறைவுறாது வெளித்தோன்றி நிற்கும் பிரபஞ்சத்தின் உள்ளீடு.*

2. *மறை விருந்து இப்பிரபஞ்சத்தின் தேய்வையும் வளர்ச்சியையும் சமப்படுத்தி நிற்கா நின்ற அந்த இயக்கத்தின் உள்ளீடு.*

3. *இவ்விரண்டிற்கும் சாக்ஷி மாத்திரையாய் நிற்கா நின்ற அறிவு.*

*இவற்றை வியக்தம், அவ்வியக்தம், புருஷன் எனச் சாங்கியம் கூறும்.*

*இனி முப்பொருள் எவை யென்பதனைக் கூறலுற்றார்.*

## 3-வது காரிகை

*மூலப்பிரகிருதி ரவிகிருதிர் மகதாத்யா: பிரகிருதி விகிருதய: சப்த—ஷோடலகஸ்துவிகாரோந பிரகிருதிர்ந விகிருதி: புருஷ:*

*மூலப் பிரகிருதி எதனின்றும் பிறந்த தன்று; மகத் முதலாகிய ஏழும் பிறந்தனவுமாம், பிறப்பனவுமாம்; எஞ்சிய பதினாறுமோ பிறந்தனவேயன்றி பிறப்பிப்பனவல்ல. புருஷனோ பிறந்தவனுமல்லன் பிறப்பிப்பவனு மல்லன்.*

உரை. தத்துவங்களின் நால்வகைத்தாய வியல்பையும் கணக்கையுங் காட்டினர். தத்துவங்கள் 25 அவையாவன:—

| | | |
|---|---|---|
| பிறவாமற் பெறவல்ல மூலப்பிரகிருதி | 1. | தாய். |
| அதனிடம் முதற்கண் பிறந்த மகத் | 1. | 7. இவை தாயுமாம், மகவுமாம். |
| மகத்தினின்றும் பிறந்த அகங்காரம் | 1. | |
| அகங்காரத்தினின்றும் பிறந்த தன்மாத்திரைகள் | 5. | |
| தன் மாத்திரைகளிட மிருந்து பிறந்த பஞ்சபூதங்கள் | 5 | 16. இவை சிறுமியர். |
| அகங்காரத்திருந்து பிறந்த ஞானேந்திரியங்கள் | 5. | |
| அகங்காரத்திருந்து பிறந்த கன்மேந்திரியங்கள் | 5. | |
| அகங்காரத்திருந்து ஞானத்திற்கும் கிரியைக்கும் உகந்ததாய்ப் பிறந்த மனம் | 1. | |
| பிறவாததும் பிரசவிக்க இயலாததுமான புருஷன் | 1. | தகப்பன். |
| ஆக தத்துவம் | 25. | |

## 4-வது காரிகை

திருஷ்டமனுமான மாப்த வசனம்ச சர்வப்பிரமாணசித் தத்வாத்—திரிவிதம் பிரமாணமிஷ்டம் பிரமேயசித்திః பிரமாணுத்தி.

### மெய்யறிவாயில்கள் (பிரமாணங்கள்)

காட்சி, அனுமானம், ஆப்த மொழியாகிய மூன்றும் எவர்க்கு மின்றியமையாத மெய்யறி வாயில்களாம். மெய்யைத் துணிதற்கு உகந்த மற்றைப் பல வாயில்களும் இம்மூன்றனுள் அடங்கும். வாயில்கள் என்பன உள் பொருளைத் துணிதற் குகந்தன.

உரை. இவற்றை அடுத்த காரிகை விளக்கும். நியாய மதத்தார் மெய்யறிவாயில்கள் நான் கென்ப; மீமாஞ்சகர் ஆறுவாயில்கள் உளவென்ப.

உபமானம், அர்த்தாபத்தி, அபாவம், சம்பவம், ஐதீகம் முதலியன மற்றை வாயில்களாகும்.

## 5-வது காரிகை

பிரதி விஷயாத்ய வசாயோ திருஷ்டம் திரிவித மனுமான மாக்யாதம—தல்லிங்க லிங்கபூர்வகமாப்த சுருதிராப்த வசநந்து.

### மெய்யறிவாயில்களின் இலக்கணம்

காட்சி என்பது கட்டாயம் பற்றி ஒவ்வொரு பொருளும் உளதென நம்புதன் மேற்று.

அனுமானம் முப்பாற் படும். இஃது புலப்பட்ட அடையாளத்தை அல்லது குறியை (இலிங்கத்தை)பபற்றி அவ்வடையாளத்தை யுடையவொன்று (இலிங்கி) உளதெனத் தீர்மானஞ் செய்தன் மேற்று.



ஆப்தமொழி யென்பது சுருதியே.

உரை. கண்ணெதிரில் நிற்பதை உளதென நம்புவதே காட்சி; மற்றை யிந்திரியங்களும் தம் அருகி லிருப்பவற்றை; அவை யுளவென நம்புவதும் காட்சியி லடங்கு மென்பர். இது நாய், இது பாம்பு, இது துரும்பு, இது மரம் என்று சுட்டி எல்லைக் குட்படுத்தி யறிவதுவே காட்சி.

அனுமானம் பிரத்தியக்ஷம் (கண்ணெதிர்) ஆகக் காணப்படாத வொன்றை யேதேனும் எட்டினவோர் குறியைக்கொண்டு உளதெனத் தீர்மானஞ் செய்யும். இது முப்பாற்படும்.

1. ஆதியைப் பிடித்துத் துணிதல் (பூர்வானுமானம்)
2. அந்தத்தைப் பிடித்துத் துணிதல் (சேஷானுமானம்)
8. இயற்கைத் துணிவு (சாமான்யோ திருஷ்டம்)

உதாரணம்:—

1. மேகமாகிய ஆதியைப் பிடித்து மழையாகிய அந்தத்தை வருமெனக் கொள்ளுதல்.

2. வெள்ளத்தைக்கண்டு, முன் மழை பெய்தது உண்டெனக் கொள்ளுதல்.

3. கல்லைக்கண்டு இஃது கடினமெனல்.

ஆகவே அனுமானம் முக்காலத்தையும் சாதிக்க வல்லது.

ஆப்தமொழி யென்பது சத்திய வசனம்; சுருதியாகிய வேதம் சத்தியமயமாதலின் அஃது வீண் போகாது தனது பலத்தைத் தரவல்லது.

உபமானம், அர்த்தாபத்தி, அபாவம், சம்பவம், ஐதீகம் என்னும் மற்றைப் பிரமாணங்களும் மேற்கூறிய மூன்றனுள் அடங்கும். உபமானம் என்பது கண்காணுத வொன்றிற்கு இலக்கணங் கூறியதன் தன்மையை விளக்குவதாம். மானதக் காட்சியின் எல்லைக்கு அப்பொருளைக்கொண்டு வருவதால் இஃது பிரத்தியக்ஷத்தி லடங்கும். அர்த்தாபத்தி அனுமானத்தி லடங்கும். அபாவம் பிரத்தியக்ஷத்தி லடங்கும். சம்பவமும் பிரத்தியக்ஷத்தி லடங்கும். ஐதீகம் ஆப்த வாக்கியத்தி லடங்கும்.

இனி மூன்று வாயில்களாலும் சாதித்துத் துணியப்படும் பொருள்கள் இவை யென்பதனைக் கூறலுற்றார்.

## 6-வது காரிகை

ஸாமான்யதஸ்து திருஷ்டாத திந்திரியாணும் பிரசித்திரனுமாணுத்—தஸ்மாத் பிசாவித்தம் பரோக்ஷ மாப்தா கமாதசித்தம்.

### பிரமேயங்கள்

சாதாரணப் பொருள்கள் இந்திரியக்காட்சிக்கு எட்டித் துணியப்படும். இந்திரியக்காட்சி யெல்லையைச் சிறிது கடந்து நிற்பனவோ, அனுமானத்தால் உளவெனத் துணியப்படும்.

இந்திரியக்காட்சிக்கும் அனுமானத் துணிவிற்கும் பிடி கொடாதனவோ ஆகமத்தால் (சுருதியால்) உளவெனத் துணியப்படும்.

உரை. பசு, யானை, எறும்பு முதலியன எவராலுங்கண்டு உள்பொருள்களென நம்பப்படுகின்றன.

ஐந்தலை யரவு, பேய், சோதிமரம், குக்குடப்பாம்பு, திட்டிவிடம் முதலியன சாதாரணக் காட்சிக்கு எட்டாமற் போனாலும் பிரசித்தி பெற்றிருப்பதால் அனுமானங்கொண்டு உளவெனத் துணியப்படுகின்றன.

கற்பக விருக்ஷம், சங்கநிதி, பதுமநிதி, இந்திரன், இரம்பை முதலானவும் சொர்க்க நரகங்களும் நாம் நம்பும் வண்ணம் கண்டு வந்து சொன்னவர்களுமில்லாமைபற்றி சுருதி முதலிய சத்தியவசனத்தி னாற்றலாலேயே உளவெனக் கணிக்கப்படுகின்றன.

இனித் தத்துவங்களுள் பல நமது சித்தத்தில் நன்கு விளங்குவதால் உளவேயாம். பஞ்சபூதங்களுள் மண், நீர், தீ, காற்று எளிதே விளங்குவதால் பிரத்தியக்ஷப் பிரமாணத்தில் அடங்கும். ஆகாசம் வாயுவையடக்க வல்லது என்பது அனுமானத்தால் துணியப்படும். பஞ்சேந்திரியங்களது உண்மை பிரத்தியக்ஷத்திலும் அனுமானத்திலும் அடங்கும். கன்மேந்திரியங்கள் ஐந்தும் பிரத்தியக்ஷம் அனுமானமாகிய இரண்டாலும் துணியப்படும்.

அனுமானம் ஒன்றன் இருப்பை நிச்சயஞ் செய்யுமேயன்றி யதன் உருவத்தை நன்கு காட்டாது. உருவமும் விளக்கமுறின் அத்துணிவு பிரத்தியக்ஷத்தி லடங்கும்.

"உண்டோர் ஒண்பொரு ளென்றுணர்வார்க் கெலாம்
பெண்டிர் ஆண் அலி என்றறி யொண்கிலை."

என்றனர் திருவாதவூர் அடிகளும்; ஆதலின் ஒன்று எட்டப்படினும் அஃது சுட்டளவையைக் கடந்து நிற்பின் அத்துணிவே அனுமானம்.

மனம், அகங்காரம், புத்தி யாகியவற்றையும் இவ்வாறே உய்த்துணர்ந்து தக்க அளவைக்குள் அமைத்துக் கொள்க.

பிரகிருதி ஆத்மா முதலியன சுட்டுக்கெட்டாது நிற்பவும், அவற்றை யுளவென ஏன் நம்பவேண்டும்? அவை இல்லாதனவெனக் கொள்ளல் ஆகாதோவெனின், கூறலுற்றார்.

(தொடரும்)



சிறு கதை.

# கண்ணம்மாள்

(தென்னாப்பிரிகா, டர்பன் சாஸ்வதி சபைத்தலைவர்
திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை.)

பங்கஜம் அவள் வீட்டுத் திண்ணையில் நின்று கொண்டு தலைவாரிக் கொண்டிருந்தாள். அப்போது அவள் வீட்டு வேலைக்காரி கண்ணம்மாள் வந்து, "அம்மா! மன்னிக்கவேண்டும். சாப்பாட்டுக்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறது. எனது வீட்டு நிலைமைதான் தங்களுக்குத் தெரியுமே. தயை செய்யவேண்டும்" என்றாள்.

பங்கஜம் அதற்கு, "ஆமாம் சம்பளம் பெற்ற ஒருவாரத்திற் கெல்லாம் உனக்குப் பணமுடை ஏற்பட்டுவிடும். அது உன் வழக்கந்தானே" என்றாள்.

கண்ணம்:—அம்மா! சம்பளப் பணமெல்லாம் கடனுக்குச் சரியாய்ப் போச்சு. எனது புருஷனார் நோயும் பாயுமாகக் கிடப்பது தங்களுக்குத் தெரிந்ததுதானே. எப்படியாவது மனம் வைத்து எங்களைத் தாங்கள் ஆதரிக்கவேண்டும்.

பங்க:—போன மாதத்திலும் முன்பணமாக சில்லரைப் பெற்றுக்கொண்டாய். அதை நான் உனது சம்பளத்தில் பிடிக்கவில்லை, இப்போதும் முன்பணமாகக் கேட்கிறாய். இதை எல்லாம் எப்படித் தீர்க்கப்போகிறாயென்று எனக்குப் புலப்படவில்லை.

கண்ணம்:—மாதம் ஐந்து ரூபாயாவதுப் பிடித்துக் கொள்ளுங்கள். அவருக்குக் காய்ச்சல் இன்னும் விட்டபாடில்லை. குழந்தைகளும் சொங்கு, சேதபேதி முதலியவைகளால் காயலாக இருக்கிறார்கள். இதையெல்லாம் சற்று யோசியுங்க ளம்மா?

பங்க:—எப்படியிருந்தாலும், என்னால் இப்போது ஒன்றும் செய்ய முடியாது. இன்றைக்குப் பணத்தை வாங்கிகொண்டு நாளைக்கு வேலைக்கு வராமலும் நின்றுவிடுவாய். யார் கண்டது!—என்று தன் அறைக்குள் சென்றுவிட்டாள்.

கண்ணம்மாள் கண்களில் நீர் சொரிய மெதுவாக தன் குடிசையை நோக்கிச் செல்வதைப் பங்கஜம் கண்டாள். மனமிளகியது. கண்ணம்மாள் பொய் சொல்லவில்லை என்பதையும் அவளறிவாள். அன்றியும் கண்ணம்மாள் நற்குணமும் விசுவாசமு முள்ளவள் என்பதை பங்கஜத்தி னுள்ளமறியும்.

கண்ணம்மாள் தன் வீட்டு வழியிலுள்ள நாலைந்து வீடு புகுந்து கடனாக பொருளுதவி செய்யும்படி கேட்டாள். ஆனால் பலனற்ற ஏக்கத்துடன் தன் குடிசையை அடைந்தாள்.

* * * *

அங்கு தரைமீது விரித்திருந்த ஒரு கிழிந்த பாயின்மேல் அவள் புருஷன் கோவிந்தன் படுத்திருந்தான். அவளது பெண் ஒருத்தி அடுப்பில் வைக்கப்பட்டிருந்த சட்டியிலிருந்த கூழை, மர அகப்பையால் துழாவிக் கொண்டிருந்தாள். இரண்டு குழந்தைகள் இடுப்பில் கிழிந்த சவுக்கம் அணிந்து ஒரு பக்கம் சுருண்டு படுத்துக்கொண்டிருந்தார்கள். ஒரு சிறுவன் மட்டும் உடம்பின் மீது ஒன்றுமில்லாமல் ஆடிக்கொண்டிருந்தான். கண்ணம்

மானைக் கண்டதும் அட்பையன் பசிக்கிறதென்று கூறினன். அவன் எஜமானி வீட்டிலிருந்து கொண்டுவந்த பழைய அமுதை அக்குழந்தைகளுக்குச் சிறிது பங்கிட்டுத் தந்தாள்.

பின்னர் கண்ணம்மாள் தன் ஏழைக் கணவனின் நெற்றியில் கையை வைத்துப் பார்த்தாள். ஜுரம் அதிகமாயிருந்தது. கோவிந்தன் கண்களைத் திறந்து தாகமென்றான் சட்டியில் காய்ந்துகொண்டிருந்த கஞ்சியில் சிறிது கொணர்ந்து கண்ணம்மாள் அவன் வாயில் ஊற்றினாள். கோவிந்தன் கொஞ்சம் குடித்தான். பிறகு இறங்கவில்லை. கண்ணம்மாளை வெறித்துப் பார்த்தான். அம்மா மார்படைக்கிறது—மார்படைக்கிறது என்று அலட்டிக்கொண்டிருந்தான். அவனது முகத்தையும், வார்த்தைகளையும் கவனித்த கண்ணம்மாள் மிகப் பயந்தாள். அப்போது மழையும் பெய்ய ஆரம்பித்தது.

கண்ணம்மாள் தன் புருஷனின் காலைத் தொட்டுப் பார்க்க கால் சில்லென்றிருந்தது. ஓவென் றலறினாள். பிள்ளைகளும் தாயைக் கண்டு அழ ஆரம்பித்தார்கள். கொட்டு மழையில் யாவரையும் விட்டுவிட்டு கண்ணம்மாள் வைத்தியர் வீட்டை நோக்கி ஓடினாள். அவ்வைத்தியன் அவள் முறையிடலுக்குச் செவி கொடுக்கவில்லை. "இதற்கு முன் இருமுறை வந்ததற்கே ஐந்து ரூபாய் தரவேண்டும். கொடுத்தால் வருகிறேன்" என்றான். கண்ணம்மாள், "ஐயோ தயை செய்யுங்கள். மூச்சு நின்றுவிடும்போலிருக்கிறது. கை கால் சில்லிட்டுவிட்டது கடைசியாக எனது புருடன் எனக்கு வாங்கித் தந்த ஒரு சேலை என்னிடமுண்டு. அதை விற்றாவது தாங்கள் கூலியைத் தந்துவிடுகிறேன். தயை செய்து இவ்வேழைக் கிரங்குங்கள்" என்றாள். வைத்தியனும் கடைசியாகப் புறப்பட்டு வந்தான்.

*   *   *   *

கோவிந்தனுக்கு ஒருவர் வைத்தியமும் இனித் தேவையில்லை. அவன் கண்கள் கண்ணம்மாள் மீதும் குழந்தைகள் மீதும் சென்றன. கஷ்டமாயுழைத்து மனைவி மக்களை அருமையாய் ரட்சித்து வந்தவனுவான் கோவிந்தன். அந்தோ! கோவிந்தனது சுவாசம் வரவர அடங்கிற்று. கடைசியில் "ஐயோ! கண்ணம்மா! என் ஏழைக் குழந்தை........" என்று மெதுவாகக் கூறிக்கொண்டிருக்கும்போதே சுவாச மடங்கிற்று. கால் மாட்டில் குழந்தைகளும், தலைமாட்டில் கண்ணம்மாளும் கோவென்றலறிக் கொண்டிருந்தார்கள். மழை அப்போதும் பெய்துகொண்டுதானிருந்தது. பாகஜத்துக்கு இந்த விஷயம் எட்டியதும் மெய்யாகவே மிகவும் வருந்தினாள். அன்று அவள் கண்ணம்மாளுக்குப் பணம் கொடுத்திருந்தாலும், கோவிந்தன் பிழைத்திருக்க மாட்டானென்றாலும், கொடுக்காமற் போனதற்காகத் தன்னை வெறுத்துக் கொண்டாள்.

வேலைக்காரர்களை ஆதரித்தல் குடும்பத் தலைவர்களின் கடமையாகும். அபாயமான நிலையிலுள்ள மனிதர்களைக் காப்பாற்றுவதில் சிரத்தையுள்ளவர்களாக இருக்கவேண்டும். இன்றேல் அவர்களது கஷ்டம் நிவர்த்தியாகாது. அன்றியும் ஏழைகளின் கவலையை நன்றாய் விசாரணை செய்து அவர்களுக்குத் தகுந்தபடி உபகாரம் செய்வதனால் ஏழைகள் கஷ்டம் குறைவுபடும். அத்தகைய அறிவும் அன்பும் வேலைக்காரர்களை வைத்திருக்கும் எஜமான், எஜமானிகளுக்கு வேண்டுமென்ற எண்ணத்தோடு இச்சிறு கதையைப் பூர்த்தி செய்கிறேன்.

# "மணிமேகலை" ஆராய்ச்சி

R. V. இராமஸ்வாமி B. A., B. L. வக்கீல், சேலம். (Rights Reserved.)

அக்காலத்தில் தமிழ்நாட்டில் தற்காலத்தில் உள்ளவாறே நான்கு வகை வருணத்தவர்களும் இருந்தனர். (மணி 6: 56) அவர் தம்முள், முன்னின்ற அந்தணருக்கு, ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், கொடுத்தல், கோடலென்ற ஆறும் உரியனவென்பர் தமிழ் நாட்டுப் பழக்கமறிந்த முந்தையோர் (தொ. புற 20 உரை). மணிமேகலையில் வந்துள்ள வாரணாசி அந்தணன் அபஞ்சிகனைப் போன்ற பலர் வேதமோதுவித்து வந்தனர். ஆபுத்திரனை வருத்திய அந்தணர் குழாத்தினரைப் போன்ற பலர் வேள்விக ளியற்றியும் வந்தன ரென்பதும் விளங்குகின்றது. சாலிவிட்டுச் சென்ற தனியிளங் குழவி தவித்து அழுதுகொண்டிருந்தது கண்ட பூதி யென்னு மந்தணன், அதனையெடுத்துச் சென்று வளர்த்து வந்து, தனது மரபிலக்கணப்படி, தக்கபருவத்தில் தனது அபிமான புத்திரனுக்கு, மார்பிடை முந்நூலும், நாவிடை நன்னூலும் விதி முறைப்படி ஏற்றிய செய்தி கூறப்படுதலும் காண்க.

மருதி "புரிநூன் மார்பன், முத்தீப்பேணு முறையெனக் கில்லேன்" (22: 47-48) எனத் தனது கணவனது முத்தீப் பேணு முரிமையைத் தனது தூய்மையின்மையால் இழந்ததாகக் கூறி வருந்திய விடத்து, அந்தணர் முத்தீ வளர்த்திடும் வழக்குக் கூறப்பட்டுள்ளது. இவ்வழக்கு, "மறைநவி லந்தணர்", "நான் மறை முதல்வர்", "கேள்வி முற்றிய வேள்வியந்தணர்", "இரு பிறப்பாளர், முத்தீப்புரைய" என்றிவ்வாறாகப் புறநானூற்றில் வருதல் காண்க. (1, 6, 361, 367). "மூன்று வகைக் குறித்த முத்தீச்செல்வத் திரு பிறப்பாளர்" எனத் திருமுருகாற்றுப்படையும் குறித்திடும். (181-2).

## வணிகர்

ஓதலும்; வேட்டலும், ஈதலும், உழவும், நிரையோம்பலும், வாணிகமுமாகிய இவ்வாறும் வணிகர் குலத்துதித்தவர்களுக்கு உரியனவாகப் பழந் தமிழ் நூற்கள் கூறுகின்றன. (புற வெண்: வாகை-10). வைசியர் தங்களின் குலவொழுக்கப்படி வாணிகம் செய்து வந்தனர். "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்ற பழமொழிக் கிணங்க, வியாபாரத்தினிமித்தம் நாவாயிலேறி அயலூர்களுக்குச் சென்று வந்து பொருளீட்டுவர். சாதுவன் கப்பலேறி வணிகருடன் தானும் சென்றதும் (காதை. 16); தருமதத்தன் மதுரை சென்று வியாபாரஞ் செய்து தரும வழியில் பொருள் தேடியதும் (காதை. 22); மணிமேகலையில் கூறப்பட்டுள்ளன. அவர்கள் செய்து வந்த வியாபாரத்திற்குரிய பொருள்களாகிய கூலம் எட்டென்பர். கூல வியாபாரியாகிய சாத்தனாரும் எட்டென்றே கூறுவர். (28: 48-9). கூத்தநூலார் பதினெட்டு வகையாக இதனைக் கூறுவர்.

## தெய்வபக்தி (இந்திர விழா).

தமிழ் மக்கள் என்றும் தெய்வபக்தி கொண்டவர்கள். இந்நூல் பூம்புகாரில் நடைபெற்ற இந்திரவிழாவைக் குறித்துத் தொடங்குகின்றது. அது

நகரினர் யாவரும் ஒருமிக்கக் கூடி யியற்றி வந்ததொரு திருவிழாவாகும். நகரிலுள்ள பெரியோர்கள் ஒருங்கே திரண்டு கூடி விழாவைச் செய்வோமென முடிவு செய்து கொண்டு அதனை நகரினருக்கும் அறிவிப்பாராயினர். இங்ஙனமாக நாடானத்தினையும் பற்றிய பொது விஷயங்களைப் பொதுக் கூட்டமொன்று கூட்டி அங்கு முடிவாகத் தீர்மானித்தால் அக்காலத்துப் போல இக்காலத்திலு முள்ளன. விழாக்களை முறைப்படி செய்யாது போகின் தெய்வ நிந்தனைக்குட்பட்டுத் துர்த்தேவதைகளால் தீமைகள் பல நிகழ்ந்திடு மென்று நம்பினராகலின் முறைப்படி உரிய காலங்களில் தெய்வங்களுக்குச் செய்யவேண்டிய விழாக்களைச் செய்து வந்தனர். மதுரை மருதனிளநாகனார், உள்ளி விழாவென்ற திருவிழா வொன்றைக் குறித்துள்ளார். (அகம். 368) அவ்விழாக்காலத்தில் கொங்கர் மணிகளை அரையிற் கட்டி ஆடுவது வழக்காக இருந்தது.

தொல்காப்பியம் அகத்திணையியல் ஐந்தாம் சூத்திர உரையில் நச்சினார்க்கினியர் "மருதநிலத்திற்குத் தெய்வமாக, "ஆடலும் பாடலும் ஊடலும் உணர்தலும்" உள்ளிட்ட இன்ப விளையாட்டு இனிதினுகரு மிமையோர்க்கும் இன்குர லெழுவிக்கும் இறைவனாகிய இந்திரனை ஆண்டையோர் விழவு செய்து அழைத்தலின், அவன் வெளிப்படுமென்றார்; அது 'வையைப் புதுப்புனலாடத் தவிர்ந்தமை, தெய்வத்திற்றேற்றித்தெளிக்கு' என இந்திரனைத் தெய்வமென்றதனாலும், இந்திரவிழாவூரெடுத்த காதையானு முணர்க" என்று குறித்துள்ளது ஈண்டு காண்க. வால்மீகி, காளிதாஸர் முதலிய வட மொழிப் புலவர்களின் நூற்களிலும் இந்திரவிழாவினுண்மை கூறப்பட்டுள்ளன.

## வழிபாட்டு வகை

இவ்விழாக்காலத்தில் நகரினர் யாவரும் தமது அரசனோடு கடலாடுவ ரென்பது சிலப்பதிகாரம் ஆறுவது காதையால் தெரியவருகின்றது. நுதல் விழி நாட்டத்து இறையோன் முதலாகச் சதுக்கத் தெய்வமீறாகப் பல தெய்வங்களையும் வழிபடுவோர் காவிரிப்பூம்பட்டினத்தி லிருந்தனர். தத்தமது மதவொழுக்கப்படி தெய்வங்களை ஆராதித்தும் வந்தனர். தெய்வங்கள், தீர்த்துறையிலும், மன்றங்களிலும், தொல்வலி மரவடிகளிலும், கோட்டங்களிலும் பிற எவ்விடத்துமிருந்து, எவருக்கும் எச்சமயத்தும் எவ்விதத்திலும், எத்தீங்கும் வாராதவாறு காத்திடுமென்ற பூரணமான நம்பிக்கையுடையோர்களாக இருந்தனர். திருமுருகாற்றுப்படையிலும், (6: 3-9 : கலித் தொகையிலும் (101-6); நற்றிணையிலும் (343); புறநானூற்றிலும் (196); இங்ஙனமாகவே கூறப்பட்டுள்ளதை, இதனோடு ஒப்பிட்டுக் காண்க.

தெய்வத்தை நம்பியோருக்குக் குறையென்பதே எள்ளளவும் நேரிடாதென்று எண்ணியிருந்தார்களாகலின், அக்காலத்திய தமிழர்கள் தமது குறைகளைத் தெய்வங்களே போக்கவல்ல ஒப்பற்ற குணப்பெருமை வாய்க்கப் பெற்றவைகளென்று உணர்ந்திருந்தாராகலின்; தெய்வத்தின் முன்னிலையில் தமது துன்பங்களைக் கூறி முறையிட்டு அவற்றைத் துடைத்திடுமாறு வேண்டுவர். வாயாற் புகழ்ந்து பாடுவர். கைகூப்பித் தொழுவர். முடிபணிந்து வணங்குவர். தெய்வங்களைத் தூணிலும் கல்லிலும் உள்ளதாகக் கொண்டு வழிபடுவர். கோயில் முதலிய பரிசுத்தமான இடங்களில் தீயனவொன்றும் செய்யார். கண்ணீரின் கலப்பால் மலர்கள் தூய்மையற்றனவாக, அவைகளை மாலையாகத் தொடுத்துத் தெய்வங்களுக்கு இடுதலாகாதென்று அவற்றைப்



புறக்கணித்துப் புதுமலர் கொணர மணிமேகலை பூஞ்சோலை சென்றதால், அக்காலத்தினர் தெய்வங்களுக்கு மலர் மாலையிடும் வழக்கைக் கொண்டிருந்ததும், அவற்றை பக்தியோடும் பரிசுத்த சித்தத்தோடும் தொடுத்தலையும் விளக்குதல் காண்க. காரிருள் நீங்கிடக் கதிரவன் வந்தபின் கந்திற் பாவையொடு சம்பாபதியையும் வழிபடப் பலர் வருவரென ஆசிரியர் குறித்துள்ளதால், தெய்வங்களைத் தொழுது எழும் பக்த சிகாமணிகளு மக்காலத்திலிருந்தனரென்பது விளங்கும். (22: 2-3). தமது இருப்பிடத்தைவிட்டு அயலிடங்களுக்குச் செல்லுவோர் தெய்வங்களை வழிபட்டு வணங்கிப் பின் செல்லும் வழக்கினையும் கொண்டிருந்தனர்.

## சமய வாதிகள்

சமய வாதிகளும் புகாரில் ஒருங்குடனிருந்து ஒற்றுமையும் அன்பும் கொண்டவர்களாகித் தத்தமது மதக் கோட்பாட்டின்படி அவரவர்கள் ஒழுகி வந்தனர். தத்துவ விசாரணையில் அபிமானங் கொள்வோர் கேட்டறியவும், பிற யாவரும் கேட்டு நலம் பல பெற்றிடவும், பொது மன்றங்களில், அறவழிகாட்டும் அரிய பிரசங்கங்கள் பல அறிஞர்களால் செய்யப்பட்டு வந்தன. சமயவாதிகள் தமது கொள்கைகளைக் கூறி வாதம் செய்தும் வந்தனர். இவற்றோடன்றி, அரசர்களும், மற்றுமுள்ள பலரும் நற்றவ முனிவர்களிடத்தில் தருமோபதேசம் பெற்று அதன்படி ஒழுகி வருவர். பிரமதருமர் அத்தி பதிக்குத் தரும முரைத்ததும் (கதை 9); சங்க தருமர் சுதமதிக்கும் அவள் தந்தைக்கும் அறமுரைத்ததும்; அறவணர் மாதவி, மணிமேகலை முதலிய பலருக்கும் நல்லுபதேசம் செய்து நல் வழிப் படுத்தலும் காண்க. மணிமேகலையா மிந்நூலிலிருந்து இவ் வாசிரியரின் காலத்தில் சமண மதமும், பௌத்த மதமும் வெகுவாக எங்கும் பரவி யிருந்த தென்பது தெரியவரும்.

## சுபகாரியங்கள்

விழாக்காலங்களில் மங்களகரமாகத் தென்னிந்தியர்கள் செய்து வந்த பல சுபகாரியங்கள் இன்னவை யென்பது செம்மையாகச் சாத்தனார், முரசறைவோன் வாயிலாகக் கூறியுள்ளார். (காதை. 1.) தூண்களில் முத்துத் தாமங்களை நாட்டியும்; மாடங்களிலும் வாயில்களிலும் துகிற் கொடி வகைகளைக் கட்டியும்; பூரண கும்பம், பொற்பாலிகை, பாவை விளக்குமாகிய இவற்றைத் தோரணங் கட்டிய வீதிகளிலும், கோட்டங்களிலும் பரவி வைத்தும்; குலைக் கமுகு, குலைவாழை, கரும்பு, வஞ்சிக்கொடி, பூங்கொடி முதலியன ஏற்ற இடங்களில் கட்டியும்; கைக்கொண்ட நற்காரியங்களைத் தொடங்குவர். சிலப்பதிகாரத்திலும், இந்திர விழா வூரெடுத்த காதையில், இவ்வாறாகவே கூறுவர். ஆயின் 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' காலத்தின் கோலமாகலின், அவற்றுள் அக்காலத்தில் சிறப்பாகச் செய்யப்பட்டு வந்து இக் காலத்தில் நடைபெறாதனவாக இருத்தலு முண்டு. சதுக்கப் பூதத்தின் வாயிலாக ஆடம்பரங்கள் நிறைந்து சூழப் பெற்ற விழாக்களை விரும்பித் தெய்வங்களைப் பணியும் வழி நல்ல வழியன் றெனவும், உள்ளன்போடும், மெய்ப் பக்தியோடும், செய்திடும் தெய்வ காரியங்களே ஏற்புடைத்தா மெனவும் ஆசிரியர் குறிப்பால் பெற வைத்துள்ளனர். (22: 62—65.) நகர் முழுவதும் கொண்டாடிய விழாவாகலின் நகரிலுள்ள பொதுவிடங்களும் வீதிகளும் அலங்கரிக்கப் பட்டன போலும்!

தெய்வங்கள் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள மலைகளுக்குச் சென்று வருதல் புண்ணியச் செயல்கள் பலவற்றுள் ஒன்றெனக் கருதி யிருந்தனர். பாதபங்கயமலையைத் தாரையும், வீரையும் தம் கணவனோடு சென்று தரிசித்ததும்; அறவணர் சென்று வந்ததும் கூறப்பட்டுள்ளது. தீவதிலகை, சமந்தக மலையைத் தரிசித்து வருவாளாயினள். (காதை. 11.) கன்னியாகுமரி, சங்கமுகத்துறை, காவிரி முதலிய புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவது சிறப்புற்றதெனக் கொண்டு அவற்றில் நீராடுவர். வடமொழியாளரோடு கன்னியாகுமரியில் நீராடச் சுதமதியின் தந்தையும் (5: 37—38) கொண்டோற்குப் பிழைத்துத் தண்ட மஞ்சிசாலி தென்றிசைக் குமரியாட வந்ததும் (13: 5–7) மருதி காவிரியிலே நீராடி வந்ததும் (22) நோக்குக.

## மாதரொழுக்கம்

பெண்டிரினும் ஆடவரே அறிவில் மேன்மை யுடையோராகக் கருதப்பட்டு வந்தனர்.

"மண்டிலை மாளுங் களிறனை யார்க்குப்
பெண்டிர் கூறும் பேரறி வுண்டோ." (18: 140—1.)

என வந்துள்ள அடிகள் அதனைக் குறிக்கிறது. அக் காலத்தில் கற்புள்ள மாதர்கள் கணக்கிலடங்காதவ ரிருந்தனர். அவர்கள், கன்னிப் பருவத்தும், மணந்த காலும், தமது கணவரிறந்த பின்னரும் பிறாது பாதுகாவலுக்கு உட்பட்டிருப்பர். கற்பென்னும் சீரிய வழியினைப் பற்றி அசைவின்று நின்று, பிறரைக் கண்ணாலும் பாராதவர். கொண்டோனைத் தெய்வமாகப் போற்றிடுமியல்பினர். இங்ஙனமாகப் பெண்டிர் கன்னிப் பருவத்து தந்தையாலும்; மணந்த பின்னர் கணவனாலும்; அவனிறந்த பின்னர் பிள்ளைகளாலும் ஆதரிக்கப் பட்டு அவாது காவலிலிருப்ப ரென்பது மனுவும் கூறுவர். (9 : 3.) யாஞ்யவல்கியர் மேற்கூறியவற்றோ டன்றி அம் மூவரின் ஆதரவு மற்ற வழி பிற சுற்றத்தாரின் காவலுக் குட்படுவ ரென்பர். (1: 8—5) கற்புள்ள மாதரை எவரும் போற்றி வந்தனர். பத்தினிப் பெண்டிரின் இயல்பு மேலே விரிவாகக் கூறப்பட்டுள்ளது. பத்தினிப் பெண்டிரின் பாற் சென்றணுகியும், கற்றவப் பெண்டிர் பின் மனம் போக்கியும் நிற்போர் தீவினையை உறுதியாக அடைவரென்று யாவரும் கருதி வந்தனர். (22–21–3).

பெண்டிர்களும் கற்பே தாம் கைக் கொள்ள வேண்டிய மேலான தருமமென்பதுணர்ந் திருந்தனர். ஆதிரையின் கற்பு விசேடத்தைக் காண்க. சுகந்தனது புதல்வனது கடுமொழி கேட்டு ஆற்றிய மருதி "கொண்டவனுக்கு யாதொரு பிழையுஞ் செய்திலேனே. அங்ஙன மிருக்கக் கண்டவனின் நெஞ்சில் எளிதாகப் புகுந்தேனே. தெய்வமே! இல்லறத்திற்குத் துணையாக நிற்றலை ஒழித்தேனே. கற்பின் நெறியையும் துறந்த பாவியாயினேன். யான் செய்த குற்றம் யாதென அறிகின்றிலேனே" என்று மனம் வெந்து தனது களங்கமற்ற தூய்மை தோன்ற புலம்பலுற்றாள். சதுக்கப் பூதமும் உத்தமப் பெண்டிரின் உயர்ந்த குணங்களைக் கூறுதல் காண்க. (காதை. 22) ஆடவரும் பெண்டிரது கற்பைப் போற்றியே வந்தாராகலின், உதயகுமரன் காயசண்டிகையிடம் மொழியாடியதற்குச் சினமுற்றுக் காஞ்சனன் அவனை வெட்டியது காண்க.



பெண்களுக்குத் தோழிகளுண்டு. (கதை. 3.) தனித்துச் செல்லுமிடத்துத் தீயோரால் கேடு நிகழு மென்ற எண்ணம் கொண்டு, மாதர் துணையுடனன்றி தனி வழி போகார். சுதமதிக்கு நேரிட்ட அவகேடு இதனை வலியுறுத்தும். பெண்கள் பூப் பறித்தும், பூத்தொடுத்தும், தெய்வங்களுக்கு இட்டு பக்தியோடு வழிபட்டு வந்தனர் வளையல் முதலிய ஆபரணங்களும் உயர்ந்த நேர்த்தியான ஆடைகளும் அணிந்திடுவர். புத்திர சோகத்தால் தாய்மார்கள் பட்ட அளவுகடந்த துயரமும், அவாது செயலும், இராசமா தேவியின் நடத்தையாலும், கோதமையின் கதையாலும் விளக்கப் படுதல் நோக்குக. கணவனுடைய பெயரைக் கற்புடைய நங்கையர் கூறாரென்பதும் விளங்கும். (காதை. 22.)

## தூய்மையற்ற பெண்டிர்

இன் சொல்லும் பணிவுடைமையுமே பெண்டிர்களுக்கு இலக்கணமாக இருக்கவும், சித்திராபதி போன்ற ஒரு சிலர், மனத்தை வேறுபடுத்தும் கபட மொழிகளையும், உள்ளத்தை ஊசலாடுமாறு செய்விக்கும் புன் மொழிகளையும் கூறிவந்தனர். சில விடத்து, மனைவியர் தமது கணவரோடு ஊடலுமுண்டு. (காதை. 10.) பெண்டிர்கள் நன்னெறியினின்றும் வழுவித் தீயவழிகளிற் செல்லுவார்களாயின், தமது செயலுக்கு அஞ்சி அதனால் உளவாகும் தீங்குகள் வாராத வாறு தம்மை விலக்கிக் கொள்ளுதற் கெனப் புண்ணியத் துறைகளாடியும், நற்கருமங்களைச் செய்தும், காலத்தைக் கழித்து வருவர். நாடகக் கணிகையரின் குலத்தவளாயினும், மாதவி, கணவனிடத்து வற்றாத அன்பு கொண்டு அவனிறந்ததற்குச் சகியாளாகிக் கணவனை இழந்ததோடு உலகப் பற்றுக்களையும் நீத்திட்டு மாதவர் பள்ளியை அடைந்து, அறமுணர்ந்து, நன்னெறி நின்று மேம்பாடுற்றனள். (18 : 7-8 ; 22 : 178-9.)

## மேன்மைக் குணத்தினர்

பெண்டிர்கள், தமது வாழ்க்கைத் துணைவரான கணவருடன், ஒருங்குடன் மாண்டிடுவது அக் காலத்தில் வழக்காக இருந்தது. (6: 55.) இங்ஙனமாகக் கணவருடன் மாய்ந்த நங்கையர்கள், முற்காலத்தில் இந்திய நாட்டில் எண்ணிறந்தவ ரிருந்தனர். ஆசிரியர் தொல்காப்பியர் காஞ்சித் துறைகள் கூறுமிடத்து "நல்லோள் கணவனொடு நனியழற் புகு"ந்திடு மதனைக் கூறுதலும் ; இளம் பூரணர், நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர்கள் அதனை விளக்கிக் காட்டுதலையும் காண்க (புறத்திணை. 24 ) கணவனே தெய்வம். அவனன்றித் தமக்கு இகத்தில் துணை வேறில்லை யென்ற களங்கமற்ற சிந்தனை யுடையோரா யிருந்த கற்பரசியர்கள் அவர்கள், கணவ ரிறந்த பின்னர் உலகில் கணமேனும் இருந்திட ஒண்ணாராகி, அவனுடனே தாமும் உயிரைத் துறந்திட சித்தமாக இருந்தனர்.

பூத பாண்டியன் தேவி பெருங்கோப் பெண்டு, "எமக்கு நள்ளிரும் பொய்கையுந் தீயு மொரு தன்மைத்தே" யென்று கூறிக் கணவனொடும் தீப் பாய்ந்தவள் சொல்லியதாக உள்ள அழகிய புறநானூற்றுச் செய்யுளை நோக்குக. (246.) உடன் கட்டை யேறி உயிரை நீத்திடும் இவ் வழக்கு, தற்கால நாகரிக மேம்பாட்டைக் கொண்டு ஒப்பிட்டு நோக்குமிடத்துப் பொருந்தாத தீய வழக்காக உள்ள தென்பதை யறிந்து பலரும் அதனை அகற்றிட முயற்சித்து வர—சதி யெனப் படுமது—கி. பி. 1829-ம் வருடம் அரசாங்கத்தாரால் நீக்கப்பட்ட தென்று சரித்திரம் கூறுகின்றது. (தொடரும்.)

# எழுத்துப் பிறப்பு

(வித்வான்-மு. இரத்தின தேசிகர்.)

(தொகுதி 20. பகுதி 12. 921-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி இவ்வகப்புற உறுப்புக்களின் உதவியால் தமிழெழுத்துக்கள் பிறக்குமாற்றை யாராய்வாம். 'உயிரும் உடம்புமாம். முப்பது எழுத்துக்களுள்ளும் முன்னைய பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் கண்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு உச்சரிக்கப் படுகின்றன. எஞ்சிய பதினெட்டு மெய்களுள், ய, ர, ல, வ, ழ, ள என்ற ஆறு இடையின மெய்களும் உயிரெழுத்துக்களைப் போன்றே, கண்டத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன. ங, ஞ, ண, ந, ம, ன என்ற ஆறு மெல்லின மெய்களும் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கின்றன. க, ச, ட, த, ப, ற என்ற ஆறு வல்லின மெய்களும், மார்பை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

"அவ்வழி
ஆவி இடைமை இடம் மிடறாகும்
மேவும் மென்மை மூக்கு உரம்பெறும் வன்மை"

இவ்வாறு அகக்கருவியாகிய மார்பை இடமாகக் கொண்டு தோன்றிய பன்னிரண்டு உயிரெழுத்துக்களுள்ளும் அ, ஆ என்ற இரண்டு உயிரெழுத்துக்களும் புறக்கருவியாகிய அண்ணத்தின் தொழிலாகிய அங்காத்தலாற் பிறக்கின்றன. இ, ஈ, எ, ஏ, ஐ என்ற ஐந்து எழுத்துக்களும் அங்காத்தலாகிய தொழிலோடு மேல் வாய்ப்பல்லை அடி நாக்கினது ஓரமானது பொருந்தப் பிறக்கின்றன. உ, ஊ, ஒ, ஓ, ஔ என்ற ஐந்து எழுத்துக்களும் இதழ் குவிதலாகிய முயற்சியாற் பிறக்கின்றன.

"அவற்றுள்
முயற்சியுள் அ, ஆ அங்காப்புடைய"

"இ ஈ எ ஏ ஐ அங்காப்போடு
அண்பல் முதல் நா விளிம்புற வருமே"

"உ, ஊ, ஒ, ஓ, ஔ இதழ்குவிவே"

உயிரெழுத்துக்கள் இம் முறையில் தோன்ற மெய்யெழுத்துக்களுள் க, ச, ட என்ற மூன்று வல்லெழுத்துக்களும் முற்கூறியாங்கு மார்பைப் பிறப்பிடமாகக் கொண்டு தோன்றி முறையே நாவின் அடி, நடு, கடை ஆகிய பாகங்கள் மேல்வாயின் அடி, நடு கடை ஆகிய பாகங்களைப் பொருந்தப் பிறக்கின்றன. இவற்றிற்கு இனமாகிய ங, ஞ, ண என்ற மூன்று மெல்லெழுத்துக்களும் முற்கூறியாங்கு மூக்கைப் பிறப்பிடமாகக் கொண்டு தோன்றி க, ச, ட,



என்ற எழுத்துக்களைப் போன்றே, நாக்கு மேலண்ணம் ஆகிய இவற்றின் தொழிலால், உச்சரிக்கப் படுகின்றன. த, என்ற வல்லெழுத்து மார்பினின்றும் தோன்றி நாவின் நுனி மேல்வாய்ப் பல்லடியைப் பொருந்துவதால் பிறக்கின்றது. இதற்கினமாகிய ந, என்ற எழுத்து மூக்கினின்றும் தோன்றி த என்ற எழுத்தைப் போன்றே பிறக்கின்றது. ப, என்ற வல்லெழுத்தும் தனக்குரிய பிறப்பிடத்தி னின்றும் தோன்றி, புறக்கருவிகளாகிய மேலுதடும் கீழுதடும் சேர்வதால் பிறக்கின்றது. இவ்வாறே இதற்கினமாகிய ம, என்ற எழுத்தும் பிறக்கின்றது. வல்லெழுத்துக்களுள் ஈற்றதாகிய ற, என்ற எழுத்தும் தனக்குரிய பிறப்பிடத்தி னின்றும் தோன்றி, நாக்கின் நுனி மேல் வாயைச் சென்றடைந்து நன்றாகப் பொருந்தி அதிர்தலைச் செய்யப் பிறக்கின்றது. இவ்வாறே இதற்கினமாகிய ன-என்ற மெல்லெழுத்தும் பிறக்கின்றது.

"க ங வும் ச ஞ வும் ட ண வும் முதலிடை
நு னி நா அண்ணம் உற முறை வருமே"

"அண்பல் அடிநா முடி உறத் தந வரும்"

"மீகீ ழிதழுறப் ப ம பிறக்கும்"

"அண்ணம் நுனி நா நனி உறின் றன வரும்"

இனி மெய்யெழுத்துக்களுள் இடைத்தர ஓசையை உடையனவாகிய ஆறு இடை யெழுத்துக்களுள்ளும் ய, என்ற எழுத்துத் தனக்குரிய மிடற்றி னின்றும் தோன்றி நாக்கின் அடி, மேல்வாய் அடியைப் பொருந்தப் பிறக்கின்றது. ர, ழ, என்ற இரண்டெழுத்துக்களும், மிடற்றி னின்றும் தோன்றி மேல் வாயை, நாவின் நுனி வருடுவதாற் பிறக்கின்றன. ல, என்ற எழுத்துத் தனக்குரிய இடத்தினின்றும் தோன்றி, மேல்வாய்ப் பல்லடியை நாவின் ஓரமானது தடித்தும் பொருந்துவதால் பிறக்கின்றது. இவ்வாறே ள-என்ற எழுத்தும் தோன்றி, மேல்வாயை நாவின் ஓரம் தடித்துத் தடவுவதால் பிறக்கின்றது. வ-என்ற எழுத்தும் அவ்வாறே தோன்றி மேல்வாய்ப்பல்லைக் கீழுதடு சென்று பொருந்துவதாற் பிறக்கின்றது.

"அடிநா அடி அணம் உறய தோன்றும்"

"அண்ணம் நுனிநா வருட ரழவரும்"

"அண்பல் முதலும் அண் ணமும் முறையின்
நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்
லகார ளகாரமாய் இரண்டும் பிறக்கும்"

"மேற்பல் இதழுற மேவிடும் வவ்வே"

தனி நிலையாகிய ஆய்தவெழுத்து உச்சியைப் பிறப்பிடமாகக்கொண்டு தோன்றி, மேல் அண்ணத்தின் தொழிலாகிய அங்காத்தலால் உச்சரிக்கப்படுகின்றது. உயிர் மெய் முதலிய ஏனைய சார்பெழுத்துக்கள் தத்தம் முதலெழுத்துக்களைப் போன்றே உச்சரிக்கப்படுகின்றன.

"ஆய்தக்கு இடம்தலை அங்கா முயற்சி
சார்பெழுத்து ஏனவும் தம்முதல் அனைய"

இனி இவ்வாறாகத் தமிழ் நெடுங் கணக்கில் உள்ள எழுத்துக்கள் பண்டையோரால் எம்முறையில் அமைக்கப் பெற்றிருக்கின்றன என்பதை ஆராய்

வாம். முதலெழுத்துக்கள் முப்பதனுள்ளும், முன்னைய பன்னிரண்டு எழுத்துக்களும் உயிர்போலத் தனித்தியங்கும் தன்மையைப் பெற்றிருத்தலின் முன் வைக்கப்பட்டன. எஞ்சிய பதினெட்டு எழுத்துக்களும் மெய்போலத் தனித்தியங்கும் ஆற்றலற்றிருத்தலின் பின்னே வைக்கப்பெற்றன.

உயிரெழுத்துக்களுள்ளும் அ-என்ற எழுத்து அங்காத்தலாகிய ஒரே சிறு தொழிலாற் பிறத்தலின் முன் வைக்கப்பட்டது. இ-என்ற எழுத்து, அவ்வங்காத்தலாகிய முயற்சியோடு அடிநா விளிம்பு அண்பல் அடியைப் பொருந்துவதாகிய முயற்சியாற் பிறத்தலின் இரண்டாவதாக வைக்கப்பெற்றது. உ-என்ற எழுத்து அவ்வங்காத்தலோடு, புறக்கருவிகளுள் ஈற்றனவாகிய இதழ்கள் குவிதலாற் பிறத்தலால் மூன்றாவதாக வைக்கப் பெற்றது.

ஈண்டு கண்டம், அண்பல் அடிநா, இதழ் ஆகிய கருவிகள் உள்ளிருந்து வெளியேறுவதுபோல் ஒன்றன்பின் ஒன்றாக அமைந்திருப்பதற்கொப்ப, அவற்றின் தொழில்களாற் பிறக்கின்ற அ, இ, உ என்ற எழுத்துக்களும் ஒன்றன்பின் ஒன்றாகப் பிறப்பு முறையை நோக்கி அமைக்கப்பெற்றிருத்தல் பாராட்டத்தக்கதொன்றாம். ஆ, ஈ, ஊ என்ற எழுத்துக்களுக்கும், மேற்கூறிய மூன்றெழுத்துக்களுக்கும் இனவெழுத்துக்களாதலால் அவற்றைச் சேரவைக்கப்பெற்றன. எ, ஒ, ஐ, ஔ என்ற நான்கு எழுத்துக்களும் இனவொலியாற் பிறக்கின்ற எழுத்துக்களாதலால் அச் சிறப்பின்மை நோக்கி இறுதியில் வைக்கப் பெற்றன. ஏ, ஓ என்ற இரண்டு எழுத்துக்களும் எ. ஒ. என்ற எழுத்துக்களுக்கு இனவெழுத்துக்களாதலால் அவற்றைச் சேரவைக்கப் பெற்றன.

மெய்யெழுத்துக்களுள் முன்னைய ஆறு எழுத்துக்களும் வல்லோசையுடையனவாதலின் முன்னே வைக்கப்பெற்றன. மெல்லெழுத்துக்கள் அவற்றினமாதலின் அவற்றைச் சேரவைக்கப்பெற்றன. இடையெழுத்துக்கள் ஆறும் ஓரினமாதலின் ஈற்றில் தனியே வைக்கப்பெற்றன. அன்றியும் க ங, ச ஞ, ட ண, த ந, ப ம என்ற எழுத்துக்கள் அடிநா அடியண்ணம், இடைநா இடையண்ணம்; நுனிநா நுனியண்ணம், அண்பல் அடி, இதழ் என்னும் இவற்றின் முயற்சியாற் பிறத்தலின்; அப்பிறப்பிடங்களின் முறையை நோக்கி ஒருங்கு சார்த்தி வைக்கப்பெற்றன. ய, ர, ல, ள, வ என்ற எழுத்துக்கள் அடிநா, அடியண்ணம், அண்ணம், நாநுனி, அண்பல் முதல், இதழ் என்ற புறக்கருவிகளின் முயற்சியாற் பிறத்தலின், அம்முறை பற்றி ஒருங்கே வைக்கப்பெற்றன. ழ, ற, ன என்ற மூன்று ஒலிகளும், தமிழ் மொழிக்கே சிறப்பொலிகளாதலின் ஈற்றில் வைக்கப்பெற்றன.

இதுகாறும் கூறியவற்றால் மொழித்தோற்றமென்பது, மக்கள் முயற்சியாலேயே உண்டாகக்கூடியதென்பதும்; மொழி நூலுண்மைக் கிணங்க பேச்சு வழக்கிற்குப் பின்பே எட்டு வழக்கு அமையும் என்பதும் எட்டு வழக்கிற்கு மொழி வரும் காலத்தே நெடுங்கணக்கு அமைக்கப்பெறுமென்பதும்; எட்டு வழக்கை ஒட்டி இலக்கியங்கள் தோன்றிய காலத்தே, அவற்றைச் செம்மைப்படுத்த இலக்கண அமைதி தோன்றிற்றென்பதும்; பேச்சு வழக்கில் கையாண்ட ஒலிகளில், முக்கியமான ஒலிகளே எட்டு வழக்கிற்கு அமைக்கப்பெற்றனவென்பதும்; அவ்வொலிகள் நம் உடற் கூற்றமைப்பின் தன்மையை ஒட்டியே உச்சரிக்கப்பெறுகின்றனவென்பதும்; அவ்வாறு உச்சரிக்கப்பெறும் ஒலிகள் நெடுங்கணக்கில் ஓர் முறைபற்றி அமைக்கப்பெற்றிருக்கின்றனவென்பதும் தெளியப் பெறுதல் காண்க.




# 31. ஸ்டுவர்ட் அரசர்களும் அரசியல் கக்ஷிகளின் ஆரம்பமும்

(T. S. ராஜகோபாலன், B. A., L. T.)

ஒவ்வொரு தேசத்திலும் எந்தெந்தக் காலத்திலும் எல்லாச் சமூகத்திலும் கக்ஷிகள் இருந்தே தீரவேண்டும். கக்ஷிகள் இருப்பது தான் சமூகத்தில் உயிர் இருப்பது போலாகும். அவரவர்கள் தங்கள்தங்களுடைய உண்மை நிலைமைகளை அப்போதப்போது அறிந்துகொண்டு தேவைக்கும், சந்தர்ப்பங்களுக்கும் ஏற்றவாறு மாற்றிக்கொள்ளவோ, திருத்திக்கொள்ளவோ சந்தர்ப்பங்கள் ஏற்படும். முக்கியமான பிரச்னைகளின் உண்மை தப்புகளை தெளிவுற அறிவதற்கும் சாதகம் ஏற்படும். தூங்குகின்றவர்களை தட்டி எழுப்புவதாகும். அயர்கிறவர்களை ஊக்கப்படுவதாகும். அதி தீவிர கதியில் போகிறவர்களை நிதானப்படுத்துவதாகும் இவைகளெல்லாம் அறிவாளிகளால் ஒப்புக்கொள்ளப்பட வேண்டியனவாகும். இதை யொட்டி இங்கிலாந்திலும் ஆதி சரித்திர ஆரம்ப முதல் கக்ஷிகள் இருந்து வந்திருக்கின்றன. இப்பொழுதும் உள்நாட்டு முறைக்குப் பல கக்ஷிகள் இருக்கின்றன.

ஆரம்பத்தில் பிரிட்டன் வாசிகளுக்குள்ளேயே, மலைநாடுகளில் வசித்த முரட்டு பிரிட்டானியர், சமவெளிகளில் இருந்த சாதாரண பிரிட்டானியர் என பிரிவுகள் இருந்தன. அப்பிரிவுகளிலும் தனித்தனிக் குடும்பங்களும் அவற்றில் பலவற்றிற்கு ஒரு அரசனும், அம்மாதிரி ஒரு இனத்திலாலேயே பல அரசர்களும் இருந்திருக்கின்றனர்.

அந்தப் பிரிட்டானியரை ரோமானியர் ஜெயித்து சமாதான முறையில் ஆண்ட காலத்தில் அவர்களிடம் பணிந்து அவர்கள் வழிகளைப் பின்பற்றியவர் நாகரிக பிரிட்டானியர். அவ்வாறு பணியாமல் மலைப்பிரதேசங்களுக்குச் சென்ற பிரிட்டானியர் அங்கிருந்து பல தடவைகளில் ரோமானியரையும், பிறகு ரோமானிய நாகரிக பிரிட்டானியரையும் தாக்கிக் கஷ்டப்படுத்தியது சரித்திர பூர்வம். நாகரிக பிரிட்டானியர் கிருஸ்தவ மதத்தினராயும், அநாகரிக பிரிட்டானியர் கொஞ்ச காலம் ட்ரூயிட்களை மத குருக்களாகக் கொண்ட இனத்தினராயும், பிறகு கெல்ட்டிக் கிறிஸ்தவ மத அனுஷ்டானம் உள்ளவர்களாகவும் இருந்தனர்.

அதன் பிறகு ஆங்கிலோ சாக்ஸனியர் படையெடுத்தபோது அவர்களுடன் போரிட்டு மடிந்தவர் போக எஞ்சியவர்கள் பணிந்தனர். மற்றவர்

மலைகாடுகளுக்கு ஓடினர். அந்த ஆங்கிலோ சாக்ஸனியருக்குள்ளும் ஆங்கிள்ஸ், சாக்ஸன்ஸ் ஜூட்ஸ் என்ற கக்ஷியினரும் அவர்களுக்குள்ளேயே கிறிஸ்தவ மதம் பரவியபோது ரோமானிய கிருஸ்தவ மதத்தை அனுஷ்டித்த கக்ஷியும், ஐயோனிய கிருஸ்தவ மதத்தை அனுஷ்டித்த கக்ஷியும் இருந்தன. டேனர்கள் படையெடுத்து நாளடைவில் பலவேறு சாதனங்களால் ஒன்றுபட்டும், நார்மனியர் படையெடுத்து, பூராவாக வென்று இங்கிலாந்திலுள்ள பலவேறு இனத்தினரையும் அடிமைகளாக்கி நார்மனியரையே பெரிய பிரபுக்களாக ஆக்கினர். அந்த பிரபுக்களில் பலரும் சந்தர்ப்பம்போல் அரசனை எதிர்த்த கக்ஷியினராகவும் அரசனைப் பணிந்து நின்ற கக்ஷியினராகவும் எப்போதும் ஒரே நிதானமாக நடந்துகொள்ளும் கக்ஷியினராகவும் பிரிந்திருந்தது சரித்திர பூர்வமானது. பிறகு உரிமையிருந்தோ அல்லது தேகபலத்தினாலோ அல்லது வஞ்சனையினாலோ அரசு பெற்ற அரசனைச் சேர்ந்த கக்ஷியெனவும் பழைய அரசன், அவனுடைய சந்ததியாருடைய கக்ஷியெனவும் ஏற்பட்டும் இரண்டிலும் சேராமல் இரண்டு கக்ஷியினர் போராலும் தேசமக்களை வாட்டிக் கொள்ளையடிக்கும் கக்ஷிகளும் உண்டு. உதாரணமாக ஸ்டீபனும் மெடில்டாவும் போரிட்டு உள்நாட்டுக் கலகம் ஏற்பட்ட காலத்தில் ஜனங்கள் பட்டபாடும் நாட்டின் அமளியும் இத் தொடர் கட்டுரை படிப்பவர்களுக்கு தெரிந்திருக்கக்கூடியதே!

அதேபோன்று ஜான், ஹென்ரி III, எட்வர்ட் II, ரிச்சர்ட் II, ஹென்ரி VI போன்ற ஆங்கில அரசர்கள் காலத்தில் தேசத்தில் பல வேறு கட்சிகள் தோன்றி ஒன்றுக்கொன்று சந்தர்ப்பத்திற் கேற்றவாறு பலவேறு சவுகரியங்களையோ அசவுகரியங்களையோ செய்திருப்பதும் நேயர்களுக்குத் தெரிந்ததே. இந்த மத்தியில் பாமர ஜனங்களைப்போலவே மதகுருமார்களுக்குள்ளும் கக்ஷிகள், பெரிய போப்கள் முதல் சாதாரண குருக்கள் வரையில் பல திறப்பட்ட அபிப்ராயங்களும் சண்டைச் சச்சரவுகள் குழப்பங்கள் எதிர்ப்புகள் கண்டனங்கள், பிரஷ்டங்கள், பிராயச்சித்தங்கள் முதலிய நடந்திருப்பதும் தெரிந்த விஷயங்கள். உதாரணமாக, ஸெயிண்ட் டாமினிக், ஸெயிண்ட் பிரான்ஸிஸ், ஜான் விக்ளிப், ஜான் பால், மார்ட்டின் லூதர், இக்னேஷியஸ் லயோலா, கால்வின் ஸ்விங்க்ளி, நாக்ஸ் முதலியவர்களின் செய்கைகள் பல சந்தர்ப்பங்களில் இத் தொடர்ச்சிகளில் எழுதப்பட்டிருக்கின்றதை வாசகர்கள் நினைவிலிருக்கலாம். இவைகள் காரணமாகப் பல திறப்பட்ட மதக் கோஷ்டியினர், ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் முறையில் முடிந்த அளவு மற்ற இனத்தினரை இன்னல்களுக்குள்ளாக்கிய விவரங்களும் உண்டு. சிலர் இன்க்விஸிஷன் போன்ற இரகசிய முறைகளில் கொளுத்தியும் கொன்றும் வந்திருக்கின்றனர். சிலர் மற்றவர்களைச் சட்டங்கள், தடைகள், அபராதங்கள் லைசென்ஸ் கட்டணங்கள் மூலம் நாகரிக வழிகளில் துன்புறுத்தியதும் உண்டு.

தவிரவும் பிரபுக்களிடமிருந்து, பணம்பெற்ற பிரபுக்களிடம் செல்வாக்குப் போகவும், அதன்மூலம் மத்திய வகுப்பு ஜனங்கள் நிர்வாகத்திற்கு வரவும் அவர்களுக்கும் பரம்பரை பிரபுவினருக்கும் மாச்சரியங்கள், பரிகாசங்கள், தொந்திரவுகள், தாக்குதல்கள் ஏற்பட்டிருப்பதும் உண்டு. இந்த முறையில் தான் ட்யூடர் அரசர்கள் காலத்தில் மத்திய வகுப்பு ஜனங்கள் தங்கள் செல்வத்தின் மூலமும், சாதாரண ஜனங்கள் கல்வியின் மூலமும் முன்னணிக்கு



வந்து உல்ஸி, க்ராம்வெல்போன்றவர்கள் நிர்வாகிகளாக இருந்து, அரசியல் அனுபவம் பெற்றதும் ஏற்பட்டது. அந்த அனுபவத்தின் பலனாகத்தான் பொது ஜனங்களின் பிரதிநிதிகளினது சபையான (House of Commons) தெய்விக உரிமை கொண்டாடிய அரசர்களை எதிர்த்து, சாம,தான,பேத, தண்ட உபாயங்களைச் சந்தர்ப்பத்திற்கேற்ப, சாம, தண்ட தான, பேதங்களாக மாற்றி முடிவில் வெற்றி பெற்று, இங்கிலாந்தில் புரட்சித்திட்டம் ஏற்பட்டது. அரசர்கள் கொண்டாடிய உரிமைகள் இல்லையெனவும் பொது ஜனங்களே நாட்டின் பல விஷயங்களுக்கும் உரிமையுள்ளவர்கள் என்பதும் சட்ட பூர்வமாகவும் அனுஷ்டான பூர்வமாகவும் ஸ்தாபிக்கப்பட்டன.

இந்த முறையில்தான் அரசியல் முறையில் தேசத்தில் கக்ஷிகள் ஸ்டுவர்ட் அரசர்கள் காலத்தில்தான் ஏற்பட்டன என்று சரித்திர மேதாவிகள் அபிப்பிராயப்பட்டு விளக்கி வருகிறார்கள். ஏனெனில் மேலே விளக்கப்பட்டபடி பலவேறு கக்ஷிகள் அதற்கு முன்பு இருந்தபோதிலும், அரசியல் முறையில், வரிவிதிக்க, சட்டங்களைச் செய்ய, செய்த சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர, தேர்தல்களை நேர் முறைகளில் நடத்த, சட்டங்களை ரத்து செய்ய, சட்டப்படி நடக்காதவர் யார் என்பதை நிர்ணயிக்க, அப்படி நிர்ணயித்த பிறகு மீறியவர்களைத் தண்டிக்கப் பல உரிமைகள் தேசத்தை ஆளும் அரசனுக்கா அல்லது அவனது ஆளுகையினால் நன்மையாகவோ தீமையாகவோ பாதிக்கப்பட்ட பிரஜைகளுக்கா என்பதுதான் ஸ்டுவர்ட் காலத்தில் ஏற்பட்ட சச்சரவு விஷயமாகும். அதில் அரசன் போர் தொடுத்த காலத்தில் அரசனுடைய கக்ஷியென்றும், பொதுஜனப் பிரதிநிதிகள் அடங்கிய பார்லிமெண்டின் கக்ஷியெனவும் இரண்டு கக்ஷிகள் அரசியல் விஷய சம்பந்தமாக ஏற்பட்டன. அரசனைச் சேர்ந்தவர்களுக்கு Royalists or Cavaliers குதிரை வீரர்கள்) என்ற காரணப் பெயர்களும், பார்லிமெண்டின் கக்ஷியைச் சேர்ந்தவர்களுக்கு Parliamentarians or Round heads என்ற காரணப் பெயர்களும் ஏற்பட்டனவாம்.

பிறகு கதோலிக்கன்தான் என்று பகிரங்கமாகத் தெரிவித்து உத்யோகத்தை உதைத்துத் தள்ளிய ஜேம்ஸ் அரசனாகக் கூடாது என்று விலக்கு விலக்குதல் மசோதா (Exclusion Bill) பிரயத்தனம் செய்தவர்கள் என்றும் அரசனுடைய கொள்கையை ஆதரித்து ஜேம்ஸ்தான் அரசனாக வேண்டும் என்று நினைத்தவர்கள் ஒரு கக்ஷியினர் என்றும் ஏற்பட்டது. அவர்களில் முன்னவர்களுக்கு மனுப்போடுபவர்கள் (Petitioners) அல்லது கிராமக் கனவான்கள் (Country Gentlemen) என்றும் பெயர் ஏற்பட்டது. ஆகவே மற்றவர்களுக்கு அரசனுக்கு எதிராக இருப்பவர்களைக் கண்டாலே அருவருக்கிறவர்கள் (Abhorrers) அல்லது ராஜ சபையினர் (Courtiers) என்றும் பெயர் ஏற்பட்டது. இந்தப் பெயர்களிலிருந்து ஜனங்களின் மனப்போக்கு எவ்வாறு இருந்த தென்பது யூகித்துக் கொள்ளலாம். ஆகவே 'கிராமக் கனவான்''களுக்கு 'Whigs' 'விக்' கக்ஷி யென்றும், 'ராஜசபையினருக்'கு 'Tories' டோரிக் கக்ஷி யென்றும் சீக்கிரத்தில் ஏற்பட்டது. இந்த விக் கக்ஷியினர் நிறைந்த பார்லிமெண்ட் தான் சார்ல்ஸ் IIன் கடைசி காலத்தில் மூன்று தடவைகள் கலைக்கப்பட்டது. பிறகு டோரிக் கக்ஷியினரின் உதவியினால் ஜேம்ஸ் II பட்டத்திற்கு வந்தது. அந்த டோரிக் கக்ஷியினரின் மனமும் புழுங்கி, கஷ்டப்பட்டுத் தவித்து வெறுக்கும்படி அந்தக்கடைசி

முடி மன்னன் முழு மோசம்' செய்தான் என்பதும் வாசகர்கள் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டிய விஷயம். "ஆற்றங்கரை மரம், அரசறிய வீற்றிருந்த வாழ்வு"க் கொப்ப, டோரிகளும் காமஞ் சாரப்பட்டார்கள். ஆக இருவரும் வெறுத்துப் புரட்சிக்கு ஏற்பாடு செய்தனர். அந்த இரண்டு கக்ஷியினரின் ஏகோபித்த ஆதரவின் பேரிலேயே ஹாலந்து அரசன் வில்லியம் இங்கிலாந்துக்கு வில்லியம் III ஆகி, ஜனங்கள் விடுத்த உரிமைகள் விண்ணப்பத்தை ஒப்புக்கொண்டு இங்கிலாந்து ஜனங்களுக்கு பெருமையானதும், இரத்தக்கறை யற்றதும் ஆனதென்று பெருமை பாராட்டும் படியான புரட்சி ஏற்பட ஹேதுவாகியது என்று சென்ற கட்டுரைகளில் எழுதப்பட்டது.

இனி அரசன் எவ்விதங்களில் இந்த கட்சிகளுக்கும், இந்தக் கட்சித் தலைவர்களுக்கும் உட்பட்டு ஆட்சி நடத்த வழி யேற்பட்டது என்பதும், பிரதிநிதிகளின் பொறுப்பில் அரசன் எல்லாக் காரியங்களையும் விட்டு விட்டான் என்பதும், ஆங்கிலேயரின் அரசியல் சாமர்த்தியமும் அடுத்து எழுதப்படும்.


## ஒரு சிறந்த நாவல் சஞ்சிகை

'மனமோகினி' என்னும் நமது இனிய நாவல் சஞ்சிகைக்கு இப்போது பிப்ரவரி முதல் பதின்மூன்றாவது ஆண்டு நடந்து வருகிறது. இதில் 'நாகபுரியின் நாகரிகம்' என்னும் புதிய நாவல் ஆரம்பிக்கப்பட்டு வெளியாகிவருகிறது. இந்நவீனகம் படிக்கப் படிக்கத் தெவிட்டாத அமுதமாகும். இதுவே ஆங்கில நாவலாசிரியராகிய ரெயினால்ட்ஸின் கடைசி கதையாகையால் மிக்க ருசிகரமாக இருக்கும். சுமார் நான்கு ரூபாய் விலையுள்ள நாவல் ஒரு வருஷத்தில் கிடைக்கும். பிரதி மாதமும் கிரௌன் 1-க்கு 16 சைசில் 80 பக்கங்கள் வெளியாகின்றன. இதன்,

வருஷ சந்தா ரூபா 2—8—0 தான்.

அன்னிய நாடுகளுக்கு ரூபா 3—0—0.

உடனே முன்பணம் அனுப்புங்கள்.

மானேஜர்:—'ஆனந்தபோதினி' ஆபீஸ்,
தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.


# இயற்கையறிவு-செயற்கையறிவு

(பண்டித இராம சுப்பிரமணிய நாவலர்.)

இயற்கை யறிவு ஒருவற்குப் பிறப்பான் எய்துவது. கல்வி, கேள்வி, ஆய்ப்பு என்னும் இவற்றான் எய்துவது செயற்கை அறிவு எனப்படும். எவ்வுயிரின் மாட்டும் தன் தகுதிக்கு ஏற்ற அறிவு காணப்படுகின்றது. உயிரும் உணரும் இயல்பிற்றாகலின், எவ்வகைய உணர்ச்சியேனும் பெறாத உயிர்கள் சில. உயிர்கள் தாம்புக்க யாக்கைகளின் இயல்பான் அறிவு மிளிர்தலும் மிளிரப் பெறாதலும் நிகழ்கின்றன. மரம் முதலிய ஊற்றுணர்ச்சியொன்றை பெற்றுள்ளன என்ப. அதனான் அவ்வுயிர்க்கு இயல்பானே ஊற்றுணர்ச்சி மட்டுமே யாண்டும் உரித்து என்னலாகாது. மரமாகிய உடல்களின் இயல்பான், ஊற்றுணர்ச்சி ஒன்று மாத்திரையே பெறுதற்கு இயல்கின்றது. பிறப்புண்மை கூறுவோர் பக்குவத்திற் கேற்ப அறிக்கை வருமென்ப. விலங்குகள் ஐவகை யுணர்வும் பெற்றுள்ளன. அவற்றின் உடம்புகளும் அவற்றைத் துய்த்தற்குரிய இயல்பினவாய் இலங்குகின்றன. உயிர்க்கு உணர்ச்சி இயல் பென்க. உயிரில் பொருள்க ளுணர்ச்சி இல்லாதன.

மக்கள் தம் உடம்பினியல்பான் ஐவகை யுணர்வுகளுடன் பகுத்துணர்ச்சி எய்துதற்கும் உரியர். பகுத்துணர்ச்சி பிறப்பான் எய்துதலின், இயற்கை யுணர்வு எனப்படும். மக்களுள்ளும் இயற்கை யுணர்வு குன்றினாரு முளர். அவர் வெளியுடம்பாற் குறைவிலரேனும் உள்ளத்தின் விளைவு அருகினரெனவே படுவர். அவர் மாக்கள் எனப் படுவர்.

'மாவு மாக்களு மையறிவினவே
மக்கடாமே யாறறி வுயிரே' —தொல்காப்பியம்

மக்கள் பகுத்தறிவிலராயின், மக்களினும் வேற்றுமைபட நிற்பது உடம்பொன்றே. அவர், உடம்பை நீக்கின், மக்களின் வேறல்லாவர் என்பது. ஆகலான், இயற்கை யறிவில்லார் விலங்கொடு ஒப்பர்.

இயற்கை யறிவு ஆராய்ச்சியான் மிகும் இயல்புடைத்து. சிறிய இயற்கை யறிவுடையரும், ஆராய்ச்சித் துறையிற் கைபோகா திருப்பின், அறிவினலம் குன்றாநிற்பர்; ஆராய்ச்சி அறிவைத் தெளிக்கு மருமருந்தெனப் படும். கல்வி கேள்விகளான் எய்தப்படு முணர்வு, கற்ற பொருள்களின் மட்டுமே ஆராய்தற்கு உதவும் பான்மைத்து. உண்மை காண்டற்குரிய ஆராய்ச்சிக்கு அஃது பயன் செய்வது அரிது.

'நுண்ணிய நூற்பல கற்பினு மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்' —திருக்குறள்

என்பது காண்க. கல்வி கேள்விகளின் வெற்றி யுறுவதற்கு இயற்கை யறிவின் வலன் இன்றி யமையாதது. கற்றாரெல்லாம் கல்லாதற்கும் கல்லார்

கற்றோராதற்கும் இயற்கை யறிவினின்மையும் உண்மையும் ஏதுவா மென்க. சிலர், தம் இயற்கை யறிவின் ஊற்றத்தான், கல்வி யுடையரினும், ஆராய்ச்சி வலன் பெற்று ஒளிர்கின்றனர். ஆயினும், கல்லாரேல் கல்வித்துறை பற்றிய உணர்ச்சி எய்துவதில்லை; பொதுவுணர்ச்சியே பெரிதும் உண்டாவது. இயற்கை யறிவும் நூலறிவும் ஒருங்கு இருப்பின், அறிவு எல்லாவகையானும் இனிது ஒழுகி இலங்கு மென்க.

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.'

'எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.'

என வந்தன இயற்கையறி வியல்பு காட்டுவனவே. என்னை? யாண்டும் உண்மை காண்டல் கல்வி யறிவான் மட்டும் எய்துதற்கு உரித்தன்றாகலின். 'அறிவுடையா ரெல்லா முடையர்' ஆதற்கு, அவர் எதையும் இனிது ஆய்ந்து உண்மை கண்டு அவ்வுண்மை வழி யொழுகிப் பெரும்பயன் எய்துதல் காரணமென்று கொள்ளப் படூஉம்.

எப்பொருளினும் நுண்மை யுணர்தற்கு இயற்கை யறிவே ஏதுவா யுள்ளது. இயற்கை யறிவின்றேல், நூற்கருத்துக்கள் எளிதின் உண்மையும் நுண்மையு முறப் புலப்படுத லரிது. அறிவிலாருடைய கொள்கையாகவுள்ள பேதைமை யுணர்ச்சி (மூட நம்பிக்கை)யில் ஈடுபடுவது இயற்கை யறிவிலாருடைய இயல்பு. கற்றோரும் சிலர் பேதைமை யுணர்ச்சி கதுவ நிற்பது இயற்கை யறிவின்மை யாலாம் என்க. கண்டதனையும் கேட்டதனையும் கிடந்தவாறே உடம்படாஅர், இயற்கை யறிவுடையார். புலவனது புனைவாற்றலாற் போதரும் பொருண்மைகளையும் உண்மையெனக் கோடல் இயற்கை யறிவு தலைப்படார் தலைப்பாடாம். நோக்குழி, இயற்கை யறிவின்றேல், உலகியல் வாழ்வு பயன்படுதலின்று; வாழ்வு முற்றவும் பேதைமை சான்று அன்னற்படுத்து நிற்கும்.

'நுண்மா ணுழைபுல மில்லா னெழினலம்
மண்மாண் புனைபாவை யற்று.' —திருக்குறள்

புலமை இயற்கை யறிவின் கவினிய வளத்தால் அரும்புவதாகும். கல்வி புதுவ தொன்றை உணரும் பெற்றித்தாகலின், புலமை கல்வியான் மட்டும் உண்டாவதன்று. இயற்கை யறிவில்லாதான் புலமை பொருளில்லாதான் கைபோலும் பொய்படுவ தொன்றெனல், மறுக்கப்படாத தொன்று.

கற்றுத் துறைபோய ஒருவன்தான் கற்ற துறைகளை யன்றிப் பிறிது ஒன்றை அறிகுந னல்லன். விஞ்ஞான முணர்ந்தான் விஞ்ஞான கலையினையும் கணக்கு உணர்ந்தான் கணக்கினையு மட்டுமே அறிவன் பிறிதொன்றல் அவன் உள்ளஞ் சென்று உணர்வது யாது, கல்லாவிடத்து? இயற்கை யறிவு எதனையும் அறியும் வலியுடைத்தாம். இயற்கை யறிவுடையான் தான் கற்றதிற் பெரிது ஒளிருவதொடு கல்லாதவற்றையும் பொதுநோக்காக உணரும் ஆற்றலுடையன்.



கற்றல் மாத்திரையே யுடையன் பிறபொருளை எளிதினும் விரைவினும் உணரான். எளிதுணராற்றல் இயற்கை யறிவின் இயல்பு. எதைக் கூறினும் கூர்ந்து கேட்டலும் எதினும் இயன்றவாறு அறிவு கடைக்கூட்டி உணர்தலும் இயற்கை யறிவுடையானது செய்கை. சிலர் சில்கலைகளில் அறிவு நன்கு உடையராயினும், தாமுணராத கலைகளில் உள்ளம் ஊக்குவதின்று. அவையிற்றில் அவர்க்கு வெறுப்புத்தானே உண்டாகின்றது. இயற்கை யறிவுடையர்க்கு எக்கலைகள் தாம் வேண்டாதன?

புதுவது பயிறலும் நாடி நன்கு உணர்தலும் ஆராய்ச்சிவலனும் அறிவின் கண்ணே எப்போழ்தும் நிலைநின்று வாழ்தலும் இயற்கை யறிவுடையார்க்கு உரியவாயின. அவரே அறிவின் செல்வத்தை உடையர். அறிவுக்கு ஒவ்வாதன அவர்க்கு வேண்டாதன. அறிவிலார் குழுவில் அன்னார் புகுதா அஞ்சுவர். கற்றாரெல்லாம் அவர்க்கு நண்பர். அவரும் உணர்ச்சி வாயிலாக உழைப்போ ராகலின். ஆயின், அவர் மாட்டு இயற்கை யறிவு காணப்படாதாயின், அவர் அவரை ஒருவுவர். கற்றுத் துறைபோயவரும் இயற்கை யறிவுடையார்க்குத் தோல்வி எய்தி நிற்பது காண்டும். இயற்கை யறிவின் வலிமை இயம்பற்பாற் றன்று. அஃது ஓர் வரம்பிற் றன்று. உலகை அடிப்படுத்தி ஆள்வது யாண்டும் இயற்கை யறிவேயாம். இயற்கை யறிவின் வழிச் செல்கின்றது உலகம், இன்னும்,

ஒருவற்கு ஒன்று உற்றவிடத்துக் கைகொடுத்து உதவுவது இயற்கை யறிவேயாம். செயற்கை யறிவு தனக்கு உரியதன் றாகலின், உதவ வேண்டுமிடத்து உதவாது மலக்குறுத்துந் தன்மையுடைத்துச், சில்போழ்து இயற்கை யறிவு யாண்டு மாண்போலச் செறிவு முறுதியுமுற்றுக் காப்பாற்றும் கழிநலன் உடைத்து. அதனானே திருவள்ளுவரும்,

'அறிவற்றங் காக்குங் கருவி; செறுவார்க்கு
முள்ளழிக்க லாகா வரண்'

என்றருளினர்,

இனி, நுனுகக் கூறின், இயற்கை யறிவு செயற்கை யறிவென வழங்காறு பற்றி வகுத்தன மாயினும், செயற்கை யறிவு என ஒன்று இன்று என்பது புலனும். உலகத் தோறறக் காலத்து யாது செயற்கையறிவு எனப்பட்டது? யாது மின்றன்றே. இன்று உலகமுற்றும் இவர்ந்து ஒழுகுவது இயற்கை யறிவின் செறிவே. நூலறிவு செயற்கை யறிவன்றோ எனின், அன்று என்னை? நூலறிவு பிறனொருவன் அல்லது பலரது இயற்கையறிவு, அது அந்நூலைக் கற்பார்க்குச் செயற்கையறிவு என உபசாரம் பற்றி உரைக்கப் படுகின்றது, அத்துணையே. எனவே, கண்டு ஒருவற்குச் செயற்கை யறிவென்பது, தனக்குரித்தன்றாய்த் தான் எய்தும் பிறருடைய இயற்கை யறிவேயா மென்பது உணரப்படும். பிறர் பிறர் இயற்கை யறிவனைத்தும் ஒருங்கு ஒருவனிடத்துத் தொகுங்கால், அவனது இயற்கையறிவும் நலமும் நயமும் பெற்று விளங்குகின்றது. அது செயற்கை யறிவெனப் பட்டுத் தனக்குப் புதுவதாய்த் தோன்றினும், பயிற்சி வலியானும் இடையறா வன்மையானும், அவ்வறிவு ஒருவனது உள்ளத்து நன்கு ஊன்றிக் கலந்து ஒளிருங்காலை, செயற்கை யறிவின் பெற்றிமை இழந்து இயற்கை யறிவாய்த் திரிகின்றது. ஆகலின், புதுவது

பெற்ற அறிவின் கண்ணே வைகலும் பயிற்சி யுறுவது இயல்பின் ஒருவற்கு எய்திய அறிவை வளம்படுத்தற்குரிய நெறியாயவாறு காண்க.

எனவே, ஒருவன் தன் இளமைப் போதில் நன்கு இடையறாது பயிற்சி யுற்றுக் கைவரச் செய்த பேரறிவு அவனுடைய முதுமைக் காலத்து அவற்கு இயற்கை யறிவாகலாம். ஆயினும், அது பிறர் அளித்த வாழ்வே. இன்னின்னார்க்கு அறிவு பரம்பிற்றாக என்னும் நோக்க முடையது படைப்பன்றாகலின், ஒவ்வொருவருந் தாம் தாம் வருந்தி ஒவ்வொன்றைய மாராய்ந்து தத்தம் இயற்கை யறிவினை எழிற்படுத்தல் வேண்டும். ஒவ்வொருவருடைய அறிவினுணுக்கமு மொருபடிக் கொவ்வோர் வகைத்தாய் வயங்கலின், சிறந்த அறிவுடையாரைத் தலைப்பட்ட அவர் அறிவொடும் உள்ளங் கலப்ப நிற்பதும் இன்றியமையாததே. ஆயினும், தம்மறிவு பாழ்பட்டுக் கிடப்பப் பிறரறிவை எதிர் நோக்கி வாழ்தல் மட்டும் எத்தகையார்க்கும் இழிதகைத்தேயா மென்க.

மக்கட் பிறப்பின் குறிக்கோள் சீரிய அறிவை எய்துதலே, அறிவுடையாரை யஞ்சார் யாருமிலர். செல்வரும் வேண்டுழி அறிவுடையாரைத் தலைப்படுகின்றனர், தமக்கொன்று உற்றவிடத்து. அறிவினை இழந்தார் மக்கட்பண்பை இழந்தார். உலகில் எத்துணை அரும்பிறப்புக்களுள்? எத்துணை இனியன வாழ்கின்றன? அவற்றுளெல்லாம் மக்கள் சிறப்பக் காரணம் யாதென ஆய்க. எவற்றையும் மக்கள் கீழ்ப்படுத்தித் தம் ஆட்சிக்கட் கொணர்தற்குத்தான் கருவியாய்க் காணப்படுவது, அறிவன்றிப் பிறிதியாது கொல்?

'எனிகாக்கு மொண்மை யுறைப்படுத்தும் பண்போன்
.......................................................
இனிய ஞவான மற்றினி. இன்னிலை.

---

# ஆனந்தபோதினி அச்சுக்கூடத்தில்

போஸ்ட் கார்டுகள் முதல் போஸ்டர்கள் வரை புஸ்தக வேலைகள் உள்பட எல்லாவித அச்சு வேலைகளும் சுத்தமாகவும், அழகாகவும், கால தாமதமின்றியும் செய்து கொடுக்கப்படும்.

விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

மானேஜர்.

"ஆனந்தபோதினி" மதராஸ்.

# இராமாயணத்தின் வேதாந்த அர்த்தம்

(திரு-வி. சங்கரய்யர்.)

இப் பாரத கண்டத்தில் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் சரித்திரம் தெரியாதவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள். அதிலும் ஹிந்துக்களில் ஆபால விருத்தம் யாவரும் இதை ஒரு புண்ய கதை யென்றே நம்பி பாராயணம் செய்கின்றனர். இத்தகைய பெருமையும் மகிமையும் இதற்கு வரக் காரண மென்ன? இது ஆதியில் வால்மீகி மஹரிஷியால் ஸ்ரீராமரின் குமாரர்களான குச, லவர்களுக்கு கற்பிக்கப் பட்டு அவர்களால் ஸ்ரீராமர் அசுவமேதயாகம் செய்யுமிடத்தில் கானம் செய்யப் பட்டது. தமிழ் மொழியில் முக்கியமாக கம்பரும், அருணாசலக் கவிராயரும் நன்கு பாடியிருக்கிறார்கள். மலையாளத்தில் எழுத்தச்சன் என்பவர் 'அத்யாத்ம ராமாயணம்' என்று ஒரு புஸ்தகத்தில் ஸ்ரீராம கதையையும் எழுதியிருக்கிறார். இவைகளெல்லாம் நாம் ஸர்வ ஸாதாரணமாக அறிந்த விஷயம். இது போல் தெலுங்கு, கன்னடம், மஹாராஷ்ட்ரம் முதலான பல பாஷைகளிலும் பற்பல மஹான்களால் இராமாயணக் கதை எழுதப்பட்டிருக்கிறது.

இவ்வாறு நம் பாரதகண்டத்தில் வழங்குகின்ற பல்லாயிரம் பாஷைகளிலும் இந்த இராமாயணமானது மொழி பெயர்க்கப் பட்டு யாவரும் கொண்டாடிப் பாராயணமும் சிரவணமும் செய்து வரும்படியான மஹிமையுள்ளதாக இருக்கிறது.

## கதை

அயோத்தி (மோக்ஷ) நகரத்தில், தசரதன் (பிரம்மம்), கைகேயி (கிரியா சக்தி), கௌசல்யை (ஞானசக்தி), சுமித்திரை (இச்சா சக்தி) என்ற மூன்று மனைவிகளுடன் கூடி வாழ்க்கையில், கௌசல்யை (ஞானசக்தி) யின் கர்ப்பத்தில், ஸ்ரீராமர் (ஆத்மா) பிறந்து, பால்யத்தால் (அவ்யக்தத்தால்) தன்னை மறந்து இருக்கும் பொழுது, வசிஷ்டர் (சிரவணம்) என்ற குருவை அடைந்து, விசுவாமித்திரர் (மனனம்) என்பவரைத் தொடர்ந்து, லக்ஷ்மணனு (வைராக்யத்து)டன் நடந்து, பல மலைகள், காடுகள், வனாந்திரங்கள் (பாதகங்கள்) இவைகளைக் கடந்து சென்றார். அப்பொழுது ஸ்ரீராமர் (ஆத்மா) பாண (ஞானத்தைச் சரிப்படுத்தி, தாடகையை (ஆவரணத்தை) நோக்கி விட்டு, அவளை அடியோடு இறந்து போகும்படிச் செய்தார்.

பிறகு மாரீசனு (இச்சை)க்கு பயத்தை உண்டாக்கி, என் முன் வந்தால் உனக்கும் சாவுதான் என்று சொல்லி விரட்டி, பாறையை (விபசாரத்தை) மிதித்து, அகலியையை (ஆசாரத்தை) தோத்திரம் செய்து, மிதிலையை (ஏகாந்தத்தை) அடைந்து, ஜனகரை (சாந்தத்தை)ச் சேர்ந்தார். பின் சிவதனுசை (பொறுமையை) ஒடித்து, ஸ்ரீ ஜானகியை (ஆனந்தத்தை) பாணிக்கிரகணம் செய்து, பரசுராமரை (மதத்தை) எதிர்த்து ஜயித்து,

அயோத்தியை (மோக்ஷத்தை) அடைந்தார். மகுடாபிஷேகம் (ஜீவத்வமறல்) என்பதை கைகேயியின் ஏவல் (சலனம்) வந்தடைய தசரதனை (பிரம்மத்தை)ப் பிரிந்து, அயோத்தியையும் (மோக்ஷத்தையும்) துறந்து, லக்ஷ்மணருடனும் (வைராக்கியத்துடனும்) சீதையுடனும் (ஆனந்தத்துடனும்) சரயூநதியை (சித்தத்தை) குகன் (புத்தியின்) உதவியால் கடந்து வனத்தி (விக்ஷேபத்தி)னுட் சென்று, பிறகு சித்திர கூடத்தை (தபத்தை) அடைந்து, விராதனை (அகங்காரத்தை)க் கொன்றார். அப்பால் காகாசுரனை (மனத்தை) ஜயித்து அவன் ஒரு கண்ணை (சங்கல்பத்தை)க் கெடுத்து, மற்றொரு கண்ணை (விகல்பத்தை)க் கொடுத்து, அகஸ்தியரை (வீரத்தை) தரிசித்து, அவரிடமிருந்து அஸ்திரத்தை (தீரத்தை)ப் பெற்று, சூர்ப்பனகையை (காமத்தை) சிக்ஷித்து, கரதூஷணாதிகளை (ஆகாம்யங்களை)க் கொன்று, மாரீசனாலே (இச்சையாலே) சீதையை (ஆனந்தத்தை)ப் பிரிந்தார். அதனால், சீதையை (ஆனந்தத்தை) இராவணன் (இராஜசம்) அடுத்து எடுத்து, சீதையை (ஆனந்தத்தை) உருக்கும், இலங்கையி துன்பத்திலிருக்கும் இராக்ஷசர் (அசுபவாசனை) சூழ அசோகவனத்தில் (விசாரத்தில்) வைத்தான்.

இராமரோ (ஆத்மாவோ) மாரீசனை (இச்சையை)த் தொடர்ந்து, அவனை பூமியின் மேல் (நிராசையின் மேல்) வீழ்த்திக் கொன்று சீதை (ஆனந்தம்) இல்லாமல் மனம் நொந்து, இலக்ஷ்மணருடன் (வைராக்கியத்துடன்) கானகத்தில் (விக்ஷேபத்தில்) அலைந்து கவந்தனை (சிந்தனையை)க் கொன்று. சபரிவிடம் (சந்தோஷத்திடம்) சென்று, அனுமானை (ஆசாரிய புருஷனை)க் கூடி வாலி (பயத்தின்) மேல் அம்பெய்து சுக்ரீவனை (அபயத்தை)க் காத்து வானரங்களை (சுபவாசனைகளை)ச் சேர்த்து அனுமானை (ஆசாரிய புருஷனை)த் தூண்டி சமுத்திரத்தை (மோகத்தை)த் தாண்டி இலங்கணியை (லோபத்தை)த் தொலைத்து இராக்ஷசரை (அசுபவாசனையை)க் கொன்று, சீதையை (ஆனந்தத்தை)க் கண்டு அசோகவனத்தை (எண்ணத்தை) அழித்து இந்திரஜித்தை (விபரீதத்தை)ப் பழித்து இராவணனை (இராசதத்தை) எதிர்த்து அக்னியை (மயக்கத்தை) வளர்த்து இலங்கையை (துன்பத்தை)த் தொலைத்து, அணை (திடத்தை) கட்டி விபீஷணனை (சாத்வீகத்தை)க் கிட்டி, கும்பகர்ணனை (தாமஸத்தை)க் கொன்று ராமர் (ஆத்மா) வானரங்களுடன் (சுபவாசனையுடன்) கோதண்ட மெடுத்து (கம்பீரத்துடன்) பாணத்தை (ஞானத்தை) விட்டு சதமுகங்களையும் (தசேந்திரியங்களையும்) உடைத்து சீதையை (ஆனந்தத்தை)க் கண்டு அவளுடன் அயோத்திக்கு (மோக்ஷத்துக்கு) வந்து மகுடாபிஷேகம் (ஜீவத்வமறல்) செய்து கொண்டு அயோத்தியின் (மோக்ஷத்தின்) அதிபதியாக பிரம்மானந்தச் சொரூபனாகப் பிரகாசித்தார்.

அயோத்தி—மோக்ஷம்; மிதிலை—ஏகாந்தம்; இலங்கை—துன்பம்; தசரதன் — பிரம்மம்; சுமித்திரை — இச்சாசக்தி; கௌஸல்யை — ஞானசக்தி; கைகேயீ—கிரியாசக்தி; வசிஷ்டர்—சிரவணம்; விசுவாமித்திரர்—மனனம்; அனுமார்—நிதித்யாசம் ஆசார்ய புருஷன்; ஸ்ரீராமர்—ஆத்மா; இலக்ஷ்மணர்— வைராக்கியம்; ஜனகர்—சாந்தம்; வாலி—பயம்; சுக்ரீவன்—அபயம்; சீதை—ஆனந்தம்; சூர்ப்பனகை—காமம்; மாரீசன்—இச்சை, விபீஷணன்—சாத்வீகம்; இராவணன்—இராஜசம்; கும்பகர்ணன்—தாமசம்; சமுத்திரம்—மோகம்; இராக்ஷசர்—அசுபவாசனை; வானரர்—சுபவாசனை; பரசுராமர்—மதம்.




மனைவி:—(கோபமாக) சமையலறையில் தேள் வந்துவிட்டதே என்றால் நீங்க பாட்டுக்கும் போகிறீரோ.

மணாளன்:—(சாந்தமாக) துஷ்டனைக் கண்டால் தூர விலகு என்பது உனக்குத் தெரியாதுபோலும்.

***



தாய்:—"அடே! அலமாரியிலிருந்த பக்ஷணத்தை நீ எடுத்தாயோ?"

பையன்:—"ஆம் அம்மா, அதை ஒரு ஏழைப் பையனுக்குக் கொடுக்கும் படியாக எடுத்தேன்."

தாய்:—"அவன் அதை அதிக சந்தோஷத்தோடே வாங்கிச் சாப்பிட்டிருப்பானல்லவா?"

பையன்:—"இல்லை, ஏழைப் பையன் ஒருவனும் வராததால் பக்ஷணத்தை நானே வாயில் போட்டுக் கொண்டேன்."

***

சில பட்டிக்காட்டு ஆசாமிகள் புகைப்படம் பிடித்துவிட்டு மறுநாள் போட்டோகிராப்பரிடம் சென்று தங்கள் படத்தைக் கொடுக்கும்படி கேட்டார்கள்.

போட்டோகிராபர் (Photographer):—இன்னும் கழுவவில்லை; இன்று மாலை தருகிறேன்.

பட்டிக்காட்டான்:—நாங்கள் படம் பிடித்த இடத்தில் சகதி ஒன்றும் இல்லையே எப்படி விழுந்தது.

உபாத்தியாயர்:—(பையனைப் பார்த்து) இருபத்திரெண்டு எழுது என்றார்.

பையன்:—ஒரு இரண்டை போட்டுவிட்டு யோசித்துக்கொண்டிருந்தான்.

உபாத்தியாயர்:—என்னடா யோசனை?

பையன்:—2 போட்டுவிட்டேன் ஸார்! இன்னொரு 2 இந்தப் பக்கம் போடுகிறதா அந்தப் பக்கம் போடுகிறதா என்று யோசிக்கிறேன்.

***



நீதிபதி:—(சாக்ஷியைப் பார்த்து) பிரதிவாதி வாதியைத் திரும்பத் திரும்ப அடிக்கும்போது நீ விலக்கிப் பிடிக்காமல் என் பார்த்துக் கொண்டிருந்தாய்?"

சாக்ஷி:—"நான் அப்போது பொடி போட்டுக் கொண்டிருந்தேன்."

***

தாதா:—டேய், பாலைவனம் என்றால் எப்பேர்ப்பட்ட இடம்.

பேரன்:—ஒன்றும் முளைக்காத இடம்.

தாதா:—எங்கே அதற்கு ஒரு உதாரணம் சொல்.

பேரன்:—உங்கள் தலை.

***

தகப்பன் பையனைப் பார்த்து:—டேய், என்னடா நட்ட பயிர்களையெல்லாம் பிடுங்கி எறிகிறாய்?

பையன்:—உனக்குப் பிற்பாடு தண்ணீர் இறைப்பவர் யார் என்றுதான்.

***

பிச்சைக்காரன் டாக்டர் வீட்டிற்குப்போய் "ஐயா வயிறு பசி பொறுக்க முடியவில்லை; காதை அடைக்கிறது. கொஞ்சம் சாதம் போடுங்கோ. அம்மா."

டாக்டர்:—டேய் இன்னும் கொஞ்ச நேரம் பொறுத்து ஆஸ்பத்திரிக்கு வா. காதை ரிபேர் செய்கிறேன்.



உபாத்தியாயர்:—"என்னடா இப்படித் தலையில் கட்டுப் போட்டுக் கொண்டிருக்கே?"

கண்ணன்:—"ஒண்ணுமில்லை, சார். நீர் நேத்திக்கிச் சொன்னதுபோல் விழுந்து விழுந்து பரீக்ஷைக்குப் படிச்சேன். அதனாலே காயம்"

***

அப்பலாசாமி ஓர் சங்கீதக் கச்சேரிக்குச் சென்றான். அங்கு சங்கீத வித்வான் பல தெலுங்கு கீர்த்தனங்களைப் பாடிவிட்டு அடுத்தபடி என்ன, பாடலாமென்று வினவினர். உடனே அப்பலாசாமி, 'ஏன், மங்களம் பாடலாமே' என்றான்.

***



வீட்டுச் சொந்தக் காரர்:—"கடந்த மூன்று மாத வாடகையையும் இப்போது கொடுக்கின்றீரா அல்லது வீட்டைக் காலி செய்கின்றீரா?"

வாடகைக்குக் குடியிருப்பவர்:—"வீட்டைக் காலி செய்து விடுகிறேன்."

***

தன் மனைவியும் தாயும் சண்டை போட்டுக் கொண்டதைப் பார்த்து...... புருஷன், 'ஏண்டி வீட்டில் தான் சண்டை போடுகிறீர்கள். சாமி தரிசனத்திற்கு தனுஷ்கோடி வந்திருக்கிற பொழுதும் சச்சரவு ஒழிய வில்லையே, இனி எந்த ஊர் போனால் ஒழியும்?'

மனைவி:—'ஒங்க அம்மாள் எமனூர் போனால் ஒழியும்?"

***

மந்திரவாதி:—கனவான்களே இப்பொழுது என் கையில் ஒரு லட்டு இருப்பதைப் பார்க்கிறீர்கள். இதை உங்களுக்கு இஷ்டமான இடம் எதைச் சொன்னாலும் அவ்விடத்திற்கு அனுப்புகிறேன்.

ஒருவர்:—என் வாய்க்குள் அனுப்பும் பார்க்கலாம்.

***

தந்தை:—அடே சாமி! பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் சட்டையை நன்றாகத் தட்டி மடித்துவைக்கவேண்டுமென்று சொன்னேனல்லவா?

சாமி:—ஆமாம்; ஆனால் இன்று உபாத்தியாயரே பிரம்பால் தட்டிவிட்டார்.




நாளொன்றுக்கு 2 கோடி கடிதங்கள்

பிரிட்டன் ஜெனரல் போஸ்டு ஆபீஸ் வாயிலாக நாளொன்றுக்கு 2 கோடி கடிதங்கள் அனுப்பப் படுகின்றனவாம்.

***

11 அடி நீளமுள்ள பூட்ஸ்

ஜர்மனியில் ஓபர்ஸ்டோர்ப் என்னுமிடத்தில், பூட்ஸ் விளம்பரத்திற்காக, 11 அடி நீளமும், மனிதனை விட உயரமுமுள்ள பூட்ஸ் செய்யப் பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய பூட்ஸ் உலகிலேயே வேறெங்கும் கிடையாதாம்.

***

20 வருஷங்களில் 22 குழந்தைகள்

மேரிலாண்ட் என்னுமிடத்தில் விவசாயத் தொழிலில் ஈடுபட்ட தம்பதிகளுக்கு விவாகமாகி இருபது வருஷங்கள் தான் ஆகின்றன. ஆனால் அவர்களுக்கு 22 குழந்தைகள் இருக்கின்றனவாம்.

***

மனைவியை யிழந்தவரின் விசித்திர வாழ்க்கை

சைனாவில் 48 வயதுள்ள விசி என்பவர் 13 வருடங்களுக்கு முன் மனைவியை இழந்து விட்டார். அதனால் அவர் அம் மனைவியின் ஞாபகார்த்தமாக ஒவ்வொரு வருஷமும் அவள் இறந்த நாளன்று ஒவ்வொரு பெண்ணை விவாகஞ் செய்து கொண்டு வருகிறாராம். புதுப் பெண்ணை மணந்து கொண்டதும் பழைய மனைவியை விவாகரத்து மூலமாக நீக்கி விடுகிறாராம். என்னே இவரது விசித்திர வாழ்க்கை!

***

8 குழந்தைகளுக்குத் தாயான பிறகு கலாசாலை பட்டம்

லாகூரில் மூன்று குழந்தைகளுக்குத் தாயான வித்யாசேதி என்னும் பெண்மணி பஞ்சாப் சர்வ கலாசாலையில் பி. எஸ். ஸி. பரீட்சையில் முதலாவதாகத் தேறி யிருக்கிறாராம்.

***

30 அடி அகலமுள்ள கடிகாரம்

ஜோன்ஸ்பர்க் என்னுமிடத்தில், 30 அடி அகலமுள்ள கடிகாரம் அமைக்க முயற்சி செய்யப் படுகிறது. அவ்வாறு அமைக்கப் பட்டால், அதை ஆகாயத்திலிருந்தும் பார்க்கலாம். பூமியிலுள்ளவர்களும் மணி பார்க்கலாம்.

***

வெள்ளைநிறக் குரங்கு

நியூயார்க் நகரப் பொருட் காட்சியில் பால் போன்ற வெள்ளை நிறக் குரங்கொன்று இருக்கிறதாம். இவ்வளவு வெள்ளையான குரங்கை உலகிலெங்குமே பார்க்க முடியாதாம்.




ரஷ்யாவில் கடந்த பத்து வருஷங்களுக்குள் 2 கோடி 50 லட்சம் ஜனத்தொகை அதிகமாகி யிருக்கிறது.

* * * *

உலகில் ஏறக்குறைய 70 கோடி மாடுகளும், 75 கோடி ஆடுகளும், 25 கோடி பன்றிகளும் இருக்கின்றனவாம்.

* * * *

ஹாலிவுட்டில் சினிமாவில் நடிக்கும் வண்ணாத்திப் பூச்சி யொன்றுக்குத் தைக்கப் பட்டிருக்கும் ஆடைக்குச் சமமானது இவ் வுலகிலேயே இல்லையாம்.

* * * *

போன வருஷமட்டும், லண்டன் மிருகக் காட்சியிலுள்ள மிருகங்களுக்காக 122 டன் வைக்கோல் செலவாகி யிருக்கிறதாம்.

* * * *

கெய்ரோ என்னுமிடத்தில் எல் அஜார் மசூதி கட்டி ஆயிரம் வருஷம் பூர்த்தியாகப் போகிறது. அப் பூர்த்தி விழா கூடிய சீக்கிரம் கொண்டாடப் படுமாம்.

கவியரசர் ரவீந்திர நாதரைக் கிளாஸ்கோ சர்வகலாசாலை மாணவர் சங்கத் தலைவர் பதவியை ஏற்கும்படி கேட்டிருக்கிறார்கள்.

* * * *

மாட்ரிட் என்னுமிடத்தில், பாதைகளுக்குக் குறுக்கே சென்று போக்குவரத்தைத் தடைப் படுத்தினால், 2 பென்ஸ் அபராதம் விதிக்கப் படுகிறதாம்.

* * * *

ஜெர்மனியில் பணக்காரர்கள் தங்கள் பெயர்களையும், பட்டங்களையும் பிறர் வைத்துக் கொள்வதா யிருந்தால் 50 பொன்னிலிருந்து 1000 பொன் வரை வாடகை கொடுக்க வேண்டுமென்று சொல்லி அவ்வாறே வாங்கி வந்தார்களாம். ஆனால் அவ் வழக்கத்தை இப்பொழுது சர்க்கார் தடுத்து விட்டார்களாம்.

* * * *

இங்கிலாந்தில் 4995 சினிமா படக்காட்சி சாலைகள் இருக்கின்றனவாம்.

* * * *

பிரிட்டனின் ஜனத் தொகையில் சுமார் பாதிப்பேர் வரை மணமாகாதவர்களாகவே இருக்கின்றனராம்.

* * * *

ஐரோப்பா எங்கும் ஆகாயவிமானத்தில் யாத்திரை செய்ய சிலன் டிக்கெட்டுகள் வழங்க ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

# ஆசிரியர் குறிப்புக்கள்

## சர்வகலாசாலைகளும் கட்டாய ராணுவப்பயிற்சியும்

நாகரிகம் பெற்ற மேனாடுகளில் மாணவர்கட்கு ராணுவப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவசியம் நேர்ந்த போது தங்கள் தங்கள் நாடுகளைக் காக்கும் பொருட்டு மாணவர்கள் ஆயுதபாணிகளாய் அணி அணியாகப் போர்க்களங்களுக்குப் போவார்கள். இத்தகைய நற்பேறு இந்திய நாட்டிற்கு இன்னும் வாய்க்கவில்லை. ராணுவத்தை இந்திய மயமாக்க வேண்டும் என்ற கிளர்ச்சியானது சில ஆண்டுகளாகத் தலை காட்டியிருப்பது மகிழ்ச்சிக்குரியதே. டாக்டர் மூஞ்சே—ஸர் சிவஸ்வாமி ஐயர் போன்ற அறிஞர்கள் மாணவர்கள் சிறந்த போர் வீரர்களாக விளங்க வேண்டிய அவசியத்தை அடிக்கடி வற்புறுத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும். சென்ற மாதம் 15-ந்தேதி சென்னை லூதரன் சபையில் சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஐயர் "இந்திய சர்வகலாசாலைகள் கட்டாய ராணுவப் பயிற்சியைப் புகுத்த வேண்டியது அவசியமா?" என்னும் பொருள்பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். "கட்டாய ராணுவப் பயிற்சியை இந்திய சர்வகலாசாலைகள் புகுத்த வேண்டும். நமக்கு இப்பொழுது தேவை பயிற்சிக்குரிய விளையாட்டுக்கள்; பகவத்கீதை இல்லை. தேசத்தைக் காக்கும் வீரர்களே தேவை" என்று பேசினார். ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் வீரமுழக்கத்தை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். ஆனால் "வருங்காலத்தில் படித்தவர்களிலிருந்தே ராணுவத்திற்கு அதிகமானவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்—சர்வகலாசாலை மாணவர்கட்கே கட்டாய ராணுவப்பயிற்சி அளிக்க வேண்டும்" என்று ஸ்ரீமான் சத்தியமூர்த்தி கூறுவதை நம்மால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேல் எல்லாருக்கும் ராணுவப்பயிற்சி அளிக்க வேண்டியதே முறை. இவ்விஷயத்தில் சர்வகலாசாலைக் கல்வி நிபந்தனை இருக்கக்கூடாது என்பது நமது கருத்து. சர்வகலாசாலைக் கல்வி கற்றவர்களே ராணுவப்பயிற்சி பெற வேண்டும் என்பது பிற்காலத்தில் பெருங் குழப்பங்களுக்கும் கிளர்ச்சிகளுக்கும் இடமேற்படும் என்னும் உண்மை சிறிது சிந்திப்பாருக்கும் நன்கு விளங்கும் என்று எண்ணுகின்றோம். இப்பொழுது திடீரென்று சர்வகலாசாலைகள் கட்டாய ராணுவப் பயிற்சியை மேற்கொண்டு விடும் என்று நாம் நினைக்கவில்லை. இவ்விஷயம் நடைமுறைக்கு வரும்போது எல்லாம் தீர்க்கமாக ஆலோசிக்கப்படும் என்றே நம்புகின்றோம்.

## பம்பாய் மாதர் வெற்றி

ஹிந்து சமூக சம்பிரதாயங்களில் பெண் மக்கட்கு எவ்வளவோ உயர்வும் சௌகரியமும் அளிக்கப்பட்டிருப்பதாக ஒரு சிலர் வானமளாவப் புகழ்ந்து கொண்டாலும் அவர்களுக்கு நியாயமான உரிமைகள் ஆதியிலிருந்து மறுக்கப்பட்டே வந்திருக்கின்றன என்னும் உண்மையை எளிதில் மறப்பதற்கில்லை. ஒரு குடும்பத்தில் ஆண் மக்கட்கு எவ்வளவு உரிமை உண்டோ அவ்வளவு உரிமை பெண்மணிகட்கு இல்லை என்பது கண்கூடு. பெண்கட்குச் சொத்துரிமையும், கல்வி கற்கும் சௌகரியமும் இல்லாமையே அவர்கள் அநுபவித்து வரும் எல்லாத் துன்பங்கட்கும் மூலகாரணமாகும். இப்பொழுது



இந்திய மாதர் உலகில் ஒரு விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆங்காங்கு மாதர் சங்கங்கள் தோன்றிக்கொண்டு வருகின்றன. பொது நலத் தொண்டிலும் மாதர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். சென்ற வாரம் விதவைகளின் ஸ்வீகார உரிமைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் பம்பாய் சட்டசபையில் ஒரு மசோதா வரவிருந்தது. பம்பாய் மாதர்களின் தீவிரக் கிளர்ச்சியின் பயனாக அம் மசோதா கைவிடப்பட்டதை அறிந்து பெரிதும் மகிழ்ச்சிப் பெருக்கடைகின்றோம். ஒரு ஹிந்து விதவைக்குத் தனிச் சொத்து எழுதிவைக்கப்படாமல் அவிபக்த குடும்பமாகவே அவளது கணவன் குடும்பம் இருந்திருக்குமாயின்—இதர பாகஸ்தர்களின் அநுமதியின்றி அவ் விதவை யாரையும் ஸ்வீகாரம் செய்து கொள்ளலாகாது என்பது ஷை மசோதாவின் உத்தேசம். 1932—ம் ஆண்டு வரை இந்தச் சம்பிரதாயம் அநுஷ்டானத்தில் இருந்ததாம். இதற்கு மாறாகப் பிரிவி கவுன்சில் தீர்ப்பு ஒன்று ஏற்பட்டு ஷை வழக்கத்தைத் தலைகீழாகச் செய்து விட்டதாம். மறுபடியும் பழைய வழக்கத்தை நிலைநாட்டவேண்டும் என்றே ஸ்ரீமான் ஹநுமந்தராய் தேசாய் என்பவர் ஷை மசோதாவைத் தயாரித்துக் கொண்டு வந்தார். பிரிவி கவுன்சில் அளித்த சொற்ப உரிமையையும் நாம் ஏன் பறிகொடுக்க வேண்டும் என்னும் ஆவேசத்துடன் பம்பாய் மாதர் கிளம்பினர். மசோதா விவாதத்திற்கு வரும் நாளில் சட்டசபையை "முற்றுகை" இட்டனர். ஸ்ரீமான் தேசாயின் மசோதாவைக் கண்டிப்பதாக மூவாயிரம் பெண்மணிகளின் கையெழுத்துக்கள் வாங்கப்பட்ட மகஜர் ஆஜர் செய்யப்பட்டது. மாதர்களின் உணர்ச்சியை அறிந்த தேசாய் தமது மசோதாவை வாபீஸ் வாங்கிக் கொண்டார். இவ்விதம் தங்கள் உரிமையை நிலைநாட்ட முயன்று வெற்றி பெற்ற பம்பாய் மாதர்களை வாழ்த்துகிறோம்.

## மகாகனம் சாஸ்திரிகள் பேச்சு

சென்ற மீ அண்ணாமலை சர்வகலாசாலை சமூகச் சீர்திருத்த சங்கத்தார் ஷை சங்கத்தலைவரும் ஷை சர்வகலாசாலை வைஸ்சான்சலருமான மகாகனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளுக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்து நல்வரவு கூறினார்கள். அச் சமயத்தில் சமூகச் சீர்திருத்தம் பற்றி மகாகனம் சாஸ்திரிகள் விரிவாகப் பேசிய விஷயம் பெரிதும் கவனிக்கத்தக்கதாகும். முதலில் அவர் நமது நாட்டில் சமூகச் சீர்திருத்த இயக்கம் ஏற்பட்ட வரலாற்றைச் சுருக்கமாகத் தெரிவித்தார். அந்நியநாட்டு அரசியல் கிளர்ச்சிகளை உணர்ந்த நம்மவர்கள் இங்கே அரசியல் பிரசாரம் செய்ய ஆரம்பித்தபிறகு அநேக முரண்பட்ட வழக்க வொழுக்கங்கள் செறிந்து கிடக்கும் நமது சமூகத்தை முதலில் சீர்திருத்த வேண்டும் என்று அநுபவத்தில் தெரிந்து கொண்டு அதற்காகப் பாடுபட்டார்கள் என்றும், பின்னர் அரசியல் பிரசாரத்துடன் சமூகச் சீர்திருத்தப் பிரசாரத்தையும் மேற்கொண்டார்கள் என்றும், வெறும் சமூகச் சீர்திருத்தப் பிரசாரம் பிரகாசிப்பதில்லை என்றும் சாஸ்திரிகள் கூறினார். ஆனால் இக்கால அரசியல் வாதிகள் சமூகச் சீர்திருத்தத் துறையில் அதிகமாகக் கவனம் செலுத்துவதில்லை என்பதை நாம் அநுபவத்தில் காண்கின்றோம். அரசியல் கிளர்ச்சியில் காட்டும் உற்சாகம் சமூகச் சீர்திருத்த விஷயத்தில் காட்டுகிறார்கள் இல்லை. காரணம் என்ன? சமூகச் சீர்திருத்தத் துறையில் இறங்குவோர் விரைவில் பொதுஜன எதிர்ப்புக்குட்படுகின்றனர். பேரும்

புகழும் இழக்கின்றனர். இதுவே முக்கிய காரணம். இதற்குக் காங்கிரஸ்காரர்களின் பகீரதப் பிரயத்தனத்தால் இந்திய சட்டசபையில் கொண்டுவரப்பட்ட ஆலயப்பிரவேச மசோதா மீண்டும் அவர்களாலேயே கொல்லப்பட்டுப் போன கதை ஒன்றே போதிய உதாரணமாகும் என்று நினைக்கின்றோம். பெண்கள் முன்னேற்றம் பற்றி மகாகனம் சாஸ்திரியார் பிரஸ்தாபித்தார். ஆனால் எந்த வகையில் அவர்களை முன்னேற்றுவது என்பது பற்றி அவர் தெளிவாக விரித்துக் கூறவில்லை. பெண்மணிகளுக்குக் கல்வி அறிவு அளிக்க வேண்டியது அவசியம் என்று அவர் ஒப்புக் கொண்டதைப் பற்றி நாம் ஆச்சரியம் அடையவில்லை. “நாம் மாத்திரம் சமூகத்தைச் சீர்திருத்த முயல்வது முடியாத காரியம். சட்டமும் நமக்கு உதவியாயிருக்க வேண்டும்” என்று சாஸ்திரிகள் கூறியது போற்றத்தக்கதாகும். ஆனால் சாரதாச் சட்டம் இயற்றப்பட்டது சரியில்லை என்று அவர் கூறுவதற்கு என்ன அர்த்தம் என்று எம்மால் கண்டுகொள்ள முடியவில்லை. சுருங்கக் கூறுமிடத்து எல்லாவித முன்னேற்றங்களையும் சாஸ்திரிகள் ஒப்புக் கொள்ளுகிறார்—பொதுஜன எதிர்ப்பு என்பதற்கும் சரணாகதி அடைகிறார் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. இவருடைய சமூகச் சீர்திருத்தப் பேச்சு சாதி சமய வேற்றுமைக் கொடுமைகளை அவ்வளவாகத் தொடவில்லை—இதற்கென்ன காரணமோ?

## தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர் புத்துணர்ச்சி

கொச்சியில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் புத்துணர்ச்சியைப் பற்றிய செய்தி ஒன்று சமீபத்தில் வெளியாயிருக்கிறது. பெற்றோர்களால் வைக்கப்பட்ட பழங்காலப் பெயர்களை மாற்றிப் புதிய பெயர்களை வைத்துக்கொள்ள வேண்டும் என்ற உணர்ச்சி அவர்களிடையே அரும்பியிருக்கிறதாம். பங்கன், பஞ்சோடன், வள்ளன், கோரன், கோரு ஆகிய பெயர்களுக்குப பதிலாக இப்பொழுது ஸ்ரீ வல்லபன், கோமளரூபன், கோள புத்திரன் போன்ற பெயர்களை வைத்துக் கொள்ளுகிறார்களாம். உயர்வகுப்பு ஹிந்துக்கள் மாதிரி பெயர் வைத்துக் கொள்ளவேண்டும் என்றும் அவர்களைப்போல் வாழ்க்கை நடத்தவேண்டும் என்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பு முன்னேற்ற இயக்கத் தலைவர்கள் இவர்களுக்குக் கூறி வருவதின் பயனாகவே ஷை மாணவர்களுக்கு இத்தகைய புத்துணர்ச்சி தோன்றியிருப்பதாகத் தொழில் இலாகா அதிகாரி தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். இஃது ஒரு நற்செய்தி என்பதில் ஐயமும் உண்டோ? ஆனால் சம்பிரதாயப்படி உயர்வகுப்பினர் என்போரும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் ஒருவருக்கு ஒருவர் மலையாளத்தில் பேசும்போது ஒரே விதமான வார்த்தைகளை உபயோகிக்கக் கூடாதாம். தங்களுடைய பணிவையும் மரியாதையையும் காட்டுவதற்கு அறிகுறியாகக் கொச்சைப் பதங்களையே உபயோகிக்க வேண்டுமாம். உதாரணமாக நம்பூதிரி பிராமணன் வீட்டை “மனு” (மனை)—மாளிகை என்றும், சூத்திரன் அல்லது ஆதித்திராவிடன் வீட்டை “குப்பாடு” அல்லது “குடி” (குடிசை) என்றும் சொல்லவேண்டுமாம். பணத்தைக் குறிப்பிடும்போது பிராமணர்கள் “தங்கம்” என்றும் சூத்திரர்கள் “செம்பு” என்றும் அரிசியைக் குறிப்பிடும்போது பிராமணர்கள் “அரி” (அரிசி) என்றும் மற்றவர்கள் “கல்லரி” (கற்கள் கலந்த அரிசி) என்றும் சொல்லவேண்டுமாம். இந்தச் சம்பிரதாயங்களிலிருந்து சிறப்பாகக் கொச்சி சமஸ்தானத்திலும் பொதுவாக மலையாளத்திலும் தீண்டாமையின்



கொடுமை எவ்வளவு உச்சநிலை அடைந்து கிடக்கிறது என்பதை எளிதில் ஊகித்து அறிந்து கொள்ளலாம். ஏதோ ஒரு வகையில் புத்துணர்ச்சி பெற்று வரும் தாழ்த்தப்பட்டவகுப்பு மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

## “பத்தாண்டில் அறியாமை நீக்குவேன்”

சென்ற மாதம் 14-ம் தேதி பம்பாய் மோக வீர வியவஸ்தாபக மண்டலியின் 28-வது ஆண்டுவிழா நடைபெற்றது. பம்பாய் மேயர் ஸ்ரீமான் கே. எப். நரிமன் தலைமை வகித்தார். அச்சமயத்தில் அவர் கூறிய வார்த்தைகள் பெரிதும் கவனிக்கத்தக்கவை ஆகும். “இந்நகரில் நூறு படித்த வாலிபர்கள் முன் வந்தால் ஐந்து அல்லது பத்தாண்டுகளில் பம்பாய் நகரில் எழுதப் படிக்கத் தெரியாமை என்பதே இல்லாமல் செய்வேன். வாலிபர்கள் கிளப்புகளிலும் சினிமாக்களிலும் வீணுக்கும் தங்கள் ஒழிவு நேரத்தைக் கல்வியைப் பரப்புவதில் செலவிட முன்வந்தால் போதும். இந்தச் சிறிய தியாகம் செய்ய வாலிபர் முனைந்து நின்றால் காங்கிரஸ் இந் நகரிலுள்ள எழுத்து வாசனையற்றவர்களுக்குக் கல்வி அளிக்கும் வேலையை மேற்கொள்ளும்” என்று ஸ்ரீமான் கே. எப். நரிமன் உறுதி கூறினார். கல்வியறிவும் தேசபக்தியும் வாய்ந்த நேயர்கள் இவ்வறிவுரையைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று விரும்புகின்றோம். மக்களிடையே அறியாமை செறிந்திருப்பதினாலேயே அரசியல் சமூகவியல் முன்னேற்றம் தடைப்பட்டு நிற்கிறது என்னும் உண்மையை அநுபவத்தில் உணர்ந்து கொண்டிருக்கிறோம். பாமர மக்களிடையே உள்ள அறியாமையைப் போக்கிவிட்டால் எத்தகைய முன்னேற்றமும் எளிதில் கைகூடும் என்பதில் ஐயம் இல்லை. நமது நாட்டில் கல்வியின் பொருட்டுப் பெருந்தொகை செலவு செய்யப்படுகிறது. ஆனால் அது பயனற்ற—வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பெருக்கும் பட்டக் கல்விக்கே செலவு செய்யப்படுகிறது. கோடிக்கணக்கான மக்கள் தற்குறிகளாய்க் காலங் கழித்து வருகின்றனர். இவர்களுடைய அறியாமையைப் போக்க யாரும் போதிய கவனம் செலுத்தவில்லை. உயர்தரக் கல்விகற்ற பட்டதாரிகளின் தொகையும், வக்கீல்கள், டாக்டர்கள் போன்ற பட்டதாரிகளின் தொகையும் அளவுக்கு மேல் பெருகி நாட்டில் தொல்லை விளைத்துக் கொண்டிருக்கின்றன. எனவே ஒரு பதினைந்து ஆண்டுகளுக்கேனும் சர்வகலாசாலைகளை மூடிவிட்டு ஆரம்பக் கல்விக்காகச் செலவு செய்தல் நலம் என்பது நமது கருத்து. இது எளிதில் நடக்கக்கூடிய காரியம் இல்லை என்பதை நாம் அறிவோம். அந்நிலையில் ஸ்ரீமான் நரிமன் கூறிய யோசனையை எல்லா வாலிபர்களும் நிறைவேற்றிவைக்க முன் வந்தால் பத்தாண்டுகளில் பாமர மக்களிடையே உள்ள அறியாமையைப் போக்கி விடலாம் என்பதில் சிறிதும் சந்தேகமேயில்லை. “சோவியத் ஆட்சிக்கு முன் ருஷியாவில் அறியாமை மிகுந்திருந்தது. அந்நாட்டின் நிலைமை இந்தியாவின் நிலைமையை விட மிக்க கேவலமாக இருந்தது. ஆனால் சோவியத் ஆட்சியில் படித்த வாலிபரும் பெண்மணிகளும் தாங்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நகரில் வசிக்கும் மனிதரில் இத்தனை பேருக்குக் கல்வி போதிப்பதெனக் கங்கணங் கட்டிக் கொண்டு அறியாமையைப் போக்கி விட்டனர்” என்று ஸ்ரீமான் நரிமன் எடுத்துக்காட்டிய சிறந்த உதாரணம் வாலிபர்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளிக்கவேண்டும் என்று விரும்புகின்றோம்.




# நீல அறையின் மர்மம்

(எஸ். எஸ். வாஸன்.)

(79-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவர் எவ்விதம் என்னை யறியாதுபோல் தந்திரமாக நடித்துக் கொண்டிருந்தாரோ அவ்வளவு தந்திரமாக நானும் அவரை யறியாதவன்போல் காண்பித்துக்கொண்டேன். எனக்காக அவர் பயப்படக் கூடாதென்பதே என் கருத்து; ஏனென்றால் திடீரென்று எவருக்கும் சொல்லாமலே அவர் மறைந்து விடலாமென்று நான் பயந்தேன்.

இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் நான் என்னுடைய அறைக்குச் சென்றேன். அறைக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டவுடனே மறுபடியும் எனக்கு அந்த மரண மயக்கம் உண்டாயிற்று. என்னுடைய கைகால்களெல்லாம் சக்தியற்றுப் போய் விட்டன. அறை முழுவதையும் நான் நன்றாகப் பரிசோதித்துப் பார்த்தேன். இந்த மயக்கம் உண்டாவதற்கு ஆதாரமாய் என் கண்ணுக்கு ஒன்றும் புலப்பட வில்லை..............எனக் குண்டான மயக்கம் சில நிமிஷங்களுக் கெல்லாம் ஒழிந்து விட்டது. பிறகு என்னுடைய பல கவலைகளினாலும் தேக சிரமத்தினாலும், உறங்குவது நலமென்று படுத்தேன். ஆனால் எனக்குத் தூக்கமே பிடிக்க வில்லை. என் உயிருக்கே மோசம் செய்த பூரணலிங்க முதலியார் நானிருக்கும் வீட்டிலேயே யிருக்க எனக்கு எப்படித் தூக்கம் வரும்?.........எனக்கு நேர்ந்த பயங்கரமான விஷயங்க ளெல்லாம் ஒன்றன் பின் னொன்றாய் என் ஞாபகத்திற்கு வந்தன. இனி யெந்தெந்த வழியில் முயன்று உண்மைகளைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று யோசனை செய்துகொண்டே யிருந்தேன். பொழுதும் விடிந்தது.

நான் காலையில் என்னுடைய அறையை விட்டு வெளியே போகும் போதும் அந்த மர்ம மயக்கத்தினால் நான் கஷ்டப்பட்டேன்; ஆனால் ஒரு நிமிஷத்திற் கெல்லாம் என்னுடம்பு சரியான நிலைமை யடைந்து விட்டது.

காலை யாகாரம் முடிந்த பின் பூர்ணலிங்க முதலியார் காற்றாட நந்தவனத்திற்குப் போய்க் கொண்டிருந்தார். இதை யறிந்து கொண்டு நானும் அவர் பின்னேயே சென்றேன். அவர் சிறிது தூரம் சென்று விட்டு ஒரு பலகையில் உட்கார்ந்தார். நானும் அவரருகில் சென்று உட்கார்ந்தேன்.

"ஆ! நீயா!" என்று சொல்லிக் கொண்டு கரை கடந்த அச்சத்துடனும் திகைப்புடனும் வரதராஜ முதலியார் பின் வாங்கினான்.

"ஆம், வரதராஜ முதலியாரே! வாருங்கள்! அடடா! தங்களுக்கு எத்தனை பெயர்! பூர்ணலிங்க முதலியார்—கிருஷ்ணஸாமி முதலியார்—வரதராஜ முதலியார்!—மூன்று பெயர்களை வைத்துக் கொண்டு காலத்தைப் போக்குவது கொஞ்சங் கஷ்டந்தான்!" என்றேன்.



உடனே அம் மனிதன் சாரதாவைத் திரும்பிப் பார்த்து "நீ இவர்களுக்கு என்னுண்மையைச் சொல்லி விட்டாய்!—நீ ஒருநாளும் நன்மை யடையப் போவதில்லை" என்று துடிதுடித்துக் கூறினான். அவன் ஒரு ஆட்டைப் போல் மருண்டு மருண்டு விழித்தான். அவனுடைய முகம் சவம்போல் வெளுத்துப் போயிற்று.

நான்:—ஐயா! வரதராஜ முதலியாரே! உங்களுடைய வாயிலிருந்து உண்மை யெங்களுக்கு வெளியாக வேண்டும். நானிங்கு முன் ஜாக்கிரதையுடனே வந்திருக்கிறேனென்று தங்களுக்குத் தெரிய வேண்டும். வீட்டைச் சுற்றிப் போலீஸார் சூழ்ந்திருக்கிறார்க ளென்பதை யறிந்து கொண்டு தாமதம் செய்யாமல் நீர் செய்த கொடிய செயல்களனைத்தையும் ஒன்று விடாது கூறி விடுங்கள்— முடியா தென்றால் இப்பொழுதே உம்மைப் போலீஸார் வசம் ஒப்பித்து விடுவேன்.

வரதராஜ முதலியார்—எனக்கு ஒன்றுந் தெரியாது.—என்று கூறிவிட்டுத் தன்னுடைய கரத்தைத் தன் ஜேபியில் நுழைக்க முயன்றான். அவன் தன்னுடைய துப்பாக்கியை யெடுக்க முயற்சி செய்கிறானென்று நான் அறிந்து கொண்டு என்னுடைய கைத் துப்பாக்கியை நான் தயாராகவே கையில் பிடித்துக் கொண்டு அவனிடம் பேச ஆரம்பித்தேன்.

நான்:—என்னுடைய கலியாணத்தைப் பற்றிய உண்மை யென்ன?—எனக்கு நீர் கலியாணம் செய்து வைக்க வேண்டிய காரண மென்ன? சொல்லும்.

வரதராஜன்:—(சாரதாவைப் பார்த்து) நீ யிதற்குத் தானா என்னை யிங்கு வரச் சொன்னாய்?.........இப்படி முடியும் என்று நான் கனவில் கூட நினைக்க வில்லை—என்றான்.

சாரதாவும் என் கையில் எதிர்பாராமல் அகப்பட்டுக் கொண்டு விட்டாள். ஆகவே இம் மனிதனை யவள் தன் வீட்டிற்கு அழைத்ததற்கு வேறு காரண மிருத்தல் வேண்டு மென் றறிந்து கொண்டேன்.

நான்:—(வரதராஜ முதலியாரைப் பார்த்து) நான் சில மாதங்களாய் விடா முயற்சியுடன் வேலை செய்து என்னைச் சுற்றியுள்ள மர்மங்களை யெல்லாம் கண்டு பிடித்து விட்டேன். இனிமேல் நீர் தப்பித்துக் கொள்ள வழியில்லை. நீர் நான் கேட்பதைக் கூறி விட்டால் உமக்கு நன்மை யுண்டாகலாம்—என்றேன்.

உடனே அம் மனிதன் என்னைப் பார்த்து இனி தப்பித்துக் கொள்ள வழியில்லை யென்ற எண்ணங் கொண்டவனாய் "உங்களுக்கு எல்லா உண்மைகளும் தெரியு மென்றால் என்னையேன் கேட்கிறீர்கள்?" என்றான்.

நான்:—எனக்கு முழுவதும் தெரியாது. உம்மிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டும். நீர் யார்? உமக்கும் சபாபதி முதலியாருக்கும் என்ன சம்பந்தம்? நீர் என்னைத் தொலைத்து விட வேண்டு மென்று பிரயாசைப் பட்டதன் காரண மென்ன?—விளங்கும்படி கூறும்.

வரதராஜ முதலியார்-சபாபதிக்கும் எனக்குமுள்ள சம்பந்தத்தைப் பற்றி

நான் அதிகம் சொல்லுவதற்கில்லை. சபாபதி வெகு காலமாக எத்தனையோ கொலைக் கேஸ்களிலும், பாங்க் கொள்ளைகளிலும், வழிப்பறிகளிலும் சம்பந்தப்பட்டவன். அவனைக் கண்டுபிடிக்க இந்த தேசம் முழுவதும் போலீஸார் பிரயத்தனம் செய்தார்கள்; முடியவில்லை............உங்களுடைய கலியாணத்தின் உண்மையைக் கூறுகிறேன் கேளுங்கள். சபாபதி விஷங்களைப் பற்றி விவரமாய்ச் சொல்லும் ஒரு பழைய காலத்துப் புத்தக மொன்றை இரகசியமாய்த் தன்னிடம் வைத்துக் கொண்டிருக்கிறான். அவனுடைய வேலைக்கு எல்லா விஷங்களைக் காட்டிலும் 'வயாஹு' என்ற விஷம் மிக்க உதவியாயிருந்தது. இந்தக் கொடிய விஷத்தின் உதவியால் சபாபதி இந்தியாவிலுள்ள பெருத்த 'லைப் இன்ஷியூரன்ஸ் கம்பெனி'களை யெல்லாம் கொள்ளையடிக்க யத்தனித்தான்.

இந்த வேலைக்கு 'வயாஹு'வின் உதவி மட்டும் இருந்தால் போதாது. இதற்காக ஒரு யௌவன வயதுள்ள பெண் உதவி செய்ய வேண்டி வந்தது. சபாபதி யிப்படி எண்ணிக் கொண்டிருக்கையில் மீனுவை யெங்கேயோ பார்த்து விட்டான். மீனுள் அழகாக இருக்கிறபடியால் இவள் தனக்கு உதவி செய்யக் கூடுமென்றெண்ணி அவளுடைய சிநேகிதத்தை சம்பாதித்துக் கொண்டான். குருவிக்காரன் தெருவில் நான் கிருஷ்ணஸ்வாமி என்ற பெயருடன் இரண்டு வருஷமாக வாசம் செய்து கொண்டிருந்தேன். சபாபதி என்னுடைய வீட்டிற்கு மீனுவைக் கொண்டு வந்து விட்டான். உடனே உமக்கும் மீனுவுக்கும் கலியாணம் நடந்தது.

நான்:—இக் கலியாணத்திற்குக் காரணம் என்ன?

வரதராஜ முதலியார்.-என்னவென்றால் லைப் இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளை ஏமாற்றிப் பணம் பெறுவதற்கு ஒரு டாக்டரின் உதவி தேவையாயிருந்தது. உம்முடைய உதவி யெப்பொழுதும் எங்களுக்கு வேண்டும். அதாவது வேண்டியபோது 'மரண ஸர்டிபிகேட்' நீங்கள் கொடுக்க வேண்டும். நீர் குருவிக்காரன் தெருவுக்கு வந்து என்னிடம் பேசிக் கொண்டிருக்கும் போதெல்லாம் மீனுள் 'வயாஹு'வின் மரண மயக்கத்தி லிருந்தாள். அவளுக்கும் உமக்கும் கலியாணம் நடத்தி வைத்ததின் காரணம் நீர் பணத்திற் காசைப்பட்டுக் கலியாணத்திற்கு ஒப்புக் கொண்டு கலியாணமும் முடிந்து விட்டால் எங்களுடைய சொல்லை நீங்கள் கேட்கும்படியாகுமென்று நினைத்தோம். கலியாணமான பின்பு, இக் கலியாண மொன்றினால் நீங்கள் பயந்து விட மாட்டீர்களென்றும், எங்கள் பேச்சை நீர் கேட்டுத்தான் ஆக வேண்டுமென்ற உறுதியுடையா தென்றும் நினைத்து உம்மை யெங்கள் கைக்குள் போட்டுக் கொள்வதற்கு வேறு யோசனை செய்து உடனே மீனுவைக் கொலை செய்ய வேண்டுமென்று உண்மை வற்புறுத்தினோம். இதற்கு நீர் ஒப்புக் கொண்டு விட்டால் பிறகு நீர் எப்பொழுதுமே எங்களுக்கு உட்படிந்து நடந்து கொள்ள வேண்டுமல்லவா? இதற்குத் தான் நான் முயற்சி செய்தேன். ஆனால் நீர் கொலை செய்ய ஒப்புக் கொள்ள வில்லை.

நான்:—மீனுவை உங்களுக்கு உதவி செய்ய வேண்டியதற் கல்லவா சிநேகிதம் செய்து கொண்டீர்கள்?





புருஷன்மார்கள் அவர்களது வேலைக்குப்போய் விடுகின்றனர்; குழந்தைகளையும் கவனித்தாய்விட்டது; காலை வீட்டு ஜோலியெல்லாம் தீர்ந்தது. இவ்வளவும் ஆனதும் சில சமயம் உங்களுக்குச் சற்று சிரமம் தட்டுகிறதல்லவா?

குடும்பத்தை நடத்துவது சிரமமென்பது உலகமறிந்த விஷயம். ஆனால் அந்தப் பதினொருமணி சுமாருக்கு, காலைக் காரியமெல்லாம் தீர்ந்ததும், ஒரு கப் சுகமான "டீ" சாப்பிட்டால் உங்கள் களைப்பெல்லாம் பறந்தோடிவிடும் என்ற விஷயம் உங்களுக்குத் தெரியுமோ?

இந்தப் பரம சுகந்தரும் ஆரோக்கியமான பானத்திற்கு ஈடு வேறில்லை யென்பதை உலகமெங்கும் சமர்த்துள்ள சகல பெண்மணிகளும் அறிவர். நிமிஷத்தில் களைப்பை நீக்கி, சரீரத்திற்கும், மனத்திற்கும் அது புதிய சக்தியைத் தருகிறது. ஒரு வாரம் தினம் காலையில் ஒரு கப் "டீ" சாப்பிட்டுப்பாருங்களேன். பிறகு என்ன குதூகலமா யிருக்கிறீர்கள் என்பதை நீங்களே அறிவீர்கள்.

டீ செய்யும் முறை. நல்ல இந்தியத் தேயிலையை உபயோகியுங்கள். புதிய ஜலத்தைப் பொங்கவிட்டுக் சுத்தமான உலர்ந்த மண் பாண்டத்தை வெந்நீரில் அலம்பி, ஒருவருக்கு ஒரு டீ ஸ்பூன் வீதம் அதில் தேயிலையைப் போட்டு, பொங்குகிற ஜலத்தை விடுங்கள். ஐந்து நிமிஷம் அப்படியே ஊறட்டும். பிறகு, கப்புகளில் தேத் தண்ணீரை ஊற்றி, பாலும் சர்க்கரையும் சேருங்கள்.



இதுவே குடும்பத்திற்கு ஈடற்ற பானம்-இந்தியத் தேத்தண்ணீர்.

# " ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்.

யுவஸு ஆவணிமீ—கலியுகாதி 5037, சாலிவாகனம் 1858, பசலி 1345, கொல்லமாண்டு 1111, ஹிஜரி 1354, இங்கிலீஷ் 1935ௗ ஆகஸ்டுமீ—செப்டம்பர்மீ

| ஆவணிமீ | ஆகஸ்டு | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 17 | சனி | திரி2-55 சது54-50 | உத்44-23 | சி44-23ம | கஜ்ஜாவி திரிதிகை, சங்கட சதுர்த்தி, சங்காஷ்ட சதுர்த்தி, அவமாகம் |
| 2 | 18 | ஞா | பஞ்47-50 | ரே39-15 | அ39-15சி | கரிநாள், சுப முகூர்த்தம் |
| 3 | 19 | திங் | சஷ்42-18 | அஸ்35-20 | சித்60 | சர்வமுகூர்த்தம் [ஷ்டமி |
| 4 | 20 | செவ் | சப்38-23 | பர33-5 | சித்60 | கோகுலாஷ்டமி, கிருஷ்ண |
| 5 | 21 | புதன் | அஷ்36-20 | கி✽32-45 | அ32-45சி | கிருத்திகை, தசபல விரதம் |
| 6 | 22 | வியா | நவ36-3 | ரோ34-5 | மர60 | ஸ்ரீ கிருஷ்ணஜயந்தி |
| 7 | 23 | வெள் | தச37-23 | மிரு37-8 | சித்60 | விவாகம், சுப முகூர்த்தம் |
| 8 | 24 | சனி | ஏகா40-20 | திரு41-30 | சித்60 | சர்வ, மத்வ ஏகாதசி |
| 9 | 25 | ஞா | து44-25 | புன47-5 | சித்60 | கரிநாள், மாடுகொன்ன |
| 10 | 26 | திங் | திர49-28 | பூச53-43 | சித்60 | பிரதோஷம், சீமந்தம் |
| 11 | 27 | செவ் | சது55-8 | ஆயி60 | சித்60 | மாச சிவராத்திரி |
| 12 | 28 | புத | அமா ● 60 | ஆயி0-45 | சித்60 | சர்வத்திர அமாவாசை |
| 13 | 29 | வியா | அமா1-13 | மக8-10 | அ8-10சி | மௌன விரதம் |
| 14 | 30 | வெள் | பிர7-20 | பூர15-45 | சித்60 | சந்திர தரிசனம் |
| 15 | 31 | சனி | துதி13-33 | உத்23-18 | மர60 | வியாதியஸ்தர் குளிக்க |
| 16 | 1935ௗ செப்டம்பர்மீ 1 | ஞா | திரி19-23 | அஸ்30-25 | அ30-25சி | ஸாமோ உபாகர்மம் |
| 17 | 2 | திங் | சது24-40 | சித்37-0 | சி37-0அ | விநாயக சதுர்த்தி |
| 18 | 3 | செவ் | பஞ்29-8 | சுவா42-43 | சி42-43ம | |
| 19 | 4 | புதன் | சஷ்32-25 | விசா47-13 | சித்60 | |
| 20 | 5 | வியா | சப்34-15 | அனு50-18 | சி50-18சி | |
| 21 | 6 | வெள் | அஷ்34-23 | கே51-40 | ம51-40அ | |
| 22 | 7 | சனி | நவ32-38 | மூல51-10 | சித்60 | |
| 23 | 8 | ஞா | தச28-58 | பூரா48-45 | சி48-45அ | |
| 24 | 9 | திங் | ஏகா23-35 | உத்44-35 | ம44-35அ | |
| 25 | 10 | செவ் | து16-38 | திரு38-55 | சித்60 | |
| 26 | 11 | புத | திர7-40 சது59-13 | அவி32-13 | சி32-13சி | |
| 27 | 12 | வியா | ○49-28 | சத24-43 | ம24-43சி | பௌர்ணமி |
| 28 | 13 | வெள் | பிர39-43 | பூர17-3 | சித்60 | மஹாளயபட்ச ஆரம்பம் |
| 29 | 14 | சனி | துதி30-28 | உத்9-33 | சி9-33அமி | அசூன்ய சயன விரதம் |
| 30 | 15 | ஞா | திரி22-3 | ரே2-35 அஸ்56-53 | அமி2-35சி | பிருஹத்யுமா விரதம், சங் |
| 31 | 16 | திங் | சது14-53 | பர52-50 | சி52-50ம | காஷ்ட சதுர்த்தசி, அவமா வட்சிதி புண்ணியகாலம் |

| | | | |
|---|---|---|---|
| | | | கே |
| சனி | 13-கன்-புத 20-விரு-செ | | சூரி சுக் புத |
| ராகு | | குரு செவ் | |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE " ANANDA BODHINI " PRESS,
NO. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.

207693

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!

நீங்கள் நீண்ட நாளாக எதிர்பார்த்திருந்த ஸ்ரீமான்-ஆரணி-குப்புசாமி முதலியார் எழுதிய

## ஆரூர் இலக்ஷ்மணன்

அல்லது

## அதியற்புதக் கள்ளன்

என்னும் புதிய நாவல் தயாராய்விட்டது.

இந்நாவலில் ஆரூர் இலக்ஷ்மணனது சாமர்த்தியச் செயல்களும், அதிசயத் திருட்டுகளும், சாங்க என்ஜினீரும், நூதன நீர்மூழ்கிக் கப்பலைச் செய்யும் முறைகளைத் தெரிந்தவருமான லோககாயகன் என்பவர் என்ன ஆனார் என்பதைப் போலீஸாரும், துப்பறிபவர்களும் கண்டு பிடிக்க முடியாமலிருக்க இவ்வாரூர் இலக்ஷ்மணன் அவ்வுண்மையைக் கண்டு பிடிப்பதும், கொலைக்காரர்களான எத்தூர் வீரண்ணனையும் அவனது சகோதரன் அழகப்பனையும் சிக்கவைத்து உண்மை யறிவதும், சிறையிலிருந்தவாறே ஒரு பிரபுவின் வீட்டில் கொள்ளை யடிப்பதும், தான் செய்யும் களவுகளைக் கண்டுபிடிக்க முடியாது துப்பறிபவர்களைத் திண்டாடவைப்பதும், இலக்ஷ்மணன் கல்லம்மாள் மீது காதல்கொண்டு மயங்குவதும், பிரசித்திபெற்ற துப்பறியுஞ் சிங்கம் ஆனந்தஸிங்கின் அரிய முயற்சியும், கடைசியில் ஆரூர் இலக்ஷ்மணனே கொள்ளையடிப்பதை விட்டுத் துப்பறியும் தொழிலில் ஈடுபட்டுப் பிரசித்தி பெறுவதும் படிக்கப் படிக்க இன்பத்தைப் பயக்கும். சொற்ப பிரதிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. உடனே ஆர்டருக்கு முந்துங்கள். சுமார் 600 பக்கங்கள் கொண்ட

இதன் விலை ரூபா 2—0—0.

## கிருஷ்ணஸிங்

அல்லது

## துப்பறியும் சீடன்

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

அறிவைப் புகட்டும் அரிய நாவல் இதுவே.

துப்பறியும் இரகசியங்களும், தந்திர சாமர்த்தியங்களும், [illegible] உலகில் பல மோசப் பகுதியிலிருந்து தப்புவதற்கான [illegible] செவென் கேட் [illegible] என்பதற்கேற்ப [illegible] பல அத்தாட்சிகளும், இன்னும் பல இனிய அரிய [illegible].

இதன் விலை அணா 14.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஓர் சிறந்த தமிழ் நூல் வெளியீடு

# நாலடியார் மூலமும்

## விரிவான உரையும்.

**சேத்தூர் வித்வான்-வி. குருமுகத் தேவரை அவர்களைக்கொண்டு இந்நூல். மிகத் தெளிவாகவும், விரிவாகவும் பழைய உரைகளையும் தழுவிப் புதிதாக எழுதப்பட்ட சிறந்த உரையுடன் இப்போது வெளிவந்திருக்கிறது.**

இந் நாலடியார் என்னும் நூலானது, ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்களுக்குமுன் கடைச்சங்க காலத்தில், பாண்டியனிடம் வந்திருந்த ஜைன முனிவர் பலரால் தனித்தனி வெண்பாக்களாக இயற்றப்பட்டு பின்னர் அப் பாண்டியனால் தொகுக்கப்பட்டுப் பெயரிடப்பட்ட சிறந்த நீதி நூலாகும். உலகத்தில் பல தேசத்தாராலும், பல சமயத்தாராலும் கொண்டாடப்படும் திருக்குறளோடு ஒப்புமை யுடையது, உலகத்தார் பலருக்கும் பொதுவாகச் சற்பல நீதிகளை எடுத்துரைக்கக் கூடியது. உலகத்தில் மனிதர்க்குப் பயன் தரத் தக்க நூல்களில் இது சிறந்ததாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் இது முதன்மை பெற்றதாகும். மனிதர் அடையவேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்கள் நான்கினையும் அடைதற்கு இந்நூல் நல்ல வழிகாட்டி யாகும். மாணவர்களும், மற்றவர்களும் அவசியம் படிக்கத் தக்க நூலாகும்.

இதற்குப் பிற்காலத்தில், 'பதுமனார்' என்னும் சிறந்த புலவரொருவர், பால், இயல், அதிகாரம் என்னும் பாகுபாடுகளைச் செய்து சிறந்த உரையொன்றும் இயற்றி யிருக்கின்றார். வேறு சில சிறந்த புலவர்களும் சில உரைகள் எழுதியிருக்கின்றார்கள்.

இது, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பால்களையும், பதினொரு இயல்களையும், நாற்பது அதிகாரங்களையும், நானூறு செய்யுட்களையு முடையது.

இந்நூலுக்கு, முன் பதுமனார் முதலியவர்களால் இயற்றப்பட்ட சில உரைகள் இருப்பினும், அவை சிறந்த கல்வி பயிற்சியுடையாரே படித்துணரத் தக்க பழந்தமிழ் நடையில் அமைந்திருப்பதாலும், ஆரம்பக் கல்வி யுடையாரும், சாமானியக் கல்வி யுடையாரும் தக்க ஆசிரியரிடம் பாடங்கேட்டுத் தெரிந்து கொள்ளக் கூடியவையா யிருப்பதாலும் எவரும் தாமே படித்துணரத் தக்க விதத்தில் இக்காலத்துக்கேற்ப எளிய தமிழில் தெளிவான உரை யொன்று எழுதி வெளியிட வேண்டுமென்று பலர் எம்மிடம் கேட்டுக்கொண்டதற் கிசைந்து, அவர்கள் விரும்பிய விதமாகவே இவ்வுரை எழுதி வெளியிடப் பெற்றிருக்கிறது. இதில் பதவுரையும், கருத்துரையும், விசேடவுரையும் எவர்க்கும் சந்தேக முண்டாகாதபடி பொருள்களை நன்கு விளக்கிக்காட்டி மிகத் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. பழைய உரைப் பகுதிகள் மிகத் தெளிவாக விரித்தெழுதப்பட் டிருக்கின்றன. நூல் அமைப்பிற்கு விரோதமாகவும், முன்னுக்குப்பின் முரணாகவும் பொருள்பட்டுச் சந்தேகங்களை விளைவித்துக்கொண்டிருந்த உரைப்பகுதிகளில் ஐயம் நீங்குமாறு பொருத்தமான பொருள்கள் விளக்கப்பட் டிருக்கின்றன. புதிய உரைகளும் ஆங்காங்கே விரித்தெழுதப்பட் டிருக்கின்றன. சில செய்யுட்களின் சரியான பொருள் விளங்காமல் மயக்கத்தை உண்டாக்கிக் கொண்டிருந்த உரைகள், வேறு நூல்களின் ஆதாரங்களைக்கொண்டு சந்தேகம் நீங்கச் சரியான விதத்தில் அமைக்



கப்பட் டிருக்கின்றன. வேறு நூல்களில் விளங்காதிருந்த பொருள்களும் இந்நூற் செய்யுளின் ஆதாரத்தைக்கொண்டு விளக்கப்பட் டிருக்கின்றன. இதுவரை இந்நூலுரைகளிற் காட்டப்படாத பற்பல சிறந்த கருத்துக்களும் இவ்வுரையில் நூதனமாக எழுதப்பட்டிருக்கின்றன. இந்நூல் முதற் செய்யுளுரையில் ஜைனமதக் கோட்பாடுகள் மிகத் தெளிவாக எடுத்தெழுதப் பட்டிருக்கின்றன. பல கல்விமான்களும், அறிஞர்களும் ஏனையவுரையில் இடங்களுக்குத் தெரிவித்துவந்த அரிய உண்மைகளும் இப்புதிய வுரையில் காட்டப்பட்டிருக்கின்றன. இலக்கணக் குறிப்புக்களும், இலக்கியக் குறிப்புகளும், தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கண நூல் சூத்திரங்களின் உதாரணங்களாலும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், கலித்தொகை, நீலகேசி, சூடாமணி நிகண்டு, பழமொழி, அறநெறிச்சாரம், திருநூற்றந்தாதி முதலிய இலக்கிய நூற் செய்யுட்களின் உதாரணங்களாலும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் இவ்வுரையில் செய்யப்பட்டிருக்கும் திருத்தமான வேலைகள் பல.

இதுவரை, நாலடியாருக்கு இத்தகைய தெளிவான உரை வெளிவந்ததில்லை என்பது இதைப் படித்துப் பார்ப்பவர்க்கு நன்கு விளங்கும். இது டெம்மிரௌன் 16-பேஜ் அளவில் 51-பாரங்களுக்கு மேற்பட்டும் 820 பக்கமுள்ளதாயும் அச்சிடப்பட்டிருக்கிறது. தமிழர் ஒவ்வொருவரும் அவசியம் வாங்கிப் படிக்கத் தக்கது.

**இதன் விலை ரூபா 2—8—0.**

# நாகரீகம்?

## இரண்டாம் பதிப்பு.

**செ. இராஜு செட்டியார், எம்.பி. பி.ஜி., அவர்கள் இயற்றியவை**

'நாகரீகம்' என்ற உயர்ந்த பெயரை வைத்துக்கொண்டு இக்காலத்து நடைபெறும் பல போலி வழக்க ஒழுக்கங்களின் சீர்கேடுகளை ஒழிக்கவும், நீதியும், உண்மையும், அன்பும் நிலைகுலைந்து, மூலை முடுக்குகளில் தேம்பிக் கிடக்க, அநீதியும், பொய்யும் கொடுமையும் ஒருங்கு திரண்டு கரைகடந்து பெருகிவரும் பெரு வெள்ளத்தைத் தடுக்கும் அணைக்கட்டாக இந்நாவல் வரையப்பட்டது. இதில் உள்ளதை உள்ளபடியே எடுத்துக் காட்டி இந்தியர் யாவரேனும் ஒன்று சேர்ந்து அன்புடன் வாழவேண்டுமென்று அரும் பெரும் நீதி எடுத்த பலதிறத்து மனிதர்களின் சுபாவத்தையும் போக்கையும் விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது; இதில் ஜாதி சமூக கட்டுப்பாடுகளின் கொடுமைகளும், ஆப்தமித்திரனின் அரும்குணங்களும், கருத்தொருமித்த காதலர்களின் அந்தரங்கப் பிணைப்பும், மோசக்காரர்கள் இறுதியில் நாசமுறுவதும், பல அந்தரங்கவிஷயங்களும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இதை எல்லாரும் வாசித்து சந்தோஷமடைந்து இன்புறுவார்களாக. இதன் விலை ரூபா 3.

---

**ஆனந்தபோதினி ஆபீஸ்,** தபால் பெட்டி நெ. 167, சென்னை

# அம்பாலிகை

அல்லது

## அதிசய மரணம்

அறிவைப் புகட்டும் ஓர் அருமையான துப்பறியும் நாவல் இதுவே. இதில் கொலைகளவுக் கஞ்சாப் பாதகனான கருப்பண்ணன் என்பவன் தந்திர சாமர்த்தியமாய் அம்பாலிகை யென்னும் தன் உறவினளை அவள் ஆஸ்திக்காக மணம் புரியக்கருதி, அவளை இறந்தவள் போல யாவரும் நம்பும்படியான சூழ்ச்சிசெய்து, ஏற்கனவே அவளுக்குச் சகோதரன் முறையும் அவளால் காதலிக்கப்பட்டவனுமான மனோகரன் என்பவன் மேல் குற்றஞ்சுமத்தி, குற்றஞ் செய்தவனைக் கண்டுபிடிக்க தவறுதலாய், பல கொலை களவுகளைக் கண்டுபிடித்தும், ரசாயன சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றவனும், மகா வீரதீர சிங்கமும், ஆபத்துகளை அணுவளவும் மதிக்காது நேர்முகமாக எதிர்த்து வெற்றிமாலை சூடுபவனுமாகிய துப்பறியும் ஆனந்த சிங்கை ஏற்படுத்துவதும், கடைசியில் ஆனந்தனின் உண்மையான குற்றவாளியை அதாவது கருப்பண்ணனையே, பலவித தந்திர சாமர்த்தியங்களால் கண்டு பிடிப்பதும், அம்பாலிகையை உயிருடனேயே மீட்பதும், தவறுதலாக அம்பாலிகையால் கருதப்பட்ட மனோகரன் கடைசியில் அவளை மணம் செய்துகொண்டு இன்புற்று வாழ்வதும், கருப்பண்ணன் தான் செய்த குற்றங்களுக்காக தேசாந்தரம் போய்விடுவதும் துப்பறியும் ஆனந்தன் வெற்றிமாலை சூடி தான் அமிர்தம்மாள் என்னும் கன்னிகையை மணஞ் செய்துகொண்டு மேலும் பிரக்யாதி அடைவதும் படிக்கப் படிக்க மிகவும் அறிவை வளர்க்கும் என்பது நிச்சயம்.

இதன் விலை அணா 12.

## இதர ஆக்ட் புஸ்தகங்கள்

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| இந்தியன் பினல் கோட் சட்டம் | 3 | 0 | பஞ்சாயத்துச் சட்டம் | 1 | [illegible] |
| கிரிமினல் லா | 3 | 0 | இந்துதேச சாட்சி ஆக்ட் | 1 | [illegible] |
| சிவில் லா | 3 | 0 | தேவஸ்தான சட்டம் | 1 | [illegible] |
| புது விவகார சிந்தாமணி | 2 | 8 | எஸ்டேட் லாண்டு ஆக்ட் | 1 | [illegible] |
| புது பெரிய ஹிந்து லா | 2 | 0 | ஸ்டாம்பு ஆக்ட் | 0 | [illegible] |
| முகம்மதியன் லா | 2 | 0 | ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் | 0 | [illegible] |
| கிராம முன்சீப் சட்டம் | 1 | 8 | டிரஸ்டிகள் சட்டம் | 0 | [illegible] |
| பரம்பரை கிராம உத்தி யோகஸ்தர்கள் சட்டம் | 1 | 0 | கால நிர்ணயச் சட்டம் | 0 | 8 |
| இன்கம் டாக்ஸ் சட்டம் | 1 | 0 | நில ஆக்கிரமிப்பு என்குரோச் மெண்ட் சட்டம் | 0 | [illegible] |
| லோகல்போர்ட் ஆக்ட் | 2 | 0 | கிராமச் சுகாதாரம் | 0 | [illegible] |

**ஜனகநந்தனி** இன்பம் நிறைந்த நீதி பொக்கிஷம். அறிவை வளர்க்கும் அரும் புதையல் இதுவே. எளிய நடையில் எழுதப்பட்டதால் யாவரும் வாசிக்கத்தக்கது. விலை ரூபா 1.

**ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.**

புதிய பதிப்பு : நல்ல தருணம்!!

வெளிவந்து விட்டது!!!

போட்டிப் பந்தயங்களின் விடைகளுக்காகப் பல அகராதிகளைப் பார்த்து ஏமாற்றமடைந்தவர்களின் கவலையை நீக்குவது எது?

# “ஜூபிலி” தமிழ்ப் பேரகராதி

## ஒன்றேதான்!



இனி நீங்கள் போட்டிப் பந்தயங்களுக்கு கவலையின்றி தக்க விடைகளை அதி சுலபமாகத் தெரிந்து விடையளிக்கலாம்.

மேலும் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத கருவி நூல்களுள் முக்கியமானதும், கல்வி பயிலும் மாணவர்களுக்கும், வர்த்தக சாலைகளில் தக்க பதங்களை உபயோகித்து விளம்பரம் செய்வதற்கும் இது ஒரு அரிய பொக்கிஷம் போன்றது.

ராயல் 1 × 8 பெரிய அளவில் 1400 பக்கங்கள் கொண்டது. உயர்ந்த ஜேனேஸ் கடிதத்தில் ரெக்ஸின் தங்க கில்ட் பைண்டு செய்யப்பெற்றது.

சுதேசமித்திரன், ஹிந்து முதலிய பிரபல பத்திரிகைகளின் மதிப்புரை பெற்றதும், அரிய வித்வான்களின் சிறப்புப் பாயிரத்துடனும் விளங்குவது.

குறிப்பு:—இதுவரையில் வெளிவந்துள்ள எல்லா அகராதிகளைக் காட்டிலும் இது மிக்க சிறப்புடையதென நாங்கள் கூறுவது மிகையாகாது. இதன் விலை ரூ. 10. தபால் செலவு ரூ. 1-8-0.

1935ளு செப்டம்பர்மீ 30உக்குள் வாங்குபவர்களுக்கு தபால் செலவு உள்பட ரூ. 8-க்கே அனுப்பப்படும். நல்ல தருணத்தைக் கைவிடாதீர்கள். V. P. யில் ஆர்டர் செய்பவர்கள் ரூபா 2 முன்பணம் அனுப்பவேண்டும்.

சிங்கப்பூர், பினாங்கு, நெடால், மோரீஸ் முதலிய அயல் நாடுகளுக்கு தபால் செலவு உள்பட ரூபா 10-க்கு அனுப்பப்படும். இவர்கள் முழு தொகையையும் மணியார்டர் மூலம் செலுத்தி பெற்றுக்கொள்ளவேண்டும்.

**ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.**

ராவ்பஹதூர்

## ப. சம்பந்த முதலியார், பி. ஏ., பி. எல்.,

அவர்கள் இயற்றிய தமிழ் நாடகங்கள் முதலியன:—

| | ரூ. | அ. | | ரூ | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| அமலாதித்யன் | 1 | 8 | சாரங்கதரன் | 0 | 12 | சர்ஜன் ஜெனரல் | | |
| பிராம்மணனும்- | | | நாடகத் தமிழ் | 0 | 12 | விதித்த மருந்து, | | |
| ருத்திரனும் | 1 | 8 | பொன் விலங்குகள் | 0 | 10 | விச்சுவின் மனைவி | 0 | 8 |
| சிம்ஹனாதன் | 1 | 4 | நோக்கத்தின் குறி | | | சிறுத்தொண்டர் | 0 | 8 |
| மனோஹரன் | 1 | 4 | ப்பு & இரண்டு | | | ரஜபுத்திர வீரன் | 0 | 8 |
| வாணீபுரவணிகன் | 1 | 0 | ஆத்மாக்கள் | 0 | 10 | நற்குல தெய்வம் | 0 | 8 |
| மகபதி | 1 | 0 | வேதாள உலகம் | 0 | 10 | கீதமஞ்சரி | 0 | 8 |
| விரும்பியவிதமே | 1 | 0 | மார்க்கண்டேயர் | 0 | 10 | சந்திரஹரி | 0 | 8 |
| புத்த அவதாரம் | 1 | 0 | விக்கிரமோர்வசி | 0 | 10 | சபாபதி 1-ம் பாகம் | 0 | 8 |
| ஹரிச்சந்திரன் | 1 | 0 | காலவரிஷி | 0 | 10 | பொங்கல் பண்டி | | |
| இரண்டு நண்பர்கள் | 1 | 0 | யயாதி | 0 | 10 | கை-சபாபதி | | |
| விஜயரங்கம் | 1 | 0 | முற்பகற் செய்யின் | | | 2-ம் பாகம் | 0 | 8 |
| சத்ருஜித் | 1 | 0 | பிற்பகல் விளையும் | 0 | 10 | ஓர் ஒத்திகை-சபா | | |
| உண்மையான | | | கண்டு பிடித்தல் | | | பதி 3-ம் பாகம் | 0 | 8 |
| சகோதரன் | 1 | 0 | கோனேரி அரச | | | மனைவியால் மீண் | | |
| நாடகமேடை நினை | | | குமாரன் | 0 | 10 | டவன் | 0 | 8 |
| வுகள் 1-ம் பாகம் | 1 | 0 | சர்தையிற் கூட் | | | சஹதேவன் சூழ்ச்சி | 0 | 8 |
| ஷை 2-ம் பாகம் | 1 | 0 | டம் | | | கொடையாளி கர் | | |
| ரத்னாவளி | 1 | 0 | பேயல்ல பெண் | | | ணன் | 0 | 8 |
| லீலாவதி-சுலோ | | | மணியே | 0 | 10 | இடைச்சுவர் இரு | | |
| சனா | 1 | 0 | ஊர்வசியின் சாபம் | 0 | 10 | புறமும் & என்ன | | |
| கள்வர் தலைவன் | 0 | 14 | சகுந்தலை | 0 | 10 | சோர்திடினும் | 0 | 8 |
| காதலர் கண்கள் | 0 | 14 | காளப்பன் கள்ளத் | | | விபரீதமான முடிவு | | |
| சுந்தரி அல்லது | | | தனம் | 0 | 10 | & சுல்தான் பேட் | | |
| மெய்க்காதல் | 0 | 12 | மானவிகாக்னிமி | | | டை சப் அசிஸ் | | |
| புஷ்பவல்லி | 0 | 12 | மித்ரம் | 0 | 10 | டெண்ட் மாஜிஸ் | | |
| வள்ளி மணம் | 0 | 12 | உத்தம பத்தினி | 0 | 10 | டிரேட் | 0 | 8 |
| தாசிப்பெண் | 0 | 12 | குறமகன் & வைகு | | | சபாபதி 4-ம் பாகம் | | |
| சுபத்திரா- | | | ண்ட வைத்தியர் | 0 | 10 | -ஆங்கிலமும் தமி | | |
| அர்ஜுனா | 0 | 12 | சதி-சுலோசனா | 0 | 10 | ழும் | 0 | 4 |

## காதலி ? ஒரு இனிய அருமையான தமிழ் நாவல்.

இதில் நவீன நாகரிகம், காதலின் வெற்றி, 'அவனன்றி ஓரணுவும் அசையாது', 'விதியின் வலி' என்னும் பல உயரிய நீதிகள் செல்வர்களின் ஆடம்பர வாழ்க்கை, சீர்திருத்தத்தின் சீர்கேடு ஆகிய பல அரிய அறிவைப் புகட்டும் அதியற்புத விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

இதன் விலை அணா 10.

ஆனந்தபோதினி ஆபீஸ், சென்னை.

# தத்வசங்க்ரஹ ராமாயணம்

இரண்டாம் பதிப்பு.

இது சமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட அருமையான நூல். இதனை ஒரு முறை படிப்பவர்கள் இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்விற்குரிய சாதனங்களை யுணர்ந்து மக்களாய்ப் பிறந்த நாம் அனுஷ்டிக்கவேண்டிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு பகவானுடைய திருவருட் குரியவராக விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இந்த கிரந்தம் துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலன நிமித்தம் உலகத்தில் வந்து அவதரித்த விளங்கியவந்தனுக வினங்கி தசரத பூபதிக்கு ஸ்ரீ ராமனாக அவதரித்த ஜகத் பிரபுவின் குண நிசயங்களைப் பற்றிப் பேசுவது.

ஸ்ரீ ராமாவதாரத்தின் உண்மை இதனைப் படிப்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். இதனைப் படித்தால் அநேக ஞான நூல்களைப் படித்த பயனை ஒருங்கே யடைதல் கூடும். ஸ்ரீராம பூஜா விதிகளும் அர்ச்சனைகளும் இதன்கண் விவரிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் வெளியான ராமாயணங்களைவிட மும்மடங்கு மேலான தத்வ உபதேசங்கள் இதன்கண் காணலாம்.



உபாஸகர்களுக்கு வேண்டிய பல அரிய விஷயங்களுடன் கூடியது. ஸ்ரீ ராம சரிதையை வாசிப்பதே இகபர நன்மை பயக்குமென்பர் பெரியோர். இதில் எண்ணிறந்த மிக்க அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

இதன் விலை ரூபா 4.

## ஸ்ரீமத் கம்பராமாயண வசன சங்கிரகம்

(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

(நான்காம் பதிப்பு) இதன் விலை ரூபா 2.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது. மிக்க திருத்தங்களோடு சீமோல் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

சொற்ப காப்பிகளே அச்சிடப் படுகின்றன. ஆதலின் புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக் கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாகும் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைகூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை யடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்ஷ்மி கடாக்ஷமுண்டாகும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.